1101
09.01.08

வெளியீடு : 30-8-2007 Issued : 30-8-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயல்க வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 5, 2007—தொகுதி 25—எண் 2**

**Thursday the 5th April, 2007—Volume 25—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

53-9

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2 9
சென்னை-600 008
எழும்பூர்

5-4-2007

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 291-292 |
| (ஆ) தூத்துக்குடி மாவட்டம், உபரி ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கி | 292 |
| (இ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைதானது | 292-293 |
| (ஈ) நீலகிரி மாவட்டம், விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல் | 303-304 |
| **2. அறிவிப்புகள்—** | |
| (அ) கவன ஈர்ப்புகள்—அவையில் எடுத்துக் கொள்வது | 294 |
| (ஆ) சிறுபான்மையினரான கிறிஸ்துவர் மற்றும் முஸ்லிம்களுக்கான தனி இட ஒதுக்கீடு குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றியும், பாராட்டும் | 406 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) ஆலங்குடி தொகுதி, மின்னழுத்த ஏற்றத்தாழ்வால் விவசாயம் பாதிப்பு | 294-296 |
| (ஆ) வள்ளியூர், அரசு மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்தல் | 297-303 |

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
(ஆ) கோரிக்கை எண் 11–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)
(இ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) — 304-480

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 305,330,370,401, 457-461, 469-478 |
| மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 354,370-371,383, 451-457 |
| *திரு. செ.ம. வேலுசாமி | 371-375,378-383 |
| *திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான் | 382,384-389,396 |
| திரு. எச். வசந்தகுமார் | 398-406 |
| *திரு. வை. காவேரி | 407-413 |
| செல்வி கே. பாலபாரதி | 413-420,421 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 421-427 |
| *திரு. அ. சௌந்திரபாண்டியன் | 428-433 |
| *திரு. கு. ஹசன் அலி | 433-441 |
| திரு. பெ. மோகன் | 441-446 |
| திரு. வீர. இளவரசன் | 447-451 |

5. அரசினர் தீர்மானம்—

உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன் மற்றும் சி.வி. சண்முகம் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் — 468

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 22, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 5, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்*
*கருதி இடத்தாற் செயின்"*

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

### 1. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் இரத்தினகிரி கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு வங்கதேசத்தினுடைய தீவிரவாதிகள் அங்கே ஊடுருவியிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இரண்டுபேர் ஜெலட்டின் குச்சிகளோடு

கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக தங்களிடம் நான் ஏற்கெனவே சட்டப் பேரவை விதி 56-ன்படி கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Next.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன்படி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அது ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. வே. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் 489 சாயப்பட்டறைகளைச் சேர்ந்தவர்கள் 2-ஆம் தேதி முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, சொல்லுங்கள்.

### (ஆ) தூத்துக்குடி மாவட்டம், உபரி ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 190-க்கும் மேற்பட்ட உபரி ஆசிரியர்களுக்கு ஒன்பது மாதமாக உபரி ஆசிரியர் என்ற காரணத்தால் சம்பளம் வழங்கப்படவில்லை; போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம், பதற்ற நிலை இருக்கிறது. அதைக் கொஞ்சம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

### (இ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட [illegible]விரதம் இருந்தவர்கள் கைதானது

**திரு. ஜி.கே. மணி:** [illegible]ரியில், இலட்சியக் குடும்பங்கள் என்று சொல்லி சாகும்வரை உண்ண[illegible]விரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம்

227654
சென்னை-600 0[illegible]



இருந்ததாலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், வழக்கு என்னவென்று சொன்னால்--ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்--நாங்கள் வேண்டாம் என்று சொன்னோம். நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் உண்ணாவிரதம் வேண்டாம்; முதலமைச்சர் அதற்கு அறிவிப்பு செய்திருக்கிறார்கள்; உண்ணாவிரதம் வேண்டாம் என்று சொன்னோம். மீறியும் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது மருத்துவமனைக்குப் போயும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால் வழக்கு என்னவென்று சொன்னால்--அவர்கள் கடப்பாரை போன்ற ஆயுதங்கள் எல்லாம் எடுத்துக் கொண்டுபோய் பாலத்தில் வெடி வைத்தார்கள், (மணியடிக்கப்பெற்றது) வெடி வைத்து தகர்க்கப் போனார்கள் என்று அவதூறு வழக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சனையில் ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் இந்த அவையிலேயே, 'ஜப்பான் நாட்டின் உறுதுணையோடு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்' என்றும் சொன்னார். அப்படி ஜப்பான் நாட்டு உதவி கிடைக்கவில்லையென்று சொன்னால், தமிழ்நாடு அரசாங்கமே நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும் என்று சொன்னார். ஆனால், அதையும் மீறி, வேண்டுமென்றே தினந்தோறும் காலையிலே போய் உண்ணாவிரதம் இருப்பது, அவர்களைக் கைது செய்து பிறகு வெளியே கொண்டுபோய் விட்டால் மறுபடியும் மறுநாள் வந்து அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தினால்தான் 12 பேரிலே 3 பேர் மருத்துவமனையிலே இருக்கிறவர்களைத் தவிர, மீதி 9 பேரை 15 நாள் ரிமாண்ட் செய்திருக்கிறார்கள். இந்தப் போராட்டங்கள் தேவையில்லாமல் நடக்கின்ற சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி போன்றவர்கள் அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, அதைத் தடுக்க வேண்டும். இந்த அவையைப் பொறுத்தவரையிலே, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் நிச்சயமாக அமல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து மக்கள் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காகப் போராடுவது முறையல்ல.

D
V21'1,31'.P07
D07.25.2

## 2. அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்புகள்–அவையில் எடுத்துக்கொள்வது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு அறிக்கைகளுக்கெல்லாம் இப்போதுதான் பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு இரண்டு, இரண்டுவிதமாக எடுக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) துறைகளிடமிருந்து பதில்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. அதனால், பதில்கள் வர வர நாம் எடுக்கலாம். (குறுக்கீடுகள்) அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) என்னிடம் சொல்லுங்கள், என்ன? அமைச்சர் தயாராக இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ஆலங்குடி தொகுதி, மின்னழுத்த ஏற்றத்தாழ்வால் விவசாயம் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். இராசசேகரன் அவர்கள். (குறுக்கீடுகள்)

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் மின்னழுத்த ஏற்றத்தாழ்வால் மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைவதால் விவசாயம் பாதிப்பது" குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



### அறிக்கை

புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட ஆலங்குடி தொகுதியானது பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் கொண்ட பகுதியாகும். இந்தப் பகுதியில் விவசாயத்திற்குப் போதிய நீர் வளம் இல்லாததாலும், நிலத்தடி நீர் மட்டம் சுமார் 500 அடிக்குக் கீழே சென்று விட்டபடியாலும், பெரும்பான்மையான விவசாயிகள் மிக ஆழத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, அவற்றிலிருந்து அதிகத் திறனுடைய மின் மோட்டார்மூலமாகத் தண்ணீரை வெளியேற்றி விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மின் மோட்டார்களுக்கு அதிக மின் சக்தி தேவைப்படுவதால், அப்பகுதியில் உள்ள மின்மாற்றிகள் அடிக்கடி பழுதாகும் நிலை ஏற்படுகிறது. எனவே, இக்குறையினைச் சரிசெய்திட, 2006-2007 ஆம் நிதியாண்டில் ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 66 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டும், 26 மின்மாற்றிகள் திறன் உயர்த்தப்பட்டு இயக்கி வைக்கப்பட்டும். மேலும் புதியதாக 37 மின்மாற்றிகள் அமைப்பதற்கும், 40 மின்மாற்றிகள் திறனை உயர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதைத்தவிர, ஆலங்குடி தொகுதியில் மின் அழுத்தத்தை மேம்படுத்த, நெடுவாசல் கிராமத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டு, மின் நிலையம் நிறுவும் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. விரைவில் இந்த மின் நிலையத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

*முற்பகல் 9-35*

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கிணறுகள் ஆழமாக இருப்பதன் காரணமாக 500 அடிக்குக் கீழே சென்று தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கின்றது. அந்தத் தண்ணீரை எடுப்பதற்கு அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே, இப்படி மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால், மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைகின்றன என்று சொல்லி, அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக புதியதாக 66 மின்மாற்றிகள் அமைக்கப்படும் என்றும், 26 மின்மாற்றிகள் திறன்

உயர்த்தப்பட்டு இயக்கி வைக்கப்படும் என்றும், புதியதாக 37 மின்மாற்றிகள் அமைப்பதற்கும், 40 மின்மாற்றிகள் திறனை உயர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன என்றும், இன்னும் நெடுவாசல் கிராமத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்பட இருக்கின்றது என்ற விவரத்தையும் சொல்லியிருக்கின்றீர்கள். இவையெல்லாம் சரிதான். இருந்தாலும், அந்தப் பகுதி மட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை அதைப்போல ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி மின்சார இடர்பாடுகள் ஏற்படுகின்றன. ஒரு மின்மாற்றி கெட்டுவிட்டால் சரி செய்வதற்கு 20 நாட்கள் ஆகின்றன. ஆகவே, 20 நாட்களுக்கு அங்கே விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதற்கு நிரந்தரத் தீர்வாக அமைச்சர் அவர்கள் மேலும் சில இடங்களில், திருவரங்குளம் போன்ற பகுதிகளில் 100 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியிலே மின்மாற்றிகள் நிறைய பொருத்தப்பட வேண்டியிருக்கின்றன. ஏற்கெனவே, நான் அவையிலே குறிப்பிட்டதைப்போல 3,000 மின்மாற்றிகளை அண்ணா பிறந்த நாளுக்குள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். உங்கள் மாவட்டத்திலே மட்டும், 200 மின்மாற்றிகள் உடனடியாக அமைத்தால்தான் அந்தப் பிரச்சினை தீரும். அதற்காக இந்த மாதத்திற்குள்ளாக 200 மின்மாற்றிகள் அமைத்து அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல நெடுவாசல் கிராமத்திலே 33/11 கே.வி. துணை மின்நிலையத்தை அமைக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இந்த ஐந்தாண்டு திட்டத்திலே 325 துணை மின் நிலையங்களை தமிழகம் முழுவதும் அமைக்க இருக்கின்றோம். அதைப் பரிசீலனை செய்து, எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.



## (ஆ) வள்ளியூர், அரசு மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்துவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. மு. அப்பாவு அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூரில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனையை மருத்துவ உபகரணங்களுடன் விரைவில் திறக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

வள்ளியூர் வட்டமில்லா அரசு மருத்துவமனை, முன்னர் ஆறு படுக்கை வசதியுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வந்தது. பின்னர், அரசாணை எண் 606, சுகாதாரம், நாள்: 12-11-1998-ன்படி தரமுயர்த்தப்பட்டு, வட்டமில்லா அரசு மருத்துவமனையாக (Non-Taluk Hospital) 1-2-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் பொது அறுவை அரங்கம், காசநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆய்வகம் ஆகிய சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் தினமொன்றுக்கு சராசரியாக 294 புறநோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். மாதமொன்றுக்கு 5 சிறிய அறுவை சிகிச்சைகளும் மற்றும் 3 சட்டரீதியான மருத்துவ சிகிச்சைகளும் (MLC) நடைபெற்று வருகின்றன.

அரசாணை (நிலை) எண் 283, சுகாதாரம், நாள்: 3-8-2001-ன்படி, இம்மருத்துவமனைக்கு மொத்தம் ரூ.71.89 இலட்சம் மதிப்பில், 10 படுக்கை வசதிகளுடன்கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, இக்கட்டடம் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 146, சுகாதாரம், நாள்: 8-7-2005-ன்படி, ரூ.30.60 இலட்சம் ஒதுக்கியதில், வள்ளியூர் மருத்துவமனைக்கு மட்டும் ரூ.15.30 இலட்சம் மதிப்பில் 12 படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது கட்டடப் பணிகள் முடிவடைந்து, 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய படுக்கை வசதிகளுடன்கூடிய கட்டடத்திற்குக் கீழ்க்கண்ட கூடுதல் பணியிடங்களை உருவாக்கக் கோரி, உரிய கருத்துரு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது:

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவி மருத்துவர் | 1 |
| 2 | செவிலியர் | 1 |
| 3 | உதவி செவிலியர் | 1 |
| 4 | மருத்துவமனைப் பணியாளர் | 1 |
| 5 | துப்புரவுப் பணியாளர் | 1 |

இம்மருத்துவமனையில் 2 உதவி மருத்துவர்களும், 1 செவிலியரும், 1 துணை செவிலியரும், 1 மருந்தாளுநரும், 1 மருத்துவமனைப் பணியாளரும் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசாணை எண் 4 (டி) 12, சுகாதாரம், நாள் 2-11-2006-ன்படி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககக் கட்டுப்பாட்டில் பல்வேறு மருத்துவமனைகளுக்கு ரூ.6.80 கோடி செலவில் தேவையான கட்டில்கள், படுக்கைகள், மெத்தைகள் மற்றும் அனைத்துத் துணி வகைகள் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் வழங்கிட





ஆணை பிறப்பிக்கப்பட்டதில், வள்ளியூர் அரசு மருத்துவமனைக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு கட்டில்கள், படுக்கைகள், மெத்தைகள் மற்றும் அனைத்துத் துணி வகைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன:

| | | |
|---|---|---|
| 1 | கட்டில்கள் | 22 எண்கள் |
| 2 | மெத்தைகள் | 22 எண்கள் |
| 3 | தலையணை உறைகள் | 66 எண்கள் |
| 4 | தலையணைகள் | 22 எண்கள் |
| 5 | பெட் சீட்டுகள் | 66 எண்கள் |
| 6 | போர்வைகள் | 66 எண்கள் |

இம்மருத்துவமனைக்கு, கீழ்க்குறிப்பிட்டுள்ள மருத்துவ உபகரணங்கள், ஒப்பளிக்கப்பட்டுள்ள மருத்துவ நிறுவனங்களிடமிருந்து 2007 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்திற்குள் பெற்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

| | | |
|---|---|---|
| 1 | பெட்ஸைடு லாக்கர் | 22 எண்கள் |
| 2 | சக்ஸன் அப்பாராடஸ் | 2 எண்கள் |
| 3 | பி.பி. அப்பாரடஸ் | 2 எண்கள் |
| 4 | சலைன் ஸ்டேண்டு | 22 எண்கள் |
| 5 | பெட் சைடு ஸ்கிரீன் | 22 எண்கள் |
| 6 | ஆட்டோகிளேவ் | 2 எண்கள் |
| 7 | பேசின் ஸ்டேண்டு | 2 எண்கள் |
| 8 | பெட் பேன் | 22 எண்கள் |
| 9 | டஸ்டு பின் டிராலி | 2 எண்கள் |
| 10 | எக்ஸாமினேசன் டிராலி | 2 எண்கள் |

| | | |
|---|---|---|
| 11 | ஸ்டிரெட்சர் டிராலி | 2 எண்கள் |
| 12 | வீல் சேர் | 2 எண்கள் |
| 13 | டிராலி | 2 எண்கள் |
| 14 | ஆம்பூ பேக் | 2 எண்கள் |
| 15 | ஈ சி ஜி மிஷின் | 1 எண் |
| 16 | டிரெஸ்ஸிங் பின் | 3 எண்கள் |
| 17 | ஆர்டெரி போர்செப்ஸ் | 10 எண்கள் |
| 18 | டிரெஸ்ஸிங் சிசர்ஸ் 5" | 5 எண்கள் |
| 19 | ஷேடோலெஸ் லேம்ப் | 1 எண் |
| 20 | டிரே எஸ்.எஸ். | 2 எண்கள் |
| 21 | ஆக்ஸிஜன் சிலிண்டர் 'ஏ' டைப் | 1 எண் |
| 22 | ஆக்ஸிஜன் சிலிண்டர் 'பி' டைப் | 1 எண் |
| 23 | ஆக்ஸிஜன் சிலிண்டர் ஸ்டேண்ட் | 2 எண்கள் |
| 24 | ஆபரேஷன் டேபிள் | 1 எண் |

இதைத்தவிர, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் சேவை வரையறைபடி, (Service Mix Norms) 4 ஆம் நிலை மருத்துவமனையான (30 படுக்கைகள்) வள்ளியூருக்கு சிறிய அறுவை சிகிச்சைகள் மட்டுமே மேற்கொள்ள அனைத்து உபகரணங்களும் பெற்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். தமிழ்நாட்டில் 1996-1998 ஆம் ஆண்டுகளில் தாலுகா தலைநகரங்களில்தான் அரசு மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டும் என்ற விதி இருந்தபோதும், திருநெல்வேலி



மற்றும் நாகர்கோவிலுக்கு இடையே வளர்ந்து வருகின்ற வள்ளியூரினுடைய நிலையை மனதிலே வைத்து அப்போது முதல்வராக இருந்த இப்போதைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, 12-11-1998 அன்று வள்ளியூரிலே அரசு பொது மருத்துவமனை அமைக்கின்ற சிறப்பு ஆணையைத் தந்தமைக்கு முதலில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த மருத்துவமனை 1-2-1999 முதல் வள்ளியூரிலே ஏற்கெனவே இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே இயங்கி வந்துகொண்டிருந்தது. அதன்பின்பு கடந்த ஐந்தாண்டு காலமாக அந்த மருத்துவமனை பெரிய அளவில் வேகமான வளர்ச்சி அடையவில்லை. அதே கட்டடத்தில்தான் இருந்து வந்தது. இப்போது கிட்டத்தட்ட 71,89,000 ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு பத்து படுக்கைகள் கொண்ட ஒரு கட்டடமும், 12 படுக்கைகள் கொண்ட ஒரு புதிய கட்டடம் 15,30,000 ரூபாய் செலவிலும் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு கட்டடங்களையும் திறந்து வைத்து அங்கே இருக்கின்ற அறுவை சிகிச்சை கட்டடத்தில் அதற்குரிய உபகரணங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டேன். நான் கேட்டது மட்டுமல்ல, நம்முடைய நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு வசந்தகுமார் அவர்களும் இதைக் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேட்பதை மட்டுமல்ல, கேட்காததையெல்லாம்கூடக் கொடுத்து, அந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்படுகின்ற அளவிற்கு, சிறப்பாக மிக அதிகமான உபகரணங்களைத் தந்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாளையதினம் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்க வருகைதர இருக்கின்றார்கள். அதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது, அந்த மருத்துவமனை அங்கே மிக அவசிய முக்கியத்துவம் வாய்ந்தது. ஏற்கெனவே அங்கே இரண்டு மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒருவர், தொண்டை, காது, மூக்கு பிரிவிலும்..... (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

V2:1,31 P07
P07.25.2
227654

**திரு. மு. அப்பாவு:** முடித்து விடுகிறேன். இன்னொருவர் குழந்தைகள் பிரிவிலும் இருக்கிறார்கள். ஆகவே, மேலும் மூன்று மருத்துவர்கள் அங்கு தேவை. அதேபோல, 6 செவிலியர்கள், உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் என்று, இன்னும் ஓரிரு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களையும் நிரப்புவதோடு, மிக முக்கியமாக சுற்றுச்சுவரும், பிரேதப் பரிசோதனை அறையும் அங்கு கட்டவேண்டும். ஆகவே, இவற்றிற்கும் உடனடியாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளையதினம் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் நம்முடைய திருநெல்வேலி மாவட்ட அமைச்சர், நம்முடைய சுற்றுச்சூழல் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் முன்னிலையில் தாங்கள் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்க வருகைதர இருக்கின்றீர்கள். அப்போதே, இந்தக் கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும், தருவீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு, வள்ளியூருக்குச் சென்றிருந்த நேரத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்த உடனேயே, அதற்கு வேண்டிய உத்தரவுகளையிட்டு, என்னென்ன equipments வேண்டுமோ, அவற்றையெல்லாம் உடனடியாக வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, முழுவதுமாக வழங்கப்பட்டுவிட்டன. நாளையதினம் மாலையில் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்க இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சென்றிருந்த சமயம் equipments இல்லாமல் இருந்தன. இல்லையென்றால், அன்றைக்கேகூட திறந்திருப்போம். அவர்கள் கேட்டது, கேட்காதது, எல்லாமே கொடுத்திருக்கிறோம். கொடுத்து, நாளையதினம் திறக்க இருக்கிறோம். அந்த மருத்துவமனையினுடைய முக்கியத்துவம் எங்களுக்குப் புரிந்திருக்கிறது. மெயின்ரோட்டிலே, திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் நடுவில் இந்த மருத்துவமனை



இருக்கிறது. ஆகவே, இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, எதிர்காலத்திலே சிறந்த அளவிற்குத் தரம் உயர்த்தக்கூடிய பணிகளை நிச்சயம் இந்த அரசாங்கம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) நீலகிரி மாவட்டம், விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கலைஞர் அவர்களுடைய அரசு, சமீபத்திலே பிறப்பித்த உத்தரவின்மூலம், தமிழகம் முழுவதும் இருக்கிற சாதாரண ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் அதற்கிருந்த சில தடைகள்கூட, தற்காலிகமாக நீக்கப்பட்டு, வீட்டுமனைப் பட்டாவும், அதேபோல, ஏழைகளுக்கு நிலம் வழங்குகிற இந்தச் சூழலில், நீலகிரி மாவட்டத்திலே, 1989 ஆம் ஆண்டும், அதேபோல, 1992 ஆம் ஆண்டும் இரண்டு சட்டங்கள் போடப்பட்டு, அந்த மலைப் பகுதியிலே, நீலகிரி மலையிலே வாழ்கிற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவோ, விவசாயிகளுக்கு நிலப் பட்டாவோ வழங்குவதற்கு இரண்டு தடைச் சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ஆகவே, தமிழகம் முழுவதும் விவசாயிகள் பட்டா பெறுகிறபோது, அங்கே ஒரு சென்ட் நிலத்திற்குக்கூட பட்டா வாங்க முடியாத நிலையில் அந்த விவசாயிகளும், மக்களும் இருக்கிறார்கள். இதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நேரில் எடுத்துச் சொல்லி, மனு அளித்தேன். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்து, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களும் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிகிறேன். ஆகவே, அதன்மீது அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுப்பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள், நீலகிரி மாவட்டத்திலே அரசு புறம்போக்கு நிலங்களிலே, வீடு கட்டி, பத்தாண்டுகளுக்கு மேலே குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கடந்த வாரம் கோரிக்கை வைத்தார்கள். அதேபோன்று, நீலகிரி மாவட்டத்ினுடைய அமைச்சரான, கதர்த் துறை அமைச்சரான மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்களும் முதல்வர் அவர்களைச் சந்தித்து, இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், துறையை அறிவுறுத்திய காரணத்தால், இந்தத் துறை முடிவெடுத்திருக்கின்றது. நீலகிரி மாவட்டத்திலே அரசு புறம்போக்கு நிலங்களிலே, பத்தாண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவிப்பதோடு, அதற்கான ஆணையையும் இந்த அரசு வழங்கிவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான (குறுக்கீடு) திரு. ஆர். சாமி, நீங்கள், உங்கள் உறுப்பினர் பேசும்பொழுது இந்தக் கருத்தைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் தயாராக இருக்கிறாரா? இல்லை, அமைச்சர் பதில் சொல்வதற்குத் தயாராக இருந்தால்தான் எடுக்கமுடியும்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**



### (அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 32,47,72,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 44, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 160, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 280, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1156, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1141, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 211, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2008, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2549, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2687, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1892, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2427, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9739, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2820, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3749, திரு. மு.க. பெரியசாமி.



**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3931, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4927, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4106, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 351, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் கூடுதலாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்காக விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 590, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 601, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவிலில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் கூடுதலாக மாணவர்கள் தங்குவதற்கு இட ஒதுக்கீடும், அதற்கான கூடுதல் கட்டடமும் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 721, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1730, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை விடுதி அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1063, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி பொறியியல் கல்லூரி அமைக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1272, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரில் பள்ளி மாணவர்களுக்கென புதிய விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1243, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி நடுமுதலைக்குளம், குப்பணம்பட்டி, அய்யனார்குளம் அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1331, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1697, திரு. கே.எஸ். விஜயகுமார்.



**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் தங்கும் விடுதி புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1748, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1601, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் விடுதிகளுக்குக் கூடுதல் இடங்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1412. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1519, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்துவரும் இஸ்லாமிய மக்களின் வறுமை, வாழ்க்கைத்தரம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 945, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளுக்கு மின் விளக்கு, மின் விசிறி, மேஜை, நாற்காலி, புதிய கட்டடங்கள் மாநிலம் முழுவதும் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1781, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில், பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மாணவ, மாணவிகள் தொழிற்கல்வி பெறுவதற்கு தொழிற்கல்வி நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 755, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுபான்மையினர் நலனுக்காக இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 801, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுபான்மையினர் நலனுக்காக இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கூமாப்பட்டி, வள்ளியம்பட்டி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 884, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1930, திரு. தி. வேல்முருகன்.



**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிக அளவில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9432, திருமதி மு. சந்திரா. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3292, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு சிறுபான்மையினர் நலத் துறைமூலம் மாணவ, மாணவியருக்கு விடுதிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3121, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கடலாடி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3161, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜேந்தர் சச்சார் பரிந்துரையின்படி தமிழகத்தில் இஸ்லாமிய சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2931, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் சமயசங்கலி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கு தொழிற்பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3387, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.



**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, ஆற்காடு கிராமத்தில் மேல்நிலைப் பள்ளிவரை இருப்பதால் அங்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2356, திரு. கேஎல். இளவழகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2609, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு வீடு இல்லாதவர்களுக்கு அரசு இடம் வாங்கி, அவர்களுக்கு நிலப் பட்டா வழங்கி, வீடு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2646, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் உள்ள அனைத்து சலவை மற்றும் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் துணி தேய்க்கும் கருவி, முடி திருத்தும் கருவி ஆகியவை இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு இலவசக் கல்வி வழங்க அரசு முன் வந்ததைப்போல சுய நிதிக் கல்லூரியில் பயிலும் ஏழை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு இலவசக் கல்வி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,47,72,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3324, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மேற்குத் தொகுதிக்குட்பட்ட ஏழையெளிய மக்களுக்கு இலவச தையல் இயந்திரம், இலவச சலவைப் பெட்டி வேண்டி பலமுறை விண்ணப்பித்தும் கிடைக்காததால் மன வேதனையுடன் இருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விரைவில் இலவச உதவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களை மீண்டும் அரசு திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,60,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *799*, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பதிவுத் துறையில் எழுத்தர்களாக வேலை பார்க்கும் ஒப்பந்தக்காரர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,60,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *427*, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் பத்திரப்பதிவின்போது ஒரே மாதிரியான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,60,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *600*, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் மேலநீலிதநல்லூரில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,60,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *364*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரில் உள்ள சார் பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,60,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.187,52,10,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 64, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 164, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 272, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 936, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1172, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1341, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1728, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11142, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 209, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2010, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2521, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2686, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1416, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4109, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5544, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1884, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2425, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9727, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2324, திரு. கே.எஸ். இளவழகன்.

**திரு. கே.எஸ். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2492, திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2810, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3519, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3743, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3954, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4911, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 359, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெல்லத்திற்கு விதிக்கப்படும் 4% வணிக வரியை முழுவதும் நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 590, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 591, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிப்புக் கூடுதல் வரி (VAT) நடைமுறைக்கு வந்தால் விலைகள் குறையும் என்று கூறப்பட்டது. அதன் உண்மைத் தன்மை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 885, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அதிக அளவில் லாரித் தொழில் செய்கின்ற டயர் ரீ-டிரெட்டிங் செய்கின்ற ரீ-டிரெடர்ஸ் மற்றும் மாநிலங்களில் 4 சதவீதம் VAT-ல், டிரெட் ரப்பர் பெறுவதால், 12.5 சதவீதம் VAT வரி விதிப்பில் நமது மாநிலத்தில் தொழில் நலிவடைந்து வருகின்றது. அதனை 4 சதவீதம் VAT-ஆக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1218, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள நகைக் கடைகள் மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து நகைக் கடைகளிலும் வசூல் செய்யப்படும் வரித் தொகையைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1745, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வணிக வரி அலுவலகக் கட்டடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1517, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலைப் பருப்பால் செய்யப்படும் மிட்டாய் ரகங்களுக்கு, வரி விலக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1538, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, வீடு கட்டத் தேவையான சிமெண்ட், செங்கல், மணல், கருங்கல், ஜல்லி போன்றவற்றின்மீது விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்து செய்யவோ, குறைக்கவோ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1779, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணியில் வணிக வரித் துறைக்குச் சொந்தமாக அரசுக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2083, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள வணிக வரி அலுவலகத்திற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2291, திரு. சு. குணசேகரன்.



**திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "VAT" பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2116, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மகளிர் குழுக்களின்மூலம் தயார் செய்யப்படும் பொருட்களுக்கு வரி விதிப்பதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1955, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றிற்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1701, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரோல் வழங்கப்படுவது போன்று

விவசாயிகளுக்கும் பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வரி விலக்குடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2449, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதியதாக அமல் செய்யப்பட்டுள்ள VAT வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3347, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அத்தியாவசியமான பொருட்களுக்கான வரியினை முற்றிலும் ரத்து செய்வது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4851, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4644, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து வணிக வரிச் சோதனைச் சாவடிகளிலும் வீடியோ கேமரா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4730, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் வணிக வரி அலுவலகம் தனியார் கட்டடத்தில் நீண்ட நாட்களாக இயங்கி வருகின்றது. இந்த நிதி ஆண்டில் புதிய வணிக வரி அலுவலகம் பொன்னேரியில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3291, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதியில் பல்வேறு தொழில்கள், நிறுவனங்கள் உள்ளதால் எளிதில் வணிக வரி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4412, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1149, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் உள்ள திரையரங்குகளில் அரசு நிர்ணயம் செய்துள்ளதைவிட அதிகமாகக் கட்டணம் வசூலிப்பதுடன் வரி ஏய்ப்புச் செய்வதையும் தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4560, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு தொழில்கள் செய்வோருக்கு வரி விலக்குச் சலுகை ரூ. 5 இலட்சம் என்று இருப்பதை ரூ.10 இலட்சமாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4204, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள வணிக வரி அலுவலகத்தில் உரிமம் பெற, வைப்பு நிதி செலுத்துதல் ஆகியவற்றில் முறைகேடு நடப்பதால், அவற்றைக் களைந்து முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3160, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் வாங்குகின்ற உரம், பூச்சி மருந்து மற்றும் இதரப் பொருட்கள் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3238, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் சிறப்புத் தொழில் மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3547, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து விவசாய விளைபொருள்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4306, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் விளையும் மரவள்ளிக் கிழங்குக்கு வரி விலக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3696, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள வணிக வரித் துறை அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4063, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் வணிக வரித் துறை அதிகாரிகளை அதிக அளவில் நியமித்து வணிக வரி மோசடி நபர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4036, திருமதி பி. பத்மாவதி.



**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாட் வரி அமல்படுத்தியதால் மருந்து விலையில் ஏற்பட்டுள்ள ஏற்றம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3897, முனைவர் கு. ஜெயக்குமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2988, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்நாட்டில் தயாராகும் செல்போன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3083, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரித் துறையில் பெரிய வியாபாரிகள் வரி ஏய்ப்புச் செய்வதைத் தடுப்பது குறித்தும், சிறிய வியாபாரிகள் பாதிப்பு அடைவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3158, திரு. என் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கட்கு நல வாரியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.187,52,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே

@ 483 முதல் 534 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.



கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள். 20 நிமிடங்கள் பேசுங்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைக்குரிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் மக்களாட்சி நடத்தி மனிதப் புனிதர் என்றும், தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசாக, 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற உணர்வோடு, தமிழக மக்களுக்காகப் பாடுபட்டு மறைந்த மாமனிதர்களுடைய வழித் தோன்றலாக, தமிழக மக்களுக்கும், இந்திய நாட்டினுடைய இறையாண்மையைப் போற்றும் வகையிலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், எடுத்த கருத்தைத் துணிந்துகூறி தமிழ் மக்களுக்காக நித்தம் பாடுபடும் எங்கள் கழகத்தின் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருமைக்குரிய பேரவையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு மற்றும் வணிக வரிகள் குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாநில மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பெருக்குவதற்கு, அரசுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் முதன்மையாக விளங்குவது வணிக வரித் துறை. மொத்த வருவாயில் 70 சதவிகிதத்தை இந்த அரசுக்குப் பெற்றுத் தருவது வணிக வரித் துறையாகும். அதேபோன்று, இந்த அரசுக்கு வருமானத்தைப் பெற்றுத் தருவதில் மூன்றாவது இடத்தில் இருப்பது பத்திரப்பதிவுத் துறையாகும்.

@@ 535 முதல் 563 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்த அரசு, வரி இல்லாத பட்ஜெட் என்று கூறிக்கொண்டிருக்கிறது. நான் மெத்தப் பணிவோடு சொல்வதெல்லாம், இன்று வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்கிற நேரத்தில், இதே அரசு 2001-லே ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து விலகும்போது, இந்த அரசினுடைய நிதிநிலைமை எப்படி இருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். உலக வங்கி, ஆசிய வங்கி போன்ற வங்கிகள் கடன் கொடுக்க மறுத்தது மட்டுமல்லாமல், தமிழக அரசை black list-லே சேர்த்து விடுவோம் என்று கூறுகின்ற அளவுக்கு நிதிநிலைமை மோசமாக இருந்த நிலையில் ஆட்சியை விட்டுச் சென்றதுதான் இந்த அரசு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

இத்தகைய நிலையில் மூன்று ஆண்டுகள் கடுமையான வறட்சி. இன்னொரு பக்கம் வெள்ளம். இன்னொரு பக்கம் எதிர்பாராத சுனாமி. இவற்றையெல்லாம் சந்தித்து, வறட்சியான நேரத்திலும், இயற்கைச் சீற்றமான நேரத்திலும், கஜானா காலியாக இருந்த நேரத்திலும்கூட, மூன்றாண்டு காலமாக வரியே போடாமல், வணிக வரித் துறையில் நிருவாகத்தை திறமையாக நடத்தி, ஆட்சி செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் வரியே போடாமல் ஆட்சி நடத்தியபோது, 8,664 கோடி ரூபாய் 2001-ல் வணிக வரித் துறையில் வசூல். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 2006 ஆம் ஆண்டு வருகின்றபோது, 14,616 கோடி ரூபாய் வருவாய் நிலுவையில் இருந்தது என்பதையும், முறையாக வணிக வரித் துறையில் சீர்திருத்த நடவடிக்கை எடுத்ததன்மூலம் இன்று 17 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் வரக் காரணமாக இருந்து சிறப்பான நிருவாகத் திறமையைச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்பிற்குரிய சகோதரர்களே, இன்று இந்த அவையில் மதிப்புக் கூட்டு வரியை நீங்கள் கொண்டு வந்தீர்கள். மதிப்புக் கூட்டு வரியை நீங்கள் கொண்டு வந்தபோது, தமிழக மக்களுக்கு என்ன கூறினீர்கள்? தமிழக ஏழை மக்களை இது பாதிக்காது; விலைவாசி ஏறாது; வியாபாரிகளைப் பாதிக்காது என்று கூறினீர்கள். இப்போது இயற்கைச் சீற்றமில்லை; வறட்சி இல்லை; சுனாமி இல்லை; வெள்ளம்



இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதியை வளமாக விட்டுச் சென்றதற்குப் பின்னர், நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர், இன்று மதிப்புக் கூட்டு வரியைப் போட்டதற்குப் பின்னர், விலை குறையும் என்று கூறினீர்கள். ஆனால், மருந்துகளின் விலையைப் பார்த்தோமானால், இன்று மதிப்புக் கூட்டு வரி போடுவதற்கு முன்னர் என்ன விலை இருந்ததோ, அதைவிட அதிகமாகத்தான் இன்று இருக்கிறது. அதேபோன்று விலைவாசியைப் பார்த்தோமானால், அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்று சிமெண்ட் விலையும் மலைபோல் ஏறிக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், உயிர்காக்கும் மருந்துகளுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அப்போது நிதிப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, விதிவிலக்கு அளித்து, வரிக் குறைப்பு செய்த ஆட்சி, அம்மாவினுடைய ஆட்சி. ஆனால், இப்போது மதிப்புக் கூட்டு வரி போட்ட பின்னர், விலை குறையும் என்று கூறிய இந்த ஆட்சியில், நான் இங்கு ஆதாரத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். Zoryl என்ற மருந்து 17-8-2006-ல் 54 ரூபாய்க்கு இருந்தது, மார்ச் 7 ஆம் தேதியன்று 59 ரூபாயாக இருக்கிறது. அதேபோன்று தைராய்டு நோய்க்கு மருந்து, மார்ச்சில் 89 ரூபாயாக இருந்தது. மே 2006-ல் 94 ரூபாயாக இருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் மெத்தப் பணிவோடு சொல்கின்றேன், இன்று ஏழை மக்கள் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு, அரசு கூட்டுறவு அங்காடியில் நேற்றையதினம் பெற்ற புள்ளிவிவரத்தை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்புக் கூட்டு வரி இன்று எந்த அளவுக்கு மக்களைப் பாதித்திருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த ஆட்சியிலே மருந்தின் விலைகளெல்லாம் உயர்ந்திருக்கின்றன, அதற்குக் காரணம் நீங்கள் புதிதாக VAT வரியைப் போட்டிருக்கிறீர்கள் என்ற கருத்தைச் சொன்னார். அது உண்மையல்ல. VAT வரி, ஒவ்வொரு பொருளுக்கும் முன்பு 8 சதவிகிதம் இருந்தது. சிலவற்றுக்கு வரியை நீக்கியிருக்கிறோம். சிலவற்றுக்கு 10 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று இருந்ததை,

4 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். ஆக, வரியைக் குறைத்திருக்கிறோமே தவிர, அதிகமாகக் கூட்டவில்லை. ஆனால், இந்த விலையேற்றத்திற்கு என்ன காரணம் என்றால், இந்தியாவிலே மட்டுமல்ல, உலக அளவிலே அவர்கள் சொல்கின்ற காரணம், increasing of rates depends upon the raw material cost மூலப் பொருட்களின் விலை அகில உலகத்திலேயும், 10 ஆண்டுகளுக்கு முன்னால் எந்த அளவுக்கு இருந்ததோ, அதைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாகி இருக்கிற காரணத்தினாலே, இந்த மருந்துகளின் விலை உயர்ந்திருக்கிறதே தவிர, VAT வரி அறிமுகப்படுத்தியதால் இந்த விலைகள் ஏறவில்லை என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*முற்பகல் 10-10*

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் கூறுகின்றேன். அதை M.R.P. rate-ல் உயர்த்திவிட்டு இப்போது அதே விலையில்தான் தொடர்ந்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நானும் கூறுகின்றேன். அதுமட்டுமல்லாமல் பருப்பிற்கும், பயறுக்கும், அதேபோன்று எண்ணெய்க்கும் வரியைக் குறைப்பேன் என்று 12 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக இப்போது வரியைக் குறைத்தீர்கள். ஆனால், இப்போது பருப்பினுடைய விலை என்ன? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 18 ரூபாய்க்கு இருந்த கடலைப் பருப்பு நேற்றையதினம் காமதேனு சூப்பர் மார்க்கெட்டில் வாங்கியபோது 35 ரூபாய்; உளுத்தம் பருப்பு 25 ரூபாய்; இப்போது காமதேனுவில் 50 ரூபாய், நேற்றையதினம்; துவரம் பருப்பு 28 ரூபாய், அங்கு காமதேனுவில் 35 ரூபாய், பாசிப் பருப்பு அன்றையதினம் 26 ரூபாய், இன்றையதினம் 50 ரூபாய், மொச்சைப் பயறு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 20 ரூபாய், இப்போது 45 ரூபாய். அதேபோன்று, காராமணிப் பயறு 25 ரூபாய், இப்போது ஆட்சியில் 31 ரூபாய். நல்லெண்ணெய் 38 ரூபாய் அம்மா அவர்களுடைய ஆட்சியில், இன்றையதினம் 86 ரூபாய் 25 பைசா. அதேபோன்று, தேங்காய் எண்ணெய் 50 ரூபாய் அம்மா அவர்களுடைய ஆட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலைவாசி என்பது அவ்வப்போது ஏறுவது,



இறங்குவது என்பது இது முறையாக, வாடிக்கையாக இருக்கிற ஒன்றுதான். உற்பத்தி செய்து மார்க்கெட்டிற்கு வருகின்றபோது விலை கொஞ்சம் குறையும். உற்பத்தி நின்றவுடனே விலை ஏறிவிடும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, கணக்கு இருக்கிறது. 13-5-2006-ல், எதிர்க்கட்சித் தலைவருடைய, முன்னாள் முதலமைச்சருடைய ஆட்சியில் இருந்த விலை விவரத்தைச் சொன்னார்கள். 13-5-2006 அன்று மஞ்சள் விலை 50 ரூபாய். இப்போது 4-4-2007-ல் கலைஞருடைய ஆட்சியில் 40 ரூபாய். துவரம் பருப்பு 36 ரூபாய் அப்போது, ஆனால், இப்போது துவரம் பருப்பு விலை, மக்கள் பயன்படுத்துவது (குறுக்கீடுகள்) நாங்களும் இராயப்பேட்டையில் இருக்கிற கடையில் போய் பருப்பு வாங்கி பில்லும் வாங்கி வந்தோம், தற்போது 34 ரூபாய்க்குக் கிடைக்கிறது. உளுத்தம் பருப்பினுடைய விலை அம்மையார் ஆட்சியிலே 54 ரூபாய். இப்போது 4-4-2007-லே உளுத்தம் பருப்பினுடைய விலை 43 ரூபாய். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். சத்தம் போடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பயத்தம் பருப்பின் விலை அம்மையாருடைய ஆட்சியில் 50 ரூபாய், இப்போது 44 ரூபாய். மைதாவினுடைய விலை அப்போது 21 ரூபாய், இப்போது 15 ரூபாய் 50 காசு. ரவையினுடைய விலை அப்போது 24 ரூபாய், இப்போது 16 ரூபாய். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மிளகாய் வத்தல் அம்மையாருடைய ஆட்சியில் 62 ரூபாய், இப்போது 50 ரூபாய். இதற்குக் கணக்கு இருக்கிறது; (குறுக்கீடுகள்) பில் இருக்கிறது. எனவே, இப்படி உங்களுடைய ஆட்சியிலே விலைவாசி ஏறி இருந்தது என்பது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு திரு. வேலுசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருக்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**திரு. செ.ம. வேலுசாமி:** இப்போது சொன்ன புள்ளிவிவரங்களுக்கு அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். (குறுக்கீடு) ஏற்கெனவே விலைவாசி உயர்ந்திருக்கிறது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தொழில்நுட்ப வல்லுநர்களை வைத்து வேளாண்மைத் துறையில் ஒரு பெரிய புரட்சியையே உருவாக்கியிருப்பதாக நேற்றைக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். ஆகவே, வேளாண்மைத் துறையில் இவ்வளவு உற்பத்தி செய்ததற்குப் பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருந்த விலைவாசியையும் இப்போது இருக்கின்ற விலைவாசியையும் சுட்டிக்காட்டுகிறபோது அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைத் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, மக்கள் மன்றத்தில் நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் நேரடியாக வந்து மக்கள் மன்றத்தைச் சந்திக்க தயாராக இருக்கிறீர்களா என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், மக்கள் மன்றத்தைச் சந்திக்கத் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டார். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நேற்றையதினம்கூட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்திருக்கின்ற காரணத்தால் அவற்றை அரசாங்கமே கொள்முதல் செய்து (குறுக்கீடுகள்) ரேஷன் கடைகள் மூலமாக வருகின்ற புத்தாண்டு தினத்தன்று முதல் கட்டமாக . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சென்னை நகரத்திலேயும், மே 1 ஆம் தேதியிலிருந்து தமிழகத்தில் மற்ற இடங்களிலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல இந்தப் பொருட்களின் விலை எல்லாம்



திமுக ஆட்சியிலே அதிகமாக விலை ஏறவில்லை என்பதை எந்த மக்கள் மன்றத்திலே சந்திக்க வேண்டும் என்று சொல்கிறாரோ, அதே மேடையிலே நாங்களும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி - குறுக்கீடு)

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர். என்ன, சொல்லுங்கள்?

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகின்றபொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்தியாவசியப் பொருட்களான பாமாயில், உளுத்தம் பருப்பு, மைதா போன்ற பொருட்கள் நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் என்ற அறிவிப்பினைச் செய்தார் என்று சொன்னார்கள். நான் இந்த அவையைப் பார்த்துக் கேட்கின்றேன். அந்தப் பொருட்களை எல்லாம் மானிய விலையில் கொடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களிலே பருப்பு வகைகளை உற்பத்தி செய்கின்றவர்கள் on-line வர்த்தகத்தின்மூலமாக அவர்கள் கையிருப்பு அதிகமாக வைத்துக் கொண்டு விலைவாசியை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். இதற்கிடையில் யார், யார் on-line வர்த்தகத்தின்மூலமாக இந்த உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்துகிறார்களோ அதைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் அரசாங்கமே எங்கே துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற பருப்பு வகைகள் உற்பத்தி ஆகின்றனவோ அங்கேயேபோய் கொள்முதல் செய்து நியாயமான விலையிலே, மார்க்கெட் விலையைவிடக் குறைவான விலையிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். 23 ஆம் தேதி நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் இதை எடுத்து

குறிப்பிட்டுக் காட்டுகிறார். ஆனால், நேற்றையதினமே 10, 12 நாட்களுக்குள்ளாக, ஓர் அரசு மற்ற மாநிலங்களிலே இருக்கக்கூடிய விலைவாசிகளை எல்லாம் வாங்கிப் பார்த்து அதைக் கட்டுப்படுத்துவதற்கு, குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நடவடிக்கையை வேகமாக எடுத்திருக்கிறாரே என்பதைப் பாராட்டுவதற்குப் பதிலாக அதிலே குறை காண விரும்புவது முறைதானா என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி. (குறுக்கீடு) நான் 20 நிமிடங்களுக்கு மேலே ஒரு நிமிடம்கூட தரமாட்டேன். பேசி முடியுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொறுப்புள்ள ஆட்சி நிர்வாகத்தை நடத்துபவர்கள் நான் எதிர்க்கட்சியிலிருந்து ஆதாரபூர்வமாக சில விவரங்களைக் கொடுத்துக் கேட்கிறேன். பொத்தாம் பொதுவாக ஓர் அமைச்சர், அந்தத் துறையைச் சேர்ந்த ஓர் அமைச்சர், நான் அவருடைய கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற ஆதாரங்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டு பேசுகிறேன். நீங்கள் oil விலையைக் குறைத்தீர்கள். பருப்புக்கு வரியைக் குறைத்தீர்கள். இதில் விலைவாசி உயர்ந்து இருக்கிறது. அதிகமாகி இருக்கிறது என்று கேள்வியைக் கேட்டால், எனக்கு இத்தனை இடையூறுகள் கொடுத்தால், நான் முன்னாள் அமைச்சராக இந்தத் துறையில் இருந்தவன்; ஆரோக்கியமான கருத்துகளைப் பரிமாறுவதற்காகத்தான் இந்த அவையே தவிர, தட்டிக் கழிப்பதற்கு, நீங்கள் திசை திருப்புவதற்காக இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல், பிற்படுத்தப்பட்டோர் இந்த மாநிலத்தில் 70 சதவிகிதம் இருக்கக்கூடிய மக்களுக்காக இருக்கக்கூடிய இந்தத் துறையைப் பற்றியும், அதேபோன்று இந்த மாநில அரசாங்கத்தினுடைய நிருவாகத்தை, ஆட்சியை நடத்தக்கூடிய அளவிற்கு, வருமானத்தில் முதல் இடத்தைப் பெறக்கூடிய வணிக வரித் துறையைப் பற்றியும், மூன்றாவது இடத்தை வருமானத்தில் பெறக்கூடிய பத்திரப்பதிவுத் துறையைப் பற்றியும் பேசுகின்றபொழுது நீங்கள் எனக்குக் கூடுதலான நேரத்தைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோன்று இன்று சிமெண்ட் விலை, மலைபோல ஏறி இருக்கிறது. சிமெண்டிற்கு 16 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக இன்று வரியைக் குறைத்திருக்கின்றோம். வரியைக் குறைத்ததற்குப் பின்னர் சிமெண்ட் விலை குறைந்திருக்கிறதா என்று சொன்னால் மதிப்புக் கூட்டு வரி குறைத்ததனால் விலை குறையவில்லை.

அதுமட்டுமல்ல, மத்திய அரசு இப்போது 190 ரூபாய் அதற்கு ஒரு நிலையை வைத்திருக்கின்ற அளவிற்கு இப்போது சிமெண்ட் விலை மலைபோல் ஏறி இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் இந்த சிமெண்ட் விலையை PPC, OPC-ஐ 135 ரூபாய், 145 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து அன்றையதினம் ஏழை மக்கள் பயன்பெறுகின்ற அளவிற்குக் கொண்டு வந்த அரசு அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், இன்று அரசு ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்ததாக இந்த அரசு சொல்கின்றது. இவ்வளவு விலைவாசியை ஏற்றிவிட்டு இன்னும் எத்தனை அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்தாலும் தகும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-20*

அதேபோன்று, லாட்டரிச் சீட்டு இலட்சக்கணக்கான ஏழை மக்கள், அடித்தள மக்களுடைய வாழ்விற்காக, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் அன்றையதினம் நிறுத்தப்பட்டது. இன்றையதினம், மறைமுகமாக லாட்டரிச் சீட்டை, இந்த அரசு கொண்டுவரக்கூடுமா என்ற ஒரு சந்தேகம் இருக்கின்ற நிலைமையும், இங்கே உங்களுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களே அதைப்பற்றிப் பேசக்கூடிய நிலைமை. அதுமட்டுமல்லாமல், மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 6-3-2007 அன்று ஒரு பேட்டியில் குறிப்பிடுகின்றபோது, '20-லிருந்து 22 ஆம் தேதி வரை, மூன்று நாட்கள் நடைபெற்ற லாட்டரிச் சீட்டு ஒழிப்பினுடைய நிகழ்வில், 580 பேர் அன்றையதினம் பிடிபட்டிருக்கிறார்கள்' என்பதைக் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல், இப்போது தலைமைச் செயலகத்திற்குள்ளேயே மற்ற மாநிலங்களுடைய லாட்டரிச் சீட்டினுடைய முடிவுகளைப் பார்ப்பதற்காக வரக்கூடிய சுபலட்சுமி என்ற பத்திரிகை, வருகின்ற நிலைமை. இப்படி லாட்டரிச் சீட்டு தொடர்ந்து வருவதற்குரிய நிலைமை மட்டுமல்லாமல், கோவையில் நடைபெற்ற பாரதியார்

பல்கலைக்கழக விழாவில் கோடீஸ்வரராக இருக்கக்கூடிய, லாட்டரிச் சீட்டினுடைய அதிபராக இருக்கக்கூடிய ஒருவர், அன்றையதினம், பல்கலைக்கழகத்திலே நடந்த நிகழ்ச்சியில், முறைப்படி அன்று அவர் இருக்க வேண்டிய, பகுதியைவிட்டு, அவருக்குத் தனியாக இடம் ஒதுக்கி, அவர் அந்த விழாவிலே கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய லாட்டரி வரக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு மீண்டும் கொண்டு வர இருக்கின்றதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காரணத்தைக்கொண்டும் லாட்டரிச் சீட்டை தமிழகத்திலே அனுமதிக்கமாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கேயாவது திருட்டுத்தனமாக லாட்டரிச் சீட்டுகளை யாராவது விற்பார்களேயானால், அவர்கள்மீதும் கடுமையாக நடவடிக்கை எடுத்து, அவர்களையெல்லாம் கைது செய்து, என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, மீண்டும், மீண்டும் லாட்டரிச் சீட்டு விற்பனையைக் கொண்டு வருவீர்களா, கொண்டு வருவீர்களா என்று கேட்பது அர்த்தமற்றது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி. 20 நிமிடங்கள் ஆகிவிட்டன, நீங்கள் பேச ஆரம்பித்து. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மானியங்களில் பேச வேண்டும். கொஞ்சம் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் காலையிலே என்னை வந்து பார்த்துப் பேசினீர்கள். எந்தக் காரணத்தைக்கொண்டும் 20 நிமிடங்களுக்கு மேல் கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். திரும்பவும் நீங்களே கேட்டீர்களானால் என்ன அர்த்தம்?



**திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்று, Cable T.V.-க்கு ஊராட்சி மூலமாகவும், வணிக வரித் துறை மூலமாகவும் வசூல் செய்யப்பட்டது. அந்த வசூல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றதா? அப்படி இருக்குமேயானால் இந்த அவையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இதற்கு நமக்கு உரிமையில்லையென்று குறிப்பிடுவீர்களேயானால், தமிழகத்தில் இருக்கின்ற பகுதிகளில் cable கொண்டு செல்வதற்காக, தமிழகத்திலுடைய உள்ளாட்சிப் பகுதிகள், தமிழகத்தினுடைய பகுதிகளில் செல்கின்றபோது, அதற்குக் கட்டணம் கட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இப்போது இருக்கின்ற தபால் தந்தித் துறை போன்றவற்றின்மூலமாக cable-கள் போன்றவை பதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறைகளுக்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி பொற்காலமாகத் திகழ்ந்தது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை உருவாக்கப்பட்டதற்குப் பின்னர், 68 சதவிதம் மக்களைக்கொண்ட அந்தத் துறையினுடைய, மக்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும், கல்வியிலே முன்னுக்கு வர வேண்டுமென்ற அடிப்படையில், கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தும்கூட, எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு, கடந்த கால அம்மாவினுடைய ஆட்சியில் மட்டும்தான் 851 கோடி ரூபாய், அன்றையதினம், இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் இருக்கக்கூடிய 963 விடுதிகளில், 202 விடுதிகள் மட்டும்தான் அரசு விடுதிகளாக இருந்தன. மீதம் இருக்கின்ற விடுதிகள் எல்லாம் அப்போது மிகவும் மோசமாக இருந்த நிலைமையை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பிற்படுத்தப்பட்டோர் சமுதாயம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயம், அவர்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக உத்தரவு வழங்கி, 760 விடுதிகள் கட்டுவதற்கு உத்தரவிட்டார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, சிறுபான்மையினரான கள்ளருடைய பள்ளிகள் தோன்றிய காலத்திலிருந்து ஒரு ஆண்டு அதிகமாக நிதி ஒதுக்கீடு எப்போது செய்தது என்று சொன்னால், 20 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் கொடுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-25*

அதுமட்டுமல்லாமல், 108 விடுதிகள் கூடுதலாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கொடுக்கப்பட்டன. அதேபோன்று, 2,225 மாணவர்கள் கூடுதலாகச் சேர்ப்பதற்கான நிகழ்வும் அம்மாவினுடைய ஆட்சியில்தான் நடைபெற்றது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னர், 50 விடுதிகள் மட்டும் கூடுதலாகக் கட்டுவதாகக் கடந்த பட்ஜெட்டில் கூறினீர்கள். அதேபோன்று, இன்று 50 என்று கூறி இருக்கிறீர்கள். ஆனால், ஏற்கெனவே கொடுக்கப்பட்ட 108 விடுதிகளுக்கு, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு காப்பாளர்கள், சமையலர்கள், துணை சமையலர்கள், காவலர்களை நியமிக்காமல் இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், கடந்த கொள்கை விளக்கக் குறிப்பில் 150 விடுதிகள் கட்டப்படும் என்று குறிப்பிட்டீர்கள். அதேபோன்று, இந்த ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பில் 120 விடுதிகள் கட்டப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். புரட்சித் தலைவி அம்மா ஆட்சியைப் பொறுத்தவரையில் அன்றையதினம் விடுதிகள் கட்டுவதிலே மாணவர்களுக்கு 36 இலட்சம், மாணவியர்களுக்கு 43 இலட்சம் என்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான். (குறுக்கீடு) No. திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான். நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், 20 நிமிடங்களுக்கு மேல் தரமாட்டேன் என்று. (குறுக்கீடு) அதையும் மீறி 23 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். இன்னும் என்ன செய்வது? (குறுக்கீடு) பொள்ளாச்சி ஜெயராமன், ரொம்பத் துள்ளுகிறீர்கள், அமைதியாக உட்காருங்கள்.

**திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சீக்கிரம் நன்றி சொல்லி முடியுங்கள்.

---



**திரு. செ.ம. வேலுசாமி:** அதேபோன்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை, வணிக வரித் துறை, பத்திரப்பதிவுத் துறைகளில் இப்போது வரலாறு காணாத அளவில், அந்தத் துறைகளை முன்னேற்றுவதற்கும், பெரும்பான்மையான மக்களுடைய வாழ்வுக்காக, ஆட்சி நடத்தி, மக்களுடைய ஏகோபித்த அன்பைப் பெற்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றையதினம் மக்களை ஏமாற்றிக் கொண்டு, மக்களைத் திசை திருப்பிக்கொண்டு, இப்படிப் பேசுவதற்குக்கூட ஆறுக்காக நின்றுகொண்டிருக்கின்ற, பதில் சொல்லாத, மைனாரிட்டி திமுக அரசு, மக்கள் விரோத அரசாக இருக்கக்கூடிய அரசாக இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீலூர் ரஹ்மான். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசிக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், செ.ம. வேலுசாமி அவர்கள் 3 ஆண்டுகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வரியே போடாமல் நாங்கள் ஆட்சி செய்தோம் என்று கூறினார்கள். உண்மைக்கு மாறான ஒரு தகவலை, இந்தப் பேரவையிலே அவர் கூறுவது வருந்தத்தக்கது. கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான, வரி விதிப்புத் தொகை வரம்பு ரூபாய் 25 கோடியில் இருந்து ரூபாய் 10 கோடியாக 1-11-2001 முதல் குறைத்தீர்கள். பொருட்களின்மீது, நுழைவு வரி 1-12-2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1996-ல் இருந்து 2001 வரை தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அந்த அரசு வரி விலக்கினை இரத்துச் செய்தது. அப்படி வரி விலக்கு அளித்து இருந்ததை இரத்துச் செய்து 27-3-2002 முதல் எண்ணெய், பருப்பு வகைகளின்மீது 4 சதவீத வரி விதிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) பதிவுக் கட்டணம் ரூ.200/-ஆக இருந்ததை 1-4-2002 முதல் உயர்த்தி, தனி நபர்களுக்கு ரூ.500/-ஆகவும், Private Limited-க்கு ரூ.1000/- ஆகவும், Public Limited-க்கு ரூ.2,500/- ஆகவும், உயர்த்தினீர்கள். 17-7-1996-ல் அகற்றப்பட்ட வரி மீதான 5 சதவீத உபரி வரி, surcharge மீண்டும் 1-7-2002-ல் கொண்டுவரப்பட்டது. ரூ.10 இலட்சத்திற்கு மேல் செய்யப்படும் மறு விற்பனையின்மீது 1 சதவீத மறு விற்பனை வரியை 1-7-2002-ல் கொண்டு வந்தீர்கள். இவையெல்லாம் போதாது என்று அரிசிக்குக்கூட வரி விதித்தீர்கள் என்பதை நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கலீலுர் ரஹ்மான். (குறுக்கீடுகள்)*

***திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையில் நடைபெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு, என்னுடைய உளப்பூர்வமான நன்றியினை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

நீண்டநெடிய பாரம்பரியம் உள்ள இம்மாமன்றத்தில் 1957 முதல் தொடர்ந்து 50 ஆண்டு காலம் சேவையாற்றி, வருகிற மாதம் இதே மாமன்றத்தில் பொன் விழா காண உள்ள பொன் விழா நாயகர், தமிழினத் தலைவர், முத்தமிழ் காவலர், வாழும் வள்ளுவர், சிறுபான்மைச் சமுதாயத்தின் இதய சூரியன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரவக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நல்வாழ்த்துகளைச் சொல்வதுடன் அவர் நீடித்த ஆயுளுடன் வாழ்ந்து அனைத்து வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட எல்லாம்வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கையை புது வரியே இல்லாமல் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதை எல்லாம் நிறைவேற்றி, சொல்லாத பல திட்டங்களையெல்லாம் அறிவித்த நிதி அமைச்சர் இனமானத் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்தும் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம் இளைய தளபதி அவர்களுக்கும், அமைச்சர் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றிவரும் அமைச்சர் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நான் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மத்தியில் 27 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு உச்ச நீதிமன்றம் தடையாணை வழங்கியமையால் தமிழகத்தில் அதை எதிர்த்து ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்திட வித்திட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்தவர்களுக்கும், அனைத்துத் தரப்புப் பொதுமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



நிதிநிலை அறிக்கையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பிற்கு கட்டணங்கள் இரத்து என்று அறிவிப்புச் செய்துள்ளதன்மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்கள் கல்வியில் முன்னேற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்காகவும் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களுக்கு 4 சதவிகித வரி விதிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பருப்பு, எண்ணெய்க்கு முழுவதுமாக வரியை இரத்துச் செய்துள்ளார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் முகமாக, அரசு தானே பருப்பு, எண்ணெய் போன்றவற்றை எல்லாம் கொள்முதல் செய்து கூடியவிரைவில் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளதையும் நான் வரவேற்கின்றேன்.

மத்திய அரசு அமைத்த நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிறுபான்மையினர், பின்தங்கிய நிலையைப் போக்கிட தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி, சிறுபான்மையினர் நலனுக்காக அவர்களது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒரு தனி இயக்குநரகம் அமைத்திடவும், அரசு மற்றும் தனியார் துறைகளில் அவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக சிறுபான்மையினர் திறன் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு 5,000 சிறுபான்மையின இளைஞர்கள், பெண்கள் ஆகியோருக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள், ஆயத்த ஆடை தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சி பெறுவதற்காக ஒரு அருமையான திட்டம், அதற்காக ரூ.2-1/2 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் 21,000 பயனாளிகளுக்கு ரூ.30 கோடியில் வரும் நிதியாண்டில் கடனுதவி வழங்கக்கூடிய திட்டம். இந்த ஆண்டு முதல் மீண்டும் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தநாள் அன்று தமிழக அரசு சார்பில் விடுமுறை அளித்துள்ளது, இவை எல்லாம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறுபான்மையோர்கள்மீது பாசமும் பரிவும் கொண்டு அவர்களது மேம்பாட்டுக்காக வழிவகை செய்துள்ளார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, சிறுபான்மையினர் நலன் குறித்த அமைச்சர் பொறுப்பை தாங்கள் பொறுப்பேற்றதிலிருந்தே தாங்கள் சிறுபான்மையின மக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளீர்கள் என்பது தெளிவாகிறது. உங்களது ஆட்சியில் பூரண பாதுகாப்பினைச் சிறுபான்மையினர் பெற்றுள்ளார்கள். இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு தங்களால்தான் பெற்றுத்தர இயலும் என இஸ்லாமிய சமுதாயம் நம்பியுள்ளது. ஆகவே, தாங்கள் அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக அரசுப் பணி மற்றும் கல்வி நிலையங்களில் இஸ்லாமிய சமுதாய மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. எனவே, குறைந்தபட்சம் சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-35

சிறுபான்மையினர் நல மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் சிறுபான்மையினர் அனைத்துத் துறைகளிலும் ஏற்றம்பெற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பல சீரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, பல நல்ல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். சென்ற அ.தி.மு.க. ஆட்சியிலே 5 ஆண்டுகளில் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் சிறுபான்மையின மக்களுக்காக குறுந்தொழில் தொடங்க ரூபாய் 12-3/4 கோடி அளவில்தான் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2006-2007 ஆம் ஆண்டிலே, ஓராண்டில் மட்டும் சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக 8 கோடி ரூபாய் கடனுதவி வழங்கியுள்ளார்கள். இதற்காக என் நன்றியைக் [illegible]கொள்கின்றேன்.

[illegible]இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாபெரும் தலைவராக விளங்கிய கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள் 'பெரும்பான்மை ஆள வேண்டும், சிறுபான்மை வாழ வேண்டும்' என்று சொன்னார்கள். அதை நிரூபித்துக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளான அரவக்குறிச்சியிலிருந்து கரூர் செல்லும் வழியிலே தடாகோயில் அருகில்



நங்காஞ்சி ஆற்றில் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம் ஒன்று கட்டுவதற்கும், சின்னதாராபுரம் அருகில் அமராவதி ஆற்றில் 2.90 கோடி மதிப்பீட்டில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கும் ஆவன செய்யப்பட்டுள்ளதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மேற்படி இரண்டு பாலங்கள் கட்டும் பணிகளை விரைந்து தொடங்குவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த தி.மு.கழக ஆட்சியின்போது எனது தொகுதியில் உள்ள பள்ளப்பட்டி பகுதி இஸ்லாமிய பெருமக்களின் வசதிக்காக பள்ளப்பட்டியிலிருந்து ஏர்வாடி தர்கா சென்று வருவதற்கு பேருந்து வசதி செய்து தரப்பட்டது. பள்ளப்பட்டி பகுதி இஸ்லாமியப் பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கையான பள்ளப்பட்டியிலிருந்து நாகூர் தர்காவிற்குச் சென்று வர பேருந்து வசதி செய்து தரவும், அதேபோல் சென்ற அ.தி.மு.க. ஆட்சியின்போது கொடுமுடியிலிருந்து அரவக்குறிச்சி, க.பரமத்தியிலிருந்து அரவக்குறிச்சி, கரூரிலிருந்து ஒட்டன்சத்திரம், கரூரிலிருந்து ஈசநத்தம் ஆகிய வழித்தடங்களில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே அரவக்குறிச்சி நகருக்கு வருகை தந்து மேற்படி வழித்தடங்களில் 4 புதிய பேருந்துகளை சென்ற மாதம் தொடங்கி வைத்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள். எனது தொகுதியான அரவக்குறிச்சி தொகுதி என்பது தமிழகத்திலேயே நிலப்பரப்பில் மிகப் பெரிய தொகுதி. மழை அதிகமாகப் பெய்வதே இல்லை. விவசாயிகள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாக இருக்கின்றது. அந்தப் பகுதியிலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. ஏற்கெனவே அங்கு இருந்த திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை இப்போது மூடப்பட்டுவிட்டது.

ஆகவே, அந்தத் தொகுதி மக்களுடைய நல்வாழ்விற்காக அரவக்குறிச்சி வட்டத்தைப் பொறுத்தவரையில், மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்குமாறு நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வதோடு, அரவக்குறிச்சி வட்டத்தில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத நிலையைப் போக்கக்கூடிய வகையிலே ஒரு தொழிற்சாலையை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அரவக்குறிச்சியில் நீதிமன்றம் அமைக்க ஆவன செய்யப்பட்டது. அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியினர் இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டனர். பொது மக்களுக்கும், காவல் துறையினருக்கும் மிகவும் அவசியமாகவும், அதேபோன்று அரவக்குறிச்சி பொது மக்களுக்கும், காவல் துறையினருக்கும் வசதியாகவும் அரவக்குறிச்சியில் நீதிமன்றம் அமைவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையிலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் மன்றம் அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமாய் நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-40*

எனது தொகுதியில் க. பரமத்தி ஒன்றியம், எலவனூர் என்ற ஊரிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 7-11-2005 ஆம் ஆண்டு அன்று அரசுக்குக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்காக அரவக்குறிச்சி சார் நிலைக் கருவூலத்தில் 1,90,000 ரூபாய் வைப்பு நிதியும் வைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே எலவனூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு கனிவுடன் வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் சின்ன தாராபுரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திட வேண்டுமென்பது அப்பகுதியின் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை. இதற்கு ஆவன செய்வதுடன், 30 படுக்கை வசதிகள்கொண்ட சுகாதார நிலையமாக அதை அமைத்துத் தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோன்று, எனது தொகுதியில் க. பரமத்தி ஒன்றியம், தென்னிலையில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றையும் அமைத்துத் தருமாறு கனிவுடன் வேண்டுகிறேன்.

அதேபோன்று, க. பரமத்தியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்துப் பிரிவு ஒன்றை ஏற்படுத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், கூடலூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லக்கூடிய பாதை அது. அந்த வழியில் நிறைய வாகனங்கள் செல்கின்ற காரணத்தால், அதிகமான விபத்துக்கள் அங்கே ஏற்படுகின்ற காரணத்தால், அப்படி விபத்து ஏற்படும்போது, நெடுந்தூரம் அந்த விபத்துக்குள்ளானவர்களை எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், க. பரமத்தியிலேயே ஒரு விபத்துப் பிரிவு மையத்தை உருவாக்குமாறு நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் க. பரமத்தி ஒன்றியம், ஆரியூரில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களை நான் கனிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் பள்ளப்பட்டியில் நங்காஞ்சியாற்றில் 1996 முதல் 2001 ஆம் ஆண்டுவரை நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நங்காஞ்சியாற்றின் குறுக்கே கட்டப்பட்ட தடுப்பணை, அது இப்போது தூர்வார வேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், அதைத் தூர்வாரவும், அதன் அருகே ஒரு சிறிய பூங்காவை அமைத்துத் தரவும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது நல்லாட்சி நடைபெறுவதால், ஏழை எளிய மக்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் நலம் பெறக்கூடிய திட்டங்களில் பல திட்டங்கள், இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் நிறைவேற்றப்படாத திட்டங்கள், நடைபெற்றுக்கொண்டுள்ளன. இது தமிழக மக்களுக்கு ஒரு பொற்காலம். இந்தப் பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் பாராட்டுக்களையும், நன்றியையும் கூறி, நிதிநிலை அறிக்கையை நான் மனதார வரவேற்கிறேன். அதேபோன்று, எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உரையாற்றிய மாண்புமிகு அரவக்குறிச்சி தொகுதி உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் அவர்கள் குறிப்பிட்ட, சமூக நீதி பற்றிய ஒருசில கருத்துகளை இந்தக் குறுக்கீட்டின் வாயிலாக வெளியிட விரும்புகின்றேன்.

சமூக நீதியின் தாயகமான தமிழகத்தில், 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் ஆட்சி தோன்றியவுடன், 1921 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'முதல் Communal G.O.' எனப்படும் முதலாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணையில், முஸ்லீம்களும் இந்தியக் கிறிஸ்தவர்களும் இடம் பெற்றார்கள். அதனைத் தொடர்ந்து, அரசு நியமனங்களில் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பகிர்ந்து நியமிக்க வேண்டுமென்பதற்காக, 1927 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆணையிலும் முகமதியருக்கும், கிறிஸ்தவருக்கும் தனியே இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, வகுப்புவாரி விகிதாச்சார விதியோடு, வகுப்புவாரி சுழற்சி விதியும் பின்பற்றப்பட்டது. நீதிக் கட்சியின் பாரம்பரியத்தை ஒட்டியே, தி.மு.க. ஆட்சியில் 1973-1974 ஆம் ஆண்டுகளில், உருது பேசும் லப்பைகள், தெக்கனி முஸ்லிம்கள் ஆகியோர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டார்கள்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் தனியே இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையினை ஏற்று, 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின்போது வெளியிடப்பட்ட தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சிறுபான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்குத் தனியாக இடஒதுக்கீடு வழங்குவதற்கேற்ற அறிவிப்பு செய்யப்பட்டது.

முற்பகல் 10-45

அதனைத் தொடர்ந்து, 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தேர்தல் அறிக்கையிலே உறுதி அளித்துள்ளவாறு சிறுபான்மைச் சமுதாயத்தினைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும்



தனியாக இடஒதுக்கீடு வழங்க மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன், தமிழகத்திலும் அவர்களுக்கான இடஒதுக்கீட்டுக்கு வழிவகுத்திடத் தேவைப்படும் உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று உறுதி வழங்கப்பட்டது. இவ்வாறு உறுதி வழங்கப்பட்ட (குறுக்கீடு) உறுதி வழங்கப்பட்டது என்றுதான் சொன்னேன். இவ்வாறு, தேர்தல் அறிக்கையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்ததைச் செயல்படுத்துவதற்கு, முதல்கட்டமாக நீதியரசர் திரு. ஜனார்த்தனம் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் இப்பொருள் பற்றி விரிவாக விசாரணையும், ஆய்வும் செய்து உரிய பரிந்துரையினைத் தருமாறு அரசு சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த ஆணையம் சிறுபான்மையினருக்கான இடஒதுக்கீடு பற்றிய பரிந்துரையை தமிழக அரசுக்கு அளித்துள்ளது. திரு. ஜே.ஏ. அம்பாசங்கர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அறிக்கையில் காணப்பெறும், 'இந்துக்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை, கிறிஸ்தவர்களில் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை, முஸ்லீம்களிலே பிற்படுத்தப்பட்டோர் மக்கள் தொகை ஆகியவை பற்றிய புள்ளிவிவரங்களை அடிப்படையாகக்கொண்டு முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கலாம்' என்று தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கலாம் என்று அமைந்த, அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க, சட்டரீதியிலான இந்தப் பரிந்துரையைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் நடைமுறையிலே இருந்துவரும் 69 சதவீத இடஒதுக்கீடு சம்பந்தமான வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தின் விசாரணையிலே இருந்து வருவதால், அந்த வழக்கு முற்றுப்பெற்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு சிறுபான்மையினர் இடஒதுக்கீடு தொடர்பான பரிந்துரையினை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டரீதியான முடிவுகளை தமிழக அரசு மேற்கொள்ளும். தோழமைக் கட்சிகளோடு கலந்தாலோசித்து, அதன்பின்னர் முழு விவரமும் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் தமிழகத்தினுடைய ஒரு மகத்தான பொன்னாளாக இந்த நாளை நான் கருதுகிறேன். கடந்த 60 ஆண்டுகளாக தமிழகத்திலே இருக்கின்ற சிறுபான்மை மக்கள் தொடர்ந்து ஒரு கோரிக்கையினைப் பல்வேறு அரசுகளுக்கு, பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு முறைகளில் சமர்ப்பித்து, இன்று அந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் ஒரு வடிவம் தந்து, வாழ்கின்றபோதே வரலாறாக மாறியிருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வரவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் சிறுபான்மை மக்களுடைய நெஞ்சிலேயெல்லாம் பால் வார்க்கின்ற ஒரு நல்ல செய்தியைத் தந்திருக்கின்றார்கள். இன்று காலையில், ஏற்கெனவே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினார்கள். நிதிநிலை அறிக்கை விவாதத்தில், நான் பேசியபோதும் இந்தக் கோரிக்கையினை வெகுவாக வலியுறுத்தினேன். அந்தச் செய்தி பத்திரிகையிலே வந்தபிறகு தமிழகத்திலே இருந்தும், தமிழகத்தைச் சேர்ந்த வெளி மாநிலங்களில் வாழ்கின்ற பல்வேறு சிறுபான்மையினத்தினைச் சேர்ந்த மக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நிறைவேற்றித் தருவாரா என்று என்னிடம் கேட்டார்கள். நான் சொன்னேன். சிறுபான்மையின மக்கள் யாரிடமாவது நம்பிக்கையோடு கேட்கமுடியும் என்று சொன்னால், இன்று வாழ்கின்ற தலைவர்களிலே, தலைவர் கலைஞர் அவரிடம் மட்டும்தான் கேட்கமுடியும். நிச்சயமாக அதைச் செய்வார்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) சச்சார் கமிட்டியினுடைய அறிக்கை வெளிவந்த நேரம். அந்த அறிக்கை தாழ்ந்து கிடந்த, சமூக நீதி மறுக்கப்பட்ட சிறுபான்மைச் சமூக மக்களுடைய சூழ்நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

*முற்பகல் 10-50*

இன்றையதினம் காலையிலே வந்திருக்கின்ற பத்திரிகைச் செய்தியில்கூட, இந்தியாவிலேயே மிகக் குறைந்து வேலைவாய்ப்புகளிலே இருக்கக்கூடியவர்கள் கிறிஸ்தவர்கள் என்கிற தகவல் வந்திருக்கிறது. எனவே, ஆள்வதற்கான அதிகாரத்தை நாங்கள் கேட்கவில்லை, வாழ்வதற்கான உரிமைகளைத்தான் கேட்கிறோம் என்று அடிக்கடி சொன்னபடி, இன்று சிறுபான்மை மக்கள் வாழ்வதற்கான



உரிமைகளுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஓர் அங்கீகாரம் தந்திருக்கிறார். ஓர் அறிவிப்புத் தந்திருக்கிறார். எனவே, தமிழகத்திலே வாழ்கின்ற 20 விழுக்காடு சிறுபான்மை மக்களின் சார்பாக, எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றியினைச் சொல்லி, இதைச் சிறுபான்மைச் சமூகம் ஒவ்வொரு கட்டத்திலும், தங்கள் சமூகத்தின் வாழ்வு இருக்கின்ற வரை, இந்த நல்ல செயலை நினைவில் வைத்துக்கொள்ளும். அதற்கு நன்றியுடன் இருக்கும் என்பதையும் இந்த அவையிலே நான் பதிவு செய்து, நன்றி தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காலம் கருதி இடத்தாற் செயின்' என்று சொல்வார்களே, அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்த நேரத்தில், எந்த அறிவிப்பை, யாருக்காக அறிவிக்க வேண்டும் என்ற அந்தக் காலத்தின் அடிப்படையில், இப்போது 'யானை வரும் முன்னே, மணியோசை வரும் பின்னே' என்று சொல்வார்கள். அதற்கேற்ப (குறுக்கீடு) 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் இப்பொழுது ஆணை வர இருக்கிறது. ஆணை வருவதற்கு முன்பு, ஆணையத்தின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற ஒரு நல்ல அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கிற இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கு மிகப் பெரிய வரவேற்பை, மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது என்பதனை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், மருத்துவர் அய்யா சார்பிலேயும் மிக்க நன்றியை (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்தோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள், 1980-ல் சமூக நீதி இயக்கத்தைத் தோற்றுவித்த நேரத்தில், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். அந்த வேண்டுகோளை ஏற்று, நிறைவேற்றிய பெருமைக்குரிய மகத்தான தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோரிக்கை வைத்த அதே நேரத்திலேதான்,

இஸ்லாமியப் பெருமக்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும், சிறுபான்மையினருக்கும் இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை 1980-லே வைத்தார்கள். தொடர்ந்து, சமூக அமைப்பாக இருந்த நேரத்திலும் சரி, பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கப்பட்ட நேரத்திலேயிருந்து இன்றைய வரையிலே, இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு தனி இடஒதுக்கீடு வேண்டும் என்று கட்சியிலே தீர்மானம் மட்டுமல்ல, போராட்டங்களையும் செய்தவர், மருத்துவர் அய்யா அவர்கள் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் சமூக நீதிக்காகக் குரல் கொடுத்து வந்த மருத்துவர் அய்யாவினுடைய இலட்சியப் பயணத்தில், தந்தை பெரியார் வழித் தோன்றலாக இருக்கிற, சமூக நீதிக் காவலராக இருக்கிற கலைஞர் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும், பாதுகாப்பு அரண் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, நெஞ்சார்ந்த நன்றியை பா.ம.க. சார்பிலே, மருத்துவர் அய்யா அவர்களின் சார்பிலே (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக் கொள்கையை நடைமுறையில் அமலாக்குவதிலே முன்வரிசையில் நிற்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறுபான்மை மக்களுக்கு மிகச் சிறந்த ஒரு சமூக நீதியை வழங்குகிற வகையில், சிறுபான்மை மக்களின் வாழ்வுக்கு வழிவகுக்கும் மிகச் சிறந்த ஓர் அறிவிப்பினை, இஸ்லாமிய மக்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்குகிற இந்த மிகச் சிறந்த அறிவிப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு, சிறுபான்மை மக்களின் வாழ்க்கையிலே ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோடியாக ஓர் அறிவிப்பினை தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் இந்த அவையிலே அறிவித்து அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக, சமூக நீதி என்று சொன்னாலே, சமூகத்திற்கு நீதி வழங்குவது யார் என்ற கேள்வி எழுகிறபொழுதெல்லாம், அதற்கு நான்தான் தீர்வாக அமைவேன் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே அதற்குத் தீர்வு கண்டுகொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, முஸ்லிம் சிறுபான்மை மக்களுக்கும், கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கும் இந்த நம்பிக்கைக்குரிய அறிவிப்பை தேர்தல் காலத்திலேயும் அளித்தார்கள். அதற்குப் பின்னதாக நடைபெற்ற ஆளுநர் உரையின் மூலமாகவும் தெளிவுபடுத்தப்பட்டது. அதை இப்போது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான ஒரு சிறந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான். (குறுக்கீடு)

**திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு என இடஒதுக்கீடு, நீண்ட நாளையக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு இருக்கக்கூடிய தடைகளைப்பற்றி எல்லாம் எடுத்துரைத்து நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற ஓர் உறுதியை அளித்து, முன்கூட்டியே சிறுபான்மையினருக்குத் தனி இயக்குநரகம் ஒன்றை அமைத்ததன் வாயிலாகவே சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய உரிமைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற ஓர் உறுதியை அளித்தது மட்டுமன்றி, இன்றைய மானியக் கோரிக்கையிலே உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துவதைப்பற்றிக் குறிப்பிட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, 1968 ஆம் ஆண்டு காயிதே மில்லத்

அவர்களிடத்தில் தன்னுடைய அமைச்சர் பெருமக்களையெல்லாம் அழைத்துச் சென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி மட்டும் சொல்லி, சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எச். அப்துல் பாசித்:** அமைச்சர் பெருமக்களை எல்லாம் அழைத்துச் சென்று நீங்கள் எதற்காக வந்தீர்கள் கலைஞர் அவர்களே, நானே வந்திருப்பேனே என்று காயிதே மில்லத் அவர்கள் சொன்னதற்கு, இந்த அமைச்சரவையையே உங்களுக்குக் காணிக்கையாக்க வந்தேன் என்று சொன்னார்கள். அதை இன்றைக்கு நிரூபித்து விட்டார் என்பதை எண்ணி, நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான். (குறுக்கீடுகள்)

**திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூடிய விரைவிலே சிறுபான்மையினருக்கும் இடஒதுக்கீடு நிச்சயம் வழங்கப்பட்டே தீரும் என்ற ஒரு நல்ல அறிவிப்பைச் செய்து, அந்த அறிவிப்பின்மூலம் சிறுபான்மையின மக்களுடைய உள்ளத்திலே பால் வார்க்கக்கூடிய ஒரு நல்ல செய்தியைச் சொன்னதற்காக அவர்கள் அனைவரின் சார்பாக நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) திரு. ஆஸ்கார் சி. நிக்லி. (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்கார் சி. நிக்லி. (குறுக்கீடுகள்) அவர் சிறுபான்மைச் சமுதாயம் இல்லையா, அதனால்தான்.

**DR. OSCAR C. NIGLI:** Hon'ble Speaker Sir, as I have already spoken in the general discussion on the Budget, all of us from the minority communities anticipated that our Chief Minister will never let down the minorities and he has proved that he would never let us down. (Thumping of desks) We thank you, Sir. We thank you from the bottom of the heart and everyone of the minorities, not only in Tamil Nadu but also in other parts of the country, will learn from this experience. (Thumping of desks) Thank you, Sir.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சிறுபான்மையினப் பெருமக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கின்ற வகையில் Commission தந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதாகவும், 69 சதவிகித இடஒதுக்கீடு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகவும், அந்த வழக்கு முற்றுப்பெற்றவுடன், அதன் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்படும் என்ற அறிவிப்பினை இங்கே செய்தார்கள். சிறுபான்மையினப் பெருமக்களுக்கு இடஒதுக்கீடு, சமூக நீதியைக் காப்பதில், இடஒதுக்கீடு அளிப்பதில் தமிழகத்தில் அனைவருக்கும் ஒத்த கருத்து இருக்கின்றது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்வது, உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற அந்த வழக்கை விரைந்து முடிக்கவேண்டும். ஏனென்று சொன்னால், அந்த வழக்கை எவ்வளவுக்கு எவ்வளவு நாம் விரைந்து முடிக்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சிறுபான்மையினப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்ற இடஒதுக்கீடும் கூடிய விரைவில் கிடைக்கும் என்ற கருத்தினைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார். (குறுக்கீடு) திரு. நா. இராமகிருஷ்ணன், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

முற்பகல் 11-00

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழ்கின்ற இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவப் பெருமக்களுக்கு சமூக நீதியைத் தருகின்ற வகையில், அவர்களுடைய வாழ்க்கை வசந்தம் பெறுகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடஒதுக்கீடு செய்வதற்குண்டான அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இதில் மாறுபட்ட கருத்தோ, எண்ணமோ, எதுவும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் அன்னை சோனியா காந்தி ஆட்சி வர வேண்டுமென்று முதல் குரல் எழுப்பிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் பெருமக்களே, இந்தியாவையே தன் குழந்தையாகப் பாவித்து, உலக மக்கள் அத்தனை பேரும் பாராட்டுகின்ற அளவிற்கு இன்று அரசியலில் தலைநிமிர்ந்து நிற்கின்ற அன்னை சோனியா காந்தியின் (மேசையைத் தட்டும் ஒலி) நிழலில் நிற்கின்றவர்கள் நாங்கள். அரசியலில் ஆழ்ந்த சிந்தனையும், தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்தியாவிலே வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்காக, சிறுபான்மையினருக்காக, தென்னகத்திலேயிருந்து குரல் கொடுக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இலவசக் கல்வித் திட்டத்திற்கு உறுதுணையாக மூன்று முட்டைகளையும் தந்து, இப்போது பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த தின விழாவை எல்லா மாணவ, மாணவிகளும் கொண்டாடுகின்ற வகையில் சட்டம் இயற்றி ஆட்சி செய்கின்ற நமது தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில், பள்ளிக்கூடப் பைகளுக்கு 4 சதவீத வரி செலுத்த வேண்டுமென்ற ஒரு சட்டம் இருக்கிறது; வணிக வரி விதிக்கின்றபோது நமது அமைச்சர் அவர்கள் அதை மாற்றியமைக்க வேண்டும். கோதுமையின்மீது விதிக்கப்படும் 2 சதவீத வரியை இரத்துச் செய்ய வேண்டும். மரவள்ளிக்கிழங்குமூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற சிப்ஸ், மாவு போன்றவற்றிற்கு உள்ள 4 சதவீத வரியை இரத்துச் செய்ய வேண்டும்.

குத்துவிளக்கு, அகல் விளக்குகளை வைத்து ஆண்டவனை வழிபடுகின்றதால், அந்த விளக்குகளுக்கு வரி விலக்குத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். விளக்குக்கும் ஐயா அவர்கள் வரி விலக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். ஏழையெளிய மக்கள் டீக்கடையிலே நின்று, பன், ரஸ்க், பிஸ்கெட் போன்றவற்றைச் சாப்பிடுகின்றார்கள். அவர்கள் பயனடைகின்ற வகையிலே, அந்தப் பொருட்களுக்கும் வரி விதிப்பிலே இருந்து விலக்குத் தர வேண்டும். நெய் தயாரிப்பாளர்கள் அனைவருக்கும் 4 சதவீத வரியை, ஒரே வீதமாக 4 சதவீதம் வரியாக மாற்றியமைக்க வேண்டும்.



தமிழகத்திலே குமரி மாவட்டத்தில்தான் அதிகமாக இரப்பர் எடுக்கப்படுகிறது. இதற்கு இந்தியா முழுவதும் 4 சதவீதம் வரி இருக்கிறது. ஆனால், குமரி மாவட்டத்தில் இன்னும் ஒரு சதவீதம் அதிகமாக. அந்த இரப்பர் ஷீட்டைத் தயாரிக்கின்ற நேரத்தில் ஒரு சதவீதம் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் குமரி மாவட்ட இரப்பர் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதைப்போல இரப்பரைப் பயன்படுத்தித் தயாரிக்கின்ற ரெக்ஸினுக்கும் வரியைக் குறைக்க வேண்டும்.

ஊதுவத்திக்கு வரிவிலக்கு தர வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்ற நிலையில் சென்னையும் காஞ்சிபுரமும் இப்பொழுது அதிகத் தொழிற்சாலைகளை உடனுக்குடன் பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளன. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட மக்கள் பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், மறைந்த மத்திய அமைச்சர் நமது முரசொலி மாறன் அவர்களால் 2001 ஆம் ஆண்டே தொடங்கப்பட்ட நாங்குநேரி Hi-Tech Industrial Park அதிக முதலீடு இல்லாமல் இன்னும் சரியான முறையில் செயல்படாமல், அங்கே கொஞ்சம் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-05

தமிழக முதல்வர் அவர்களிடம் முதல் சட்டமன்றத் தொடரிலே சொன்னேன்; "ஐயா, நீங்கள் எங்கள் நாங்குநேரி தொகுதிக்கு வரவில்லை. நீங்கள் கண்டிப்பாக அன்னை சோனியா காந்தியுடன் வந்து, அந்த நாங்குநேரி Hi-Tech Industrial Park-ஐத் தொடங்கி வைக்க வேண்டும்" என்று சொன்னேன். தனிக் கவனம் எடுங்கள், ஐயா திருநெல்வேலியிலே Hi-Tech Industrial Park வருகிறது என்று சொன்னீர்கள். வேலை ஆரம்பித்துவிட்டது என்று சொல்கிறீர்கள். ஆனால், இந்தியாவிலே முதன்முதலாக S.E.Z. என்று சொல்லப்படுகின்ற Hi-Tech Industrial Park நாங்குநேரியிலே இன்னும் சரியான முறையிலே ஆரம்பிக்கப்படவில்லை. காற்றாலைகளுக்கு உதிரிப் பாகம் செய்கின்ற தொழிற்சாலை நாங்குநேரியிலே வரும் என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது அது பக்கத்து மாவட்டத்திற்குப் போவதாகச் சொல்கிறீர்கள். நாங்கள் தெற்கே இருக்கிறோம். குமரி முனைக்குப் பக்கத்திலே இருக்கின்றோம். அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறோம். நெல்லை மாவட்டம் மட்டுமல்ல, குமரி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டத்திலே ஏராளமான இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். தமிழக முதல்வர் அவர்களே, நீங்கள் வாழ்கின்ற காலத்தில் இந்தச்

சட்டமன்றத்திலே வாழ்கின்றோம், இருக்கின்றோம் என்ற பெருமை எங்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் காலத்திலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றோம். நாங்குநேரி மட்டுமல்ல, இராதாபுரமாக இருந்தாலும் சரி, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற நமது ஐயா சபாநாயகர், நான் உட்பட, அத்தனை பேர்களும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நீங்கள் சிறப்புக் கவனம் எடுத்து நாங்குநேரி Hi-Tech Industrial Park-ஐ தயவுசெய்து கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், ஏழை எளிய மாணவர்களுக்கு இரு சக்கர வாகனங்களைக் கொடுக்கின்றீர்கள். தரமான சைக்கிளைக் கொடுக்கின்றீர்கள். அந்த சைக்கிளை 11-வது வகுப்பில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்குக் கொடுக்கின்றீர்கள். தமிழக முதல்வர் அவர்களே, அதை எட்டாம் வகுப்புப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்குக் கொடுத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) 8, 9, 10, 11, 12 என்று ஐந்து ஆண்டுகள், இந்த மக்கள் கொடுக்கின்ற பணத்தில் கொடுக்கின்ற சைக்கிள் ஐந்து ஆண்டுகள், பயன்படும். தமிழக முதல்வர் அவர்களே, அடுத்த ஆண்டு முதல் எட்டாவது வகுப்பிலேயிருந்து நீங்கள் அந்த மாணவ, மாணவியர்களுக்கு சைக்கிளைக் கொடுத்தால் ஐந்து ஆண்டுகள் அந்த ஏழை, எளிய மாணவர்கள் பயன்படுத்துவார்கள் என்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

On-line trading, நீங்கள்தான் முதன்முதலாக அதைத் தடுத்து நிறுத்தினீர்கள், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று. அதை நாங்கள் பாராட்டுகிறோம்.

அதோடுமட்டுமல்ல, சைக்கிளைக் கொடுக்கின்ற நேரத்தில், கிராமப்புறத்திலே அங்கே இருக்கின்ற சைக்கிள் கடைக்காரர்கள் அதை refitting செய்ய வேண்டுமென்று, 150 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வசூலிக்கிறார்கள். சைக்கிள் சப்ளை செய்கின்ற அந்தத் தயாரிப்பாளர்களே அந்தக் குழந்தைகளுக்கு 150-ரூபாயிலிருந்து 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, எங்கள் நாங்குநேரி தொகுதியில் கொடுமுடி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான சைக்கிள் கொடுக்கிறோம். அதை refitting செய்துதான் மாணவர்களிடம் அந்தந்தப் பள்ளிகளில் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. எச். வசந்தகுமார்:** இருந்தாலும், தயாரிப்பாளர்களிடம் நீங்கள் சொல்லி, அந்தக் குழந்தைகளுக்கு சைக்கிள் கொடுப்பதில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்கின்றேன். கிராமப்புறங்களில் 150 ரூபாய், 200 ரூபாய் என்பது அதிகத் தொகையாக இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. . .

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைக்கிள் இலவசமாகத்தான் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இங்கேயுள்ள அமைச்சர்களும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, யாரும் அவர்களிடம் சைக்கிள்களை refitting செய்வதற்கு யாரிடமும் பணம் வாங்கவில்லை. அதற்கு அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களே சாட்சி.

**திரு. எச். வசந்தகுமார்:** நன்றி. நீங்கள் fit பண்ணித்தான் கொடுக்கின்றீர்கள். ஆனால், எப்போதுமே ஒரு சைக்கிள் வாங்கினால், அதை refit பண்ண வேண்டும். அப்போதுதான் அந்த parts எல்லாம் நன்றாக இருக்கும், உழைக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, எங்கள் நாங்குநேரி தொகுதியில் வள்ளியூரில் நீண்ட நாட்களாகத் திறக்கப்படாமல் இருக்கின்ற மருத்துவமனையை நமது அமைச்சர் அவர்கள் நாளை திறக்க இருக்கின்றார்கள். அவர்களுக்கும் நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழக அரசிற்கு ஏறத்தாழ உலக வங்கியின்மூலம் நீர்வள ஆதாரத்திற்கு 2,500 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. நாங்குநேரி தொகுதி என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும், ஏழை விவசாயிகளும் வாழ்கின்ற இடம். அங்கு மூன்று குளங்கள் இருக்கின்றன. கொடுமுடியாறு அணையின் மட்டம் 122 மில்லியன் கன அடி; அதைவிடப் பெரிய அளவிற்கு வடக்கு வள்ளியூர் குளம், நாங்குநேரி குளம், விஜயநாராயண குளம் போன்றவை, ஒரு சின்ன அணை அளவிற்குப் பெரிய குளங்களாக இருக்கின்றன. தமிழக

முதல்வர் அவர்களும், நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், அதற்கு ஏறத்தாழ 18 கோடி ரூபாயை ஒதுக்கி, வடக்கு வள்ளியூர் குளம், நாங்குநேரி குளம், விஜயநாராயண குளம் போன்றவற்றை ஒரு mini அணையாக அல்லது ஒரு mini dam-ஆக, நீர்த்தேக்கமாக மாற்றினால், நாங்குநேரி, சாத்தான்குளம், இராதாபுரம் போன்ற தொகுதி மக்களுக்கும் அது பயன்படும். அந்த வகையிலே, அந்தக் குளங்களை நீங்கள் ஒரு சின்ன அணைக்கட்டாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதேநேரத்தில், எங்கள் நாங்குநேரி தொகுதியில், ஏழை மக்கள் ஏராளமான நிலங்களில், கோயில் நிலங்களில் ஏறத்தாழ 50-லிருந்து, 100 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்; புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்; ஓடைப் புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். கோயில் நிலங்களில், அதன் உரிமையாளர்களை, அந்த நிர்வாகிகளைச் சந்தித்து, தமிழக அரசு, அந்த ஏழை மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேகூட, ரேஷன் கடைகளில், துணிப் பைகளில் அரிசியைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம்; அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. மண்ணெண்ணெய் வாங்குபவர்களுக்கு, tin-ல் விநியோகிக்க வேண்டுமென்று சொன்னோம். அது இன்னும் வழக்கத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, தமிழக அரசு, இலவச gas அடுப்புக் கொடுக்கிறது. இதற்குத் தமிழக அரசு 295 ரூபாய் வாங்கவேண்டுமென்று சொல்கிறது. ஆனால், சில கடைக்காரர்கள், அந்த 295 ரூபாய்க்கும் அதிகமாக, 400 ரூபாய், 450 ரூபாய் என்று ஏழை மக்களிடம் வாங்குகின்றார்கள். தமிழக அரசு அதற்குக் கண்டிப்பாக 295 ரூபாய்தான் வாங்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அதோடு மட்டுமல்ல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 295 ரூபாய் என்பதைத் தமிழக அரசின் சார்பாக வாங்கச் சொல்லவில்லை. Gas cylinder விற்கிற Agent-கள்.—அது



மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கிற, எண்ணெய்க் கழகத்தின்மூலமாக நடைபெறுகிற Agency.—அந்த Agent-கள் transport charges போன்றவற்றையெல்லாம் கணக்கிட்டு, அவர்கள் பெறுகிறார்களேயொழிய, தமிழக அரசின் சார்பாக ஒரு பைசாகூட அந்தத் திட்டத்தின் சார்பாக வாங்கச் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, என்ன குறுக்கீடு? என்ன வேண்டும்?

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சுற்றுப் பகுதிகளிலும் சரி, பரமக்குடி நகராட்சிப் பகுதியிலும் Indane Distributor, விநியோகஸ்தர் என்ற முறையிலே, நான் இந்தச் சபையிலே சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த இலவச gas திட்டத்தின் அடிப்படையிலே, அந்தப் பகுதிகளிலே நாங்கள் cylinder-களுக்கு 295 ரூபாய் மட்டுமே பெற்று வருகிறோம். அந்த transport charge கூட நாங்கள் வாங்குவதில்லை. ஏனென்றால், கிராமத்திற்குப்போய் கொடுக்கும்போது, நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, இது எப்படி Point of Order-லே வரும். (குறுக்கீடு) சொல்லுங்கள், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** அதனாலே 295 ரூபாய் bill rate. அந்த bill rate-ஐத் தவிர, அதிகமாக நாங்கள் யாரும் வாங்குவதில்லை. அதேசமயத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நாங்கள் தெரிவித்திருக்கிறோம். ஏனென்றால், எங்களுக்கு cylinder-க்கு 10 ரூபாய்தான Commission கிடைக்கிறது. ஒரு கிராமத்திற்குப்போய் நாங்கள் cylinder supply செய்யும்போது, அந்த 10 ரூபாய் commission எங்களுக்கு அடிபட்டுப்போகக்கூடிய அந்தச் சூழ்நிலையிலே, தங்களுடைய உத்தரவின்பேரில், நாங்கள் பெற்றுக்கொள்கிறோம் என்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறோம். இந்தத் தகவலைச் சபைக்குத் தெரிவிக்க நான் ஆசைப்பட்டேன்; வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வசந்தகுமார், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு வாய்ப்பு எப்பொழுதாவதுதான் கிடைக்கும். கிடைக்கிற நேரத்திலே எங்களுடைய தொகுதிக்கும், பொது மக்களுக்கும் உள்ள பிரச்சினைகளைச் சொல்லிக்கொள்கிறேன் ஐயா. எனக்காக மட்டுமல்ல.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும், ஏழையெளிய மக்கள் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது அவர்களுக்கு accident ஆனாலோ, அவர்கள் எந்த hospital-க்குப் போனாலும், X-Ray எடுத்துக்கொண்டு வாருங்கள்; Scan எடுத்துக்கொண்டு வாருங்கள்; Blood test எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒரு scan எடுப்பதற்குத் தனியாரிடத்தில் கிட்டத்தட்ட 6,000/- ரூபாய், 7,000/- ரூபாய் செலவாகிறது. தமிழக அரசு, ஒரு scan எடுப்பதற்கு இவ்வளவுதான், X-Ray எடுப்பதற்கு இவ்வளவுதான் அல்லது Blood test எடுப்பதற்கு இவ்வளவுதான் என்ற ஒரு நிலையான கட்டணத்தை நிர்ணயம் செய்தால்தான், ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

அதோடுமட்டுமல்ல; சென்னையிலே நீங்கள் விமான நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், இப்பொழுது இருக்கிற ஜன நெருக்கத்தில் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகப் போகவேண்டியிருக்கிறது. தமிழக அரசு 9,000 கோடி ரூபாயில் மெட்ரோ இரயில் கொண்டு வருகிறது; பாராட்டுகிறோம். மத்திய அரசு மேம்பாலங்களைக் கட்டுகிறது; பாராட்டுகிறோம். நமது தமிழக அரசுதான் தமிழ்நாட்டில் அதிகமான பாலங்களைக் கட்டி, மக்களுக்குத் தொந்தரவைக் குறைத்து, அவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுத்திருக்கின்றீர்கள். டாக்டர் கலைஞர் அவர்களே, உங்கள் காலத்தில் Beach Railway Station-லேயிருந்து தாம்பரம் வரையிலே ஒரு மேம்பாலம் நீங்கள் அமைத்துக்கொடுத்தால், அது எல்லா மக்களுக்கும் போவதற்கு, வருவதற்கு வசதியாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களும், சென்னையில் இடநெருக்கடி இருக்கிறது; Traffic தொந்தரவாக இருக்கிறது என்று



சொல்லமாட்டார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் Beach-லேயிருந்து தாம்பரம் வரையிலே நீங்கள் ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் நமது Transport Minister அவர்கள், Courier Service-ஐ நாங்கள் ஆரம்பிப்போம் என்று கடந்த சட்டமன்றத்திலும் சொன்னார்கள்; தேவைக்கு வருகின்ற நேரத்திலும் பொது மேடையிலே சொன்னார்கள். தமிழக அரசு Courier Service, அதேமாதிரி parcel service ஆரம்பித்து தமிழகப் போக்குவரத்துத் துறைக்கு வருவாயைப் பெருக்குவோம் என்று சொன்னார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், சென்னையில் ஆட்டோக்களுக்கு குறைந்தபட்சக் கட்டணம் 14 ரூபாய் என்று நிர்ணயம் செய்து கொடுத்தீர்கள். ஆனால், ஆட்டோ ஓட்டுகிற சகோதரர்கள் சொல்கிறார்கள், எங்களுக்கு ஒரு ரூபாய் கூட்டிக்கொடுங்கள்; 14 ரூபாய் என்பதை 15 ரூபாயாகக் கூட்டிக் கொடுங்கள். ஒரு கிலோமீட்டருக்கு 6 ரூபாய் என்றிருப்பதை 7 ரூபாயாக நீங்கள் மாற்றிக் கொடுங்கள்; நாங்கள் சந்தோஷமாக டாக்டர் கலைஞர் ஆட்சியிலே வாழ்வோம் என்று அந்த ஆட்டோ ஓட்டுகிற தொழிலாளர்கள் சொல்லுகின்றார்கள். தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் அந்த ஒரு ரூபாயைப் போட்டுக் கொடுத்தால் அவர்களுக்கு மன நிறைவு வரும்; நீங்களும் அவர்களைக் கண்டிப்புடன் வழிநடத்தலாம் என்ற கோரிக்கையாகத்தான் நான் வைத்துக்கொள்கின்றேன். நீங்கள் அதில் தயவுசெய்து முடிவு எடுக்க வேண்டும்.

இந்த ஆட்சியில் நாங்களெல்லாம் எங்கள் தொகுதிகளுக்கு எல்லா வளமும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நீங்களும் செய்துகொண்டிருக்கின்றீர்கள். எங்கள் நாங்குநேரி தொகுதியில் 100, 200 ஆண்டுகளாக ஆற்றைக் கடப்பதற்கு ஆண்களும், பெண்களும், பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளும் மிகவும் சிரமப்படுகிறார்கள். நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நமது மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அய்யா அவர்களும் வள்ளியூருக்கு வந்தார்கள். 'வள்ளியூரிலே கேட்டால், இந்த முருகன் கொடுப்பான்; வள்ளி கேட்டு முருகன் கொடுக்கமாட்டானா?' என்று சொன்னார்கள். ஏறத்தாழ 10, 15 பாலங்கள் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. உங்கள்

ஆட்சியில் நாங்குநேரி தொகுதி, டாக்டர் கலைஞரின் தொகுதி என்று சொல்லுகின்ற அளவிற்கு நீங்கள் அதிலே வழிவகை செய்துகொடுக்க வேண்டும். தென்னகம் வாழும், தெற்கேயிருந்து தோன்றிய பெருந்தலைவர் காமராஜருடைய தொண்டன் என்ற முறையிலே உங்களை நான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். எங்களையும் கவனியுங்கள், நாங்கள் எப்பொழுதும் உங்களைக் கவனித்துக் கொண்டிருப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) சிறுபான்மையினரான கிறிஸ்துவர் மற்றும் முஸ்லிம்களுக்கான தனி இடஒதுக்கீடு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றியும், பாராட்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, சிறுபான்மையினர் நலன் கருதி, நல்லறிவிப்புகளை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சட்டமன்றப் பேரவை சார்பாகவும், பேரவைத் தலைவர் என்ற முறையிலும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.



***திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மிக மிகப் பிற்படுத்தப்பட்ட' என்று எத்தனை 'மிக' வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டவர் எனக் கூறிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 50 ஆண்டுக்கால பொன்விழா கொண்டாடப்படவுள்ள மாமன்றத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், எங்கள் கட்சித் தலைவர், தியாகச் செம்மல், ஓய்வறியா உழைப்பாளி, திரு. கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையில் சிறுபான்மையினர் நலன் வருகிறது; அதில் பா.ம.க. சார்பில் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்ற, பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்ற இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவர், சிறுபான்மையினர் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சருக்கு வலியுறுத்தி கோரிக்கை வைத்துப் பேச வேண்டுமென்று இன்று காலையில் எங்கள் தலைவர் திரு. கோ.க. மணி அவர்களிடத்திலும், என்னிடத்திலும், சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நானும் வலியுறுத்திப் பேச குறிப்பு எடுத்து வந்திருக்கிறேன். இன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல அறிவிப்புச் செய்தமைக்கு மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

பா.ம.க.வினுடைய உயிர்மூச்சுக் கொள்கையான, சமூக நீதிக் கொள்கையின் பிறப்பிடமான தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அதைத் தொடர்ந்து நிலைபெறச் செய்து வருகிறார். நிறைவேற்றி வருகின்றார். இது சமூக நீதியினுடைய வெற்றிப் படிகள் என்று சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் சமூக நீதிச் சாதனையாளர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ. 5.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை வரவேற்கிறேன். அதேநேரத்தில் தமிழகத்தில் நிலத்தினுடைய விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. நிலங்களைக் கையகப்படுத்த இந்தத் தொகை போதுமானதாக இருக்காது. கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். வீட்டுமனை இல்லாத அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இறந்தால் ஈமச்சடங்கிற்கு அரசு ரூ.500 வழங்கி வருகிறது. இந்தத் தொகையை 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதியில் ஒரு மாணவருக்கு ரூபாய் 300 எனக் கணக்கிட்டு தொகை வழங்கப்படுகிறது. அதனை ரூபாய் 500 ஆக உயர்த்தி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் ஆகியோர் மாநிலத்தினுடைய மக்கள் தொகையில் மிக அதிகமானவர்கள். இவர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் மேம்பாடு அடைந்தால்தான் நமது மாநிலம் முன்னேறியதாகப் பொருள். மக்களின் வளர்ச்சியே மாநில வளர்ச்சி. இந்த மக்களின் மேம்பாட்டுக்கு சிறப்புத் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மக்களின் மேம்பாட்டுக்காக தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் சமூக நீதிக்காகப் பாடுபட்டதை நாம் மறக்க முடியாது. எத்தனை ஆண்டுகளாகியும் சமூக நீதி மறுக்கப்படுவதும் இடஒதுக்கீட்டிற்கு சோதனை ஏற்படுவதும், இன்னும் முழுமையான இடஒதுக்கீடு கிடைக்காமல் இருப்பதும் வேதனை அளிக்கிறது.

சமூக நீதிக்கு தமிழகம்தான் பிறப்பிடம் என்பதற்கு இன்றும் 27 சதவீத இடஒதுக்கீட்டினுடைய சோதனைக்குப் பாதுகாப்பு அரணாக இருப்பவர் நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், தொடர்ந்து சமூக நீதிக்காகப் போராடி வரும் எங்களின் சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களும். இதைப்போலவே தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதை 31-3-2007 அன்று நடைபெற்ற பொது வேலை நிறுத்தப் போராட்டம் மூலம் இந்தியா உணர்ந்துள்ளது. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடஒதுக்கீடு முறையாகச் சென்றடைய வேண்டும். இந்தியாவின் 62 சதவீதத்திற்குமேல் பெரும்பான்மை மக்களாக உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்று 27 சதவீத இடஒதுக்கீட்டிற்கு ஏற்பட்டிருக்கின்ற சோதனை எவ்வளவு பெரிய வேதனை என்பதை அனைவரும் உணர வேண்டும்.



தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆதி திராவிட, பழங்குடியின, சிறுபான்மை ஆகிய அனைவருக்கும் உரிய சமூக நீதி கிடைத்திட தொகுப்பு இடஒதுக்கீட்டு முறையை, அதாவது Compartmehtal Reservation முறையை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் உரிய சமூக நீதி கிடைக்கும் காலம் ஆகும். தமிழக அரசுப் பணிகளில் எல்லாத் துறைகளிலும் தற்காலிக நியமனம் செய்து வந்திருக்கின்ற முறையில்கூட இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படவில்லை. தமிழகத்தில் இப்படி நடக்கலாமா? இதுவே சமூக நீதிக்கு எதிராக நடந்த அநீதி ஆகும். எனவே, அப்படிப்பட்ட நியமனங்களில் குறைகளைக் கண்டறிந்து எந்தப் பிரிவினருக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ அவர்களைக் கொண்டு பின்னடைவு இடங்களை நிரப்ப வேண்டும். இதில் அரசு அதிக அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும்.

பதவி உயர்வில் நான்கு துறைகளில் இடஒதுக்கீட்டு முறை பின்பற்றி வந்தது கேள்விக் குறியாகி உள்ளது. தற்போது எல்லாத் துறைகளிலும் பதவி உயர்வில் இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசினுடைய மொத்தப் பணியிடங்களினுடைய அளவில் அனைத்துத் துறைகளிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஏராளமான பின்னடைவு இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது வருத்தமளிக்கிறது. எனவே, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுடைய பின்னடைவு காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இன்னொன்று, மிக முக்கியமான பிரச்சினை. இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் எங்கெங்கெல்லாம் குடியிருக்கின்றார்களோ, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மேலும், தேவையான நிதியொதுக்கீடு செய்து, அவர்களுடைய தர்காக்களுக்கு, மசூதிகளுக்கெல்லாம் பராமரிப்புப் பணி செய்து கொடுக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள்.

லம்பாடி, நரிக்குறவர், போயர், சவுரி முடிவோர், தொட்டிய நாயக்கர், பொம்ம நாயக்கர் போன்ற சாமான்ய மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சிறப்புக் கட்டணம்--special fees--மாணவர் சேர்க்கையின்போது வசூலிக்கப்படுகிறது. பிறகு அரசு அதனைத் திருப்பிக் கொடுக்கிறது. ஆனால் அந்தத் தொகை மாணவர்களுக்குச் சென்றடைவதில்லை. இது பரவலாக மிகப் பெரிய குறையாக உள்ளது. இதனால் அரசுக்குத்தான் கெட்ட பெயர். எனவே, ஆரம்பத்திலேயே இந்தக் கட்டணத்தை இரத்து செய்துவிட்டால் இதில் சிக்கல் ஏதும் இல்லை. அரசுக்கு நஷ்டமும் இல்லை.

*முற்பகல் 11-25*

இடஒதுக்கீட்டு முறையை தனியார் தொழில் நிறுவனங்களிலும் அமல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரங்களைப் பதிவு செய்து, நீண்ட நாட்களாகப் பத்திரங்கள் வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கு உடனடியாகப் பத்திரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் சாதாரண ஏழையெளியவர்களுக்கு, வீடு அல்லது நிலம் பெயர் மாற்றம், பட்டா மாற்றம் போன்றவற்றிற்குப் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக உள்ளது. மதிப்பீட்டினுடைய அளவிற்கு இல்லாமல், மிகக் குறைந்த மாறுதல் செய்துகொள்ள வழிவகுக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில் வரி குறைத்திருப்பதையும், நிறையப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளித்திருப்பதையும் பாட்டாளி மக்கள்



கட்சி வரவேற்கிறது. நீண்டகாலமாக வரி செலுத்தாமல் ஏய்ப்பவர்களிடமிருந்து அதை உடனடியாக வசூலிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் சொந்தக் கட்டடம் இல்லாத சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசு, நடப்பு நிதியாண்டு முதல் படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

தமிழகத்தில் அரசு விடுதிகளில் 1970 ஆம் ஆண்டு முதல் பணியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களை முறையே 1988, 1989 மற்றும் 1991 ஆகிய மூன்று கட்டங்களாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதியில் இருப்பவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். அவர்களைப் பணிவரன்முறை செய்யும்போது, 15 முதல் 20 வருடங்கள் பணிக்காலம் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை. எனவே, அதனைப் பணிக்காலமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் சுமார் 550 பேர் தொகுப்பூதியத்தில் சமையலராக உள்ளனர். அவர்களைப் பணி வரன்முறைப்படுத்தி, காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து விடுதிகளுக்கும் இரவுக் காவலர் நியமனம் செய்ய வேண்டும்.

என் தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் வைக்கிறேன். செட்டிமாங்குறிச்சியில் மாணவர் விடுதி ஒன்றுக்கும், எடப்பாடியில் மாணவியர் விடுதி ஒன்றுக்கும் புதிய கட்டடம் கட்ட வேண்டும். சமுத்திரத்தில் புதிய மாணவர் விடுதி தொடங்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தாராளமாக மானியத்தில் கடன் வழங்க வேண்டும்.

எடப்பாடியில் கவுண்டம்பட்டிக்கும் வெள்ளாண்டிவலசுக்கும் இடையே சரபங்கா நதி செல்கிறது. இரண்டு ஊர்களுக்கும் இடையே மக்களால் சென்றுவர முடியவில்லை. அதனால், இந்த சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுகிறேன்.

எடப்பாடி தொகுதியில் இதுவரை எந்தக் கல்லூரியும் இல்லை. எனவே, அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டும்.

எடப்பாடி பகுதி விவசாயிகளினுடைய நலன் கருதி, எடப்பாடியில் அரசு சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்க வேண்டும்.

வைகுந்தம் செல்லியம்மன் கோவில் ஏரியைத் தூர்வாரி, கரையைக் கான்கிரீட் கரையாக அமைக்க வேண்டும்.

பூலாம்பட்டியையும், சித்தர் கோவிலையும் சுற்றுலாத் தலமாக்க வேண்டும். கொங்கணாபுரத்தில் அரசு நூற்பாலை ஒன்று தொடங்க வேண்டும்.

எடங்கணசாலை, பேரூரில் எளம்பிள்ளை பகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்று அமைக்க வேண்டும்.

நீண்ட காலமாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வசித்து வருகின்ற எர்ணாபுரம், பாட்டப்பன்நகர், கலர்பட்டி, கஸ்பாப்பட்டி, வைகுந்தம், காந்தி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். எடப்பாடி ஒன்றியம், கல்லூரல்காடு, குண்டுமலைக்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சாலை வசதி செய்து கொடுக்க வேண்டும். எடப்பாடி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்க வேண்டும்.

காக்காப்பாளையம் காவல் நிலையத்திற்கும், எடப்பாடி தீயணைப்பு நிலையத்திற்கும் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். அ. புதூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

எடப்பாடியில் நீதிமன்றம் தொடங்கவேண்டும்.

தமிழகத்தில் கலைஞர் அவர்கள், எரிவாயு இணைப்பு இல்லாதவர்களுக்கு, இலவச எரிவாயு இணைப்பு வழங்கி வருகிறார்கள். சத்துணவு மற்றும் ஊட்டச்சத்து மையங்களுக்கும் எரிவாயு இணைப்பு வழங்க வேண்டும்.

ஓமலூரில் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனியாக விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, மணலூர்பேட்டையில் மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிட்டவாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படுவதாகக் கூறப்படும் இலவச தையல் இயந்திரங்கள், சலவைத்



தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலவைப் பெட்டிகள், மிகவும் குறைவாக வழங்கப்படுவதாகத் தெரியவருகிறது. ஏதோ அந்த விழாவில் ஒருவர், இருவருக்குக் கொடுத்துவிட்டு மற்றவற்றை எங்கு கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதை அரசு நன்கு கவனித்து உரியவர்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

*(முற்பகல் 11-30)*

என் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ஒரு சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த வின்சர், அதாவது ஸ்டாலின் என்பவர் அமலா மேல்நிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். அந்தப் பள்ளி கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் தொடர்ந்து 100 சதவீதம் மாணவர்களைத் தேர்ச்சியடையச் செய்தது. இப்போது அவரை விரட்டிவிட்டார்கள். இப்பொழுது அந்தப் பள்ளி மற்றவர்களிடம் சிக்கிக்கொண்டுவிட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, அந்த சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த, அந்த ஸ்டாலின் அவர்களிடம் அந்தப் பள்ளியை ஒப்படைத்து, மீண்டும் அந்தப் பள்ளி சிறப்பாகச் செயல்பட ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் உள்ளிட்ட மூன்று மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

27 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்திற்கு உச்ச நீதிமன்றத்திலிருந்தே ஆபத்து வந்தபொழுது, தமிழகத்தினுடைய எதிரும், புதிருமான எல்லாக் கட்சிகளையும் ஒரே நாளில் ஒருங்கிணைத்து, தமிழகத்தினுடைய ஏழு கோடி மக்களையும் ஒரே மனிதனாக நிற்க வைத்து, நம்முடைய எதிர்ப்பை வலுவாகவும், பலமாகவும் பந்த் போராட்டத்தின்மூலமாக உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்வதற்குக் காரணமாக விளங்கிய நமது தமிழகத்தினுடைய மதிப்பிற்குரிய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையினுடைய அமைச்சர்களுக்கு என்னுடைய வணக்கத்தைப் பணிவோடு நான் சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு நாட்டினுடைய இன ரீதியாக, மத ரீதியாக, மொழி ரீதியாக சிறுபான்மையினராக இருக்கக்கூடிய மக்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அந்த அரசினுடைய தன்மை தீர்மானிக்கப்படும். அந்த வகையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகமும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியும், தேர்தல் நேரத்திலே மதமாற்றத் தடைச் சட்டத்தை நாங்கள் இரத்துச் செய்வோம் என்று கூறியதை ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அத்தகைய சட்டத்தை இரத்துச் செய்தார்கள். அதுமட்டுமல்லாமல், இடஒதுக்கீடு குறித்து, இப்பொழுது இந்தக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகச் சிறந்த ஓர் அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். அ.தி.மு.க.வினுடைய, பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள்கூட எழுந்து நின்று உச்ச நீதிமன்றத்தினுடைய வழக்கையும் விரைவிலே நடத்திமுடித்து அவர்களுக்கு முழுமையான இடஒதுக்கீட்டைக் கொண்டு வர வேண்டும் என்று கருத்துச் சொல்லியிருப்பதன்மூலமாக அவர்களும், ம.தி.மு.க.வும்கூட இங்கே ஆதரவு தெரிவித்திருக்கக்கூடிய, ஒன்றுபட்டு நிற்கக்கூடிய, அந்தச் சிறுபான்மை மக்களுக்கான இடஒதுக்கீடு சட்டமும், அவர்களுக்கான தீர்வும் குறித்த அந்த அறிவிப்பு என்பது தமிழகத்தினுடைய அனைத்துத் தரப்பு மக்களாலும் நிச்சயமாக வரவேற்கப்படும் என்ற முறையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் அவர்களிடத்திலே, இந்த அரசாங்கத்தை, சிறுபான்மை அரசு என்று இனியாவது நீங்கள் சொல்லாமல் இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை, சிறுபான்மை என்ற சொல் என்பது சிறுபான்மை மக்களிடம் தாங்கள் ஏதோ குற்றம் இழைத்தவர்களாக அல்லது கேலி செய்வதற்குரிய ஒரு வார்த்தையாக இருக்கிறோம் என்ற ஒரு தாழ்வு மனப்பான்மையை தொடர்ந்து எழுப்பிவிடும். ஆகவே, சிறுபான்மை என்ற சொல் என்பது, சிறுபான்மை மக்களுக்கு எதிரான சொல் ஆகும். அந்த வார்த்தையைத் தவிர்க்க வேண்டும். அரசின்மீது நியாயமான உணர்வோடு



விமர்சிப்பதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆகவே, இந்த அரசு என்பது சிறுபான்மையினரைப் பாதுகாக்கக்கூடிய, சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய ஓர் அரசுதான் என்பதனை இந்த நேரத்திலே நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

நிதிநிலை அறிக்கையினுடைய இரண்டாவது பத்தியிலேகூட தி.மு.க. உள்ளிட்ட தோழமைக் கட்சிகள் இலட்சிய ஒற்றுமையுணர்வோடு இந்த அரசை ஆதரிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய இரண்டு விஷயங்கள். மத நல்லிணக்க உணர்வை இந்தச் சமூகத்திலே தொடர்ந்து ஊட்டுவது. இந்த அரசினுடைய நிர்வாகம் மதச்சார்பற்ற தன்மையோடு இயங்குவது இதுதான் தோழமைக் கட்சிகளினுடைய உயர்ந்த இலட்சியம் என்று நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது பத்தி சொல்கிறது.

அதிலேயிருந்துதான், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும்சரி, சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும்சரி, இந்த உயர்ந்த இலட்சியங்களுக்காகத்தான் அரசியல் உறவு கொண்டிருக்கிறது. அதுதான் இந்தத் தோழமை உணர்வையும் இந்த அரசுக்கு ஆதரவையும் இப்போதும் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதனை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏனென்று சொன்னால், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் இந்து சமூகத்தில் வர்ணாஸ்ரமக் கொள்கையைச் சித்தாந்த ரீதியாக எதிர்க்கக்கூடிய இயக்கம் திராவிட இயக்கம் மட்டுமல்லாமல் மார்க்சிய இயக்கமும்தான். அப்படிப்பட்ட ஒரு சித்தாந்த எதிர்ப்பு என்ற உணர்விலிருந்து ஒன்றுபட்ட இந்தத் தோழமை என்பது தமிழ்நாட்டினுடைய சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பதோடு மத நல்லிணக்க உணர்வை வளர்த்தெடுப்பதற்கு நிச்சயமாக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தரும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இஸ்லாமிய மக்கள் படக்கூடிய அவலங்களும், துன்பங்களும் குறித்து அங்கே சச்சார் குழுவினுடைய அறிக்கை இன்றைக்கு வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறது. நாடாளுமன்றத்திலே அந்த அறிக்கையைக்கூடப் பேசுவதற்கான வாய்ப்பு கொடுக்க விடாமல் பாரதிய ஜனதா கட்சியினர் தொடர்ந்து கலகம் செய்து ரகளை செய்து அங்கே

பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். அத்தகைய சச்சார் குழு, இஸ்லாமியப் பெண்கள், குறிப்பாக இஸ்லாமிய மாணவிகளுக்கு விடுதியில் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இஸ்லாமியப் பெண்களுக்கு தனி வாரிய அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம், அந்த நாடாளுமன்றத்தினுடைய பொது நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்திலே இஸ்லாமியர்களுடைய அடக்க ஸ்தலத்திற்கு நிலம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக திண்டுக்கல்லில் 70 ஆயிரம் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் இருக்கிறார்கள். ஆனால், நான்கே நான்கு அடக்க ஸ்தலங்கள்தான் இருக்கின்றன. இதனை வெளியே சொல்ல முடியாமல், அரசிடம் இதைக் கேட்டுப்பெறவும் முடியாமல் சிரமத்தோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, 2 ஏக்கர் தரிசு நிலத் திட்டத்தை வெற்றிகரமாக அமல்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசு, இஸ்லாமியர்களுடைய இந்த அடக்க ஸ்தலம் சென்னை போன்ற மாநகரத்திலும், திண்டுக்கல் போன்ற நகரங்கள் உள்ளிட்டு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை ஒரு குழுவின்மூலமாக ஆய்வுசெய்து அவர்களுக்கு இடத்தை வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த 21-வது நூற்றாண்டில் இஸ்லாமியர்களுடைய கல்வி என்பது மிகவும் பின்தங்கியிருக்கிறது. அவர்களுக்கு இருந்த திறந்தவெளிப் பல்கலைக்கழகம் என்பது இப்போது செயல்படாமல் இருக்கிறது. அதேபோன்று உருதுமொழி பேசக்கூடிய ஆசிரியர்கள் நியமனம் இருக்கக்கூடிய அதேநேரத்தில் அரபு மொழி பேசக்கூடிய அரபி ஆசிரியர்கள் நியமனம் என்பது இல்லை. இஸ்லாமிய மக்களுக்கு அரபி ஆசிரியர்கள் நியமனம் என்பது மிகவும் தேவை என்ற முறையிலே அதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று மேற்கு வங்க மாநிலத்தில், இஸ்லாமிய மக்களின் மாணவர்களுடைய கல்விக் கடனுக்கான வட்டியை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. வட்டியை அரசு கட்டிக்கொள்ளும். அசலை மட்டுமே இஸ்லாமிய மாணவர்கள் கட்டுகிறார்கள். அதுபோன்று தமிழகத்திலே அந்த நிலை இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் வங்கிகளில் இஸ்லாமிய இளைஞர்களுக்கும், இஸ்லாமிய மாணவ-மாணவிகளுக்கு கடனுதவி கொடுப்பதற்கான சிறப்பு அனுமதி உத்தரவு என்பதை தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் போட வேண்டுமென்று இந்த நோத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



ஏனென்றால், மத்திய அரசினுடைய வங்கிகள், குதிரைக்கு கொம்பு முளைக்க வேண்டுமென்று நிபந்தனை மட்டுமல்ல, நான்கு கொம்பாவது இருந்தால்தான் நாங்கள் கடன் உதவி செய்வோம் என்று இன்றைக்கு யாருக்குமே கடன் கொடுக்காமல் மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பல கூட்டங்களிலே வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், மத்திய நிதியமைச்சருடைய வார்த்தைகளுக்கும், வங்கிகளினுடைய செயல்பாடுகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இஸ்லாமிய மாணவர்கள். ஆகவே, இஸ்லாமிய இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் கல்விக் கடன் கிடைப்பதற்கான, வேலைக்கான கடன் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோன்று, இஸ்லாமிய சமூகத்தினுடைய ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், வெள்ளிக்கிழமைகளிலே தொழுகை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களிலே அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அப்போது, தாங்கள் சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள், ஆகவே, அனுமதி மறுக்கப்படுகிறது என்ற உணர்வுக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆகவே, விசேஷமாக அவர்களுக்கு, அரை மணி நேரமோ, ஒரு மணி நேரமோ அலுவலகங்களிலே, பள்ளிகளிலே தொழுவதற்கு அனுமதி அளிப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இஸ்லாமிய வீட்டுப் பெண் குழந்தைகள், ஆறாம் வகுப்பிலே பருவம் அடைந்தவுடனேயே நிறுத்தப்பட்டு விடுகிறார்கள். இப்போது, தமிழக அரசு அறிவித்திருக்கிற, 10 ஆம் வகுப்பு முடித்த பெண்களுக்கான 15,000 ரூபாய் உதவித் திட்டம் என்பது அவர்களுக்குச் சென்று சேரவே இல்லை என்று இஸ்லாமியப் பெரியவர்கள் வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால், அதுகுறித்த ஒரு துல்லியமான ஆய்வு நடத்திகூட இஸ்லாமியப் பெண்களுக்காக இந்தத் திட்டத்தில் ஒரு சிறு சலுகை கொடுங்கள்; எட்டாம் வகுப்பு படித்திருக்கக்கூடிய இஸ்லாமியப் பெண்களுடைய திருமணத்திற்கு இந்த அரசு 15,000 ரூபாய் திட்டத்தை அனுமதிக்கும் என்று உத்தரவிட வேண்டுமென்ற கோரிக்கையை தமிழக அரசின் முன்பாக வைக்கிறேன்.

அதேபோன்று, மாநகராட்சி, நகராட்சிகளிலே கட்டப்படக்கூடிய கடைகளில், ஒரு கடைகூட இஸ்லாமியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆகவே, அவர்களுடைய தொழில் முழுவதும் இன்றைக்கு பழைய இரும்பு வியாபாரம், பழைய சாக்கு வியாபாரம், பனியன், கைலி இவற்றையெல்லாம் சாலையோரங்களிலே கொட்டி விற்பனை செய்யக்கூடிய சிறு வியாபாரங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களை காவல் துறை துரத்தித் துரத்தி அடித்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையிலே அரசு சார்பாகக் கட்டப்படக்கூடிய வியாபாரக் கடைகளிலே இஸ்லாமியர்கள் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். பாளையங்கோட்டையிலும், ஆம்பூரிலும் பெண்களும், குழந்தைகளும் பீடி சுற்றக்கூடிய தொழிலிலே இருக்கிறார்கள். அவர்கள் அங்கே அந்தத் தொழிலைச் செய்தால்தான் வீட்டிற்கான வருமானம் வரும். திண்டுக்கல்லிலே தோல் பதனிடக்கூடிய தொழில் 100 ஆண்டுகளுக்கு மேலாக நலிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இத்தகைய தொழில்களுக்கு, 15 சதமான மத்திய அரசினுடைய ஏற்றுமதி வரி ஒருபுறம் அவர்களைப் பாதிக்கிறது. விவசாய விளைநிலங்களுக்கு 5 கோடி ரூபாயை அவர்கள் நஷ்டஈடாகச் செலுத்தி இருக்கிறார்கள்; பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கும் மின் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதெல்லாம், சிறுபான்மை இஸ்லாமியர்கள் செய்யக்கூடிய ஓரேயொரு பாரம்பரியத் தொழிலான இந்தத் தொழிலிலே, 1988-லிருந்து டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே எங்களது தொகுதி எம்.எல்.ஏ.-வாக இருந்த தோழர் S.A. தங்கராஜ் அவர்கள், கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையத்தில் மின் கட்டணத்திலே ஒரு சிறு சலுகையாவது செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அருமைத் தோழர் S.A.T. அவர்கள் மறைந்துவிட்டாலும், அந்தக் கோரிக்கை என்பது நீங்கள் நிறைவேற்றுவதற்காக இருந்துகொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அங்கே தோல் Park என்பதும், மெப்ஸ்பார்க் என்பதும் உருவாக்கப்பட்டால், பெண்கள் குறைந்தபட்சப் படிப்போடு, இஸ்லாமியப் பெண்கள் குடிசைத் தொழிலாக hand bag உள்பட தோல் பொருள்களைக்கொண்டு உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கு முன்வருவார்கள். ஆகவே, அத்தகைய கோரிக்கையையும் தாங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்திலே, தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால், ஒரு இஸ்லாமியருக்குக்கூட Teacher Training நிறுவனம் என்பது வழங்கப்படவில்லை. ஆகவே, இதுபோன்ற விஷயங்களாலேதான் கல்வியிலே அவர்கள் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள். ஆசிரியர் பயிற்சிக்கு இஸ்லாமிய மாணவர்கள், மாணவிகள் (மணியடிக்கப்பெற்றது) கவுன்சிலிங்கிற்கு வருகிறபோது, 1,050 மதிப்பெண் பெற்றிருந்தாலும், அவர்களுக்கு அதற்கான இடம் என்பது கிடைக்கவில்லை. ஆகவே, ஒரு துணை அறிக்கை என்பது எதிர்காலத்திலே இந்தச் சபையிலே வைக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் தமிழக அரசு செய்து தரவேண்டுமென்பதனை இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, கடந்த காலத்திலே 11-5-2000-ல் ஒரு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர், தற்போது இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு ஆய்வு செய்து, 69 சதவிகித இடஒதுக்கீடு கல்வி, வேலைவாய்ப்பில் எவ்வளவு சென்று சேர்ந்திருக்கிறது என்பதை அறிவதற்காக அந்தக் குழு நியமனம் செய்யப்பட்டது. வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அறிக்கையின் அம்சங்கள் எதிர்காலத்திலே தொடரப்படுமா? 7 ஆண்டுகள் கழித்து அந்த அறிக்கையினுடைய, குழுவினுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

தமிழகத்தினுடைய சலவைத் தொழிலாளிகளுக்கு அரசு ஒவ்வொரு முறையும் தேய்ப்புப் பெட்டியை மட்டுமே வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு நவீனமான காலத்திலே Iron box கொடுப்பது என்பது இப்போது சாதாரண விஷயம். Rotary Club கூட Iron box-ஐ வழங்கி விடுகிறார்கள். ஆகவே, அரசு என்பது சலவைத் தொழிலாளிகளுக்கும், முடி திருத்தக்கூடிய தொழிலாளிகளுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட இதுபோன்ற வேலையிலே, தொழிலிலே இருக்கக்கூடிய மக்களுக்குக் கல்வியும், 69 சதமான இடஒதுக்கீட்டினை வழங்கி அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம்.

**செல்வி கே. பாலபாரதி:** அடுத்ததாக, விசைத் தெளிப்பானுக்கு 4 சதமான வரி என்பது இரத்துச் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும், அதேபோன்று trade mark-பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய நெய் போன்ற பொருட்களுக்கு 12 சதவிகிதத்திலிருந்து 4 சதமாக குறைக்கப்பட வேண்டும் என்றும், பத்திரப் பதிவு உதவியாளர்கள் உட்பட அனைவரும் நல நிதியத்திலே இணைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும், வணிக வரித் துறையில் 19 ஆயிரம் கோடி ரூபாயை ஈட்டி இருக்கக்கூடிய அந்த ஊழியர்கள் மத்தியில், 520 நிரந்தரப் பணியிடங்களை அரசுக்கு surrender செய்திருக்கிறார்கள். அந்த 520 நிரந்தரப் பணியிடங்களை surrender செய்ததற்கான உத்தரவை வாபஸ் பெற்றுக்கொள்வது ஊழியர் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்ற கோரிக்கையையும் இன்றைக்கு முன்வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டும்.

ஜூட்டலுக்கு இணக்க வரியைச் சேர்த்திருப்பதைப் போன்று, பேக்கரியையும் அந்த இணக்க வரிக்குக் கீழே கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையையும், இத்தோடு வைத்துக்கொண்டு, குமரி மாவட்டத்தில் இரப்பருக்கு மதிப்புக் கூட்டு வரியோடு சேர்த்து (மணியடிக்கப்பெற்றது) ஒரு சதம் marketing வரி வசூலிப்பதைத் தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. எஸ். இராசசேகரன்:** பெருமதிப்பிற்குரிய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் இங்கே பேசுகிறபோது, மத்திய அரசு, ரிசர்வ் வங்கி சிறுபான்மையினருக்கு இப்போது கடனே



கொடுப்பது இல்லை. குதிரைக்கு நான்கு கொம்புகள் முளைக்க வேண்டுமோ என்னவோ என்கிற பொருளில் பேசினார். மத்திய நிதி அமைச்சர் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். பணமே வரவில்லை என்று சொல்கிறார். இப்பொழுது சிறுபான்மைப் பிரிவு மக்களுக்கு மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால் நிறையக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. சிறுபான்மை மக்களுக்குக் கடன், வேலூரிலே எடுத்துக்கொண்டால் 111 பேருக்கு சிறுபான்மைக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உரிய முறையில் அங்கே மனுச் செய்து இன்னும் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று அவர் கோரலாமேயொழிய, கொடுக்கப்படுவதே இல்லை என்று மாற்றிக் கூறுவது சரியான ஒரு விளக்கம் அல்ல என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன். (குறுக்கீடு) பாலபாரதி, நீங்கள் பேசியாகிவிட்டது. நீங்கள் பேசிவிட்டீர்கள். No, no. மற்றவர்கள் ஏன் சத்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடு) பாலபாரதி, சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் தெளிவான ஆய்வுக்குப் பிறபாடுதான் கூறுகிறேன். ஓர் இஸ்லாமிய மாணவன் கூட இந்த ஆண்டு, சென்ற ஆண்டு, வங்கியில் கடனுதவி பெறவில்லை என்பதை ஆதாரபூர்வமாக நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இனியாவது அவர்களுக்குக் கடன் கொடுத்தால் நன்றியுடையவர்களாக இருப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் இராசசேகரன். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மீதும் (குறுக்கீடு) மற்றும் இதர மானியக் கோரிக்கைகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். (குறுக்கீடு) அதைப்பற்றி நிறைய விவாதிக்கலாம். (குறுக்கீடு) வாங்கிக் கொடுத்தால் சரி. சில கருத்துகளை நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகின்றேன்.

குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் என்று வருகின்றபோது, இடஒதுக்கீடு என்பது மிகவும் முக்கியமானது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

முற்பகல் 11-50

**திரு. எஸ். இராசசேகரன்:** இடஒதுக்கீடு என்கின்ற முக்கியமான பிரச்சினையில் இந்த அரசு ஒரு சரியான நிலை எடுத்து, இந்த இடஒதுக்கீட்டுக்கு ஆபத்து வருகின்ற போதெல்லாம் அந்த ஆபத்துக்களை எதிர்த்து நின்று, முறியடித்து, இந்த இடஒதுக்கீட்டைப் பாதுகாத்திட, நம்முடைய முதல்வர் கலைஞர் ஒருவர்தான் இருக்கின்றார் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேதான் 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை தொடங்கப்பட்டது. அன்றைக்கும் கலைஞர்தான் முதல்வராக இருந்திருக்கிறார். அதைப்போல 1989-வது ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை தொடங்கப்பட்டது. இந்தத் துறையைத் தொடங்கியதும் நம்முடைய கலைஞர் டாக்டர் அவர்கள்தான் என்பதை இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் துறைகளினுடைய மானியக் கோரிக்கைகள் இப்போது விவாதத்திற்கு வந்திருக்கின்றன.

பொருளாதாரம் மற்றும் கல்வி மேம்பாடுகளில் இந்தப் பகுதி மக்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களைப் பொருளாதார நிலையிலும், கல்வி நிலையிலும், வேலைவாய்ப்பிலும் மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய அரசு கடந்தகாலத்திலே எடுத்து வந்திருக்கிறது. அதில் மிகவும் முக்கியமானது, கல்வி. கல்வியைப் பொறுத்தவரையில், மாணவர் விடுதிகள் என்பது மிகவும் அவசியமானது. அந்த மாணவர் விடுதிகளை பராமரித்து வருகின்றபோது, அந்த மாணவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகை, அதாவது கல்லூரி மாணவர்களை எடுத்துக்கொண்டால், 400 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. அதைப்போல, பள்ளி மாணவர்களை எடுத்துக்கொண்டால் 300 ரூபாய் கொடுக்கப்படுகின்றது. சென்ற கூட்டத்தொடரில், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, இதைப்பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன்.



மாணவர்களுக்குக் கொடுக்கின்ற அந்த உதவித் தொகை, நிதி போதாது என்று. ஆகவே கல்லூரி மாணவர்கள் என்று எடுத்துக்கொண்டால், 500 ரூபாய் கொடுக்கவேண்டும். பள்ளி மாணவர்கள் என்று எடுத்துக்கொண்டால், 400 ரூபாய் கொடுக்கவேண்டுமென்கின்ற புதிய நிலையை தமிழக அரசு, டாக்டர் முதல்வர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நிலையில் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை உச்ச நீதிமன்ற நிலையில் இருக்கிறது. இந்தியாவிலே 27 சதவீத இடஒதுக்கீடு கிடைக்குமா? அதைப்பற்றி என்ன என்பதற்கெல்லாம் உச்ச நீதிமன்றத்திலே தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது இங்கே இருக்கின்ற 69 சதவீத இடஒதுக்கீடு நிலை பெறுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். குறிப்பாக இந்த இடஒதுக்கீட்டை அமல்படுத்துகின்றபோது, கடந்த காலங்களில் பல்வேறு இடர்ப்பாடுகள் வந்திருக்கின்றன. வருமானத்தின் அடிப்படையில் இடஒதுக்கீட்டைக் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சி எடுக்கப்பட்டது. அந்த முயற்சியைத் தடுப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளெல்லாம் ஒன்று திரண்டு, வருமானத்தின் அடிப்படையில் இடஒதுக்கீடு கூடாது என்பதற்காக மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி, இப்போது அந்த இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இடஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு டாக்டர் கலைஞர்தான் தலைமையேற்று இந்த நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்கள். அப்படிப்பட்ட இந்த இடஒதுக்கீட்டை நாம் பாதுகாக்கவேண்டும், பாதுகாப்போம். பாதுகாப்பதற்கான எடுத்துக்காட்டுதான், கடந்த வாரத்தில் நடைபெற்ற முழு வேலை நிறுத்தம் - பந்த் - என்பதை இந்த நேரத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இடஒதுக்கீடு என்று வருகின்றபோது, இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக எந்த நிலையை எடுத்தாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடஒதுக்கீட்டை ஆதரித்து, அணி சேருவோம், தமிழகத்திலுள்ள மக்களோடு சேர்ந்து நிற்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போல பிற்படுத்தப்பட்டோரும், மிகப் பிற்படுத்தப்பட்டோரும் 64 சதவீத மக்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு இடஒதுக்கீடு என்பது 50 சதவீதம்தான் இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம்தான் இருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில்,

என் சொந்தக் கருத்தாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வது, இதில் மேலும் 10 சதவீதத்தைக் கூட்டி, 60 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு 20 சதவீதம்தான் இருக்கிறது. அதையும் 25 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அவர்கள்தான், மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள். கல்வி என்பது எட்டாக் கனியாகவும், கல்வி பயில முடியாத நிலையிலேயும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் 5 சதவீதம் அதிகப்படுத்தவேண்டும். இந்த 20 சதவீதம் வந்ததுகூட மருத்துவர் அய்யா அவர்களுடைய கடும் போராட்டத்தின் அடிப்படையில்தான் வந்தது. இந்த இருபது சதவீதத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். மேலும் 5 சதவீதம் அதிகரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அவர்களைக் கேட்டுக்கொள்ள நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 11-55

அதேபோல, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இன்னும் பல சாதியினரைச் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக முத்தரையர் என்றுச் சொல்லக்கூடியவர்கள் தமிழ்நாட்டிலே பல பகுதிகளிலே பல மாவட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் அம்பலகாரர், வலையர் என்கின்றவர்கள்தான் இப்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், திருச்சி மாவட்டம், கரூர் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய முத்துராசாக்கள் என்பவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, இவற்றை எல்லாம் ஒரே சாதியாக, ஒரே இனமாகக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பகுதியில் 27 சாதிகள் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். அந்த 27 சாதிகளையும் ஒன்றிணைத்து முத்துராசாக்கள், முத்தரையர்கள் என்ற பெயருடன் அவர்கள் அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதேநேரத்தில், எங்கள் தொகுதியில், எங்கள் மாவட்டத்தில், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற பகுதியில் ஒரு சிறிய குழு இருக்கின்றது. அவர்களுக்கு வளநாட்டுச் செட்டியார்கள் என்று பெயர். இந்த வளநாட்டுச் செட்டியார்கள் என்னுடைய தொகுதிக்கு உட்பட்டு இருக்கக்கூடிய பகுதியில் இருக்கிறார்கள். அதைப்போல தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றார்கள். திருச்சி மாவட்டத்தில் சில குழுக்கள் இருக்கின்றன. இவர்கள் சாதாரணமாக சில ஆயிரம் பேர்கள்தான் இருக்கிறார்கள். இவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். படிப்பிலே அதிகமாக கவனம் செலுத்துவது கிடையாது. ஆகவே, இவர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கொண்டுவர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மாணவர்கள் விடுதிகளில் பணியாற்றுகின்ற சமையலர்கள் சுமார் 600 பேர், 650 பேர் இன்றைக்கு 850 ரூபாய் சம்பளத்தில் தொகுப்பூதியம் பெற்றுக்கொண்டு கடந்த ஒன்பது ஆண்டுகாலமாக பணிபுரிந்து வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். இவர்களுக்கும் காலமுறை ஊதியத்தைக் கொடுத்து, இவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். இந்தக் கூட்டத்தொடரிலேயே நிரந்தரப்படுத்துவார்கள், காலமுறை ஊதியம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், எல்லோருக்கும் காலமுறை ஊதியத்தை அளித்து, எல்லோருக்கும் பணி நிரந்தரம் செய்யக்கூடிய இந்த அரசு, அந்த உதவி சமையலர்கள் 650 பேர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கி, பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பதிவுத் துறையைப் பற்றி ஒருசில கருத்துகளை நான் சொல்ல விரும்புகிறேன். பதிவுத் துறை என்பது மிகவும் அதிகமாக வருமானம் ஈட்டக்கூடிய துறையாக இருக்கின்றது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு முடியும்போது ஆயிரம் கோடி ரூபாய் அதிக வருமானம் பெற்றிருக்கிறது. ஆகவே, மிகப் பெரிய வருமானத்தை ஈட்டிக்கொண்டிருக்கிற இந்தப் பதிவுத் துறையை இன்னும் சீரமைக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிவுத் துறையை எடுத்துக்கொள்கின்றபோது அந்தப் பதிவுத் துறைக்கென்று தனிக் கட்டடங்கள் பல இடங்களில் கிடையாது. என்னுடைய தொகுதியில், தாலுகா அலுவலகத்தோடு இருந்து

கொண்டிருக்கிறது. ஆகவே, புதிய கட்டடங்கள் கட்டப்படவேண்டும். கட்டப்படுவதுடன், அங்கே இருக்கின்ற ஆவண எழுத்தர்கள், துணை எழுத்தர்கள் என்று எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு இடம் கிடையாது. குறிப்பாக, ஆலங்குடியில் ஒவ்வோர் ஆண்டும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உள்ளே இருந்து எழுதிக்கொண்டிருக்கின்ற அவர்களை வெளியேற வேண்டுமென்று பொதுப் பணித் துறை நிர்ப்பந்தம் செய்கிறது. ஆகவே, ஆவண எழுத்தர்களுக்கு ஒவ்வொரு பதிவுத் துறை அலுவலகத்திலும் தனியாக இடம் ஒதுக்க வேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள்தான், இன்றைக்கு ஆதாரமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல பத்திர, முத்திரைத் தாள் என்று எடுத்துக்கொள்ளும்போது முத்திரைத் தாளுக்குப் பதிலாக பணமாகவே நேரடியாகக் கட்டலாம் என்கிற யோசனையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, பத்திரப்பதிவுக் கட்டணம் என்பது இப்போது ஒரே மாதிரியாக இருக்கிறது. கிராமப்புறங்களில் ஒரு நிலையும், மற்ற இடங்களில் ஒரு நிலையும் உருவாக்கப்பட வேண்டும். கிராமப்புறங்களில் பத்திரப்பதிவுக் கட்டணத்தை குறைக்க வேண்டும். நகரப்புறங்களில் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில் அதிக அளவில் அதிகரிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்திலே வைக்க நான் விரும்புகிறேன்.

அதேபோல வணிக வரித் துறையை எடுத்துக்கொண்டால் ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். குறிப்பாக சென்ற நிதிநிலை அறிக்கையில் பல பொருள்களுக்கு வரி இரத்துச் செய்யப்பட்டது. வரிக் குறைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதையெல்லாம் நாங்கள் வரவேற்கிறோம். ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், நெய் விற்பனையாளர்கள் எல்லாம் எங்களைச் சந்தித்தார்கள். சந்திக்கின்றபோது நெய்க்கு, Trade Mark என்ற அடிப்படையில்தான் 12.5 சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். Trade Mark இல்லை என்று சொன்னால் 4 சதவீதம் வரியைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, Trade Mark என்பதை சில குறிப்பிட்டவர்கள்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, எங்களுக்கு வியாபாரம் பாதிக்கப்படுகின்றது என்ற நிலையைச் சொன்னார்கள். ஆகவே, நெய்க்கு 4 சதவீத வரியை விதித்துவிட்டு, 12.5 சதவீத வரியை



எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நண்பகல் 12-00

அதைப்போல கடலை மிட்டாய்க்கு இருக்கக்கூடிய வரியையும் இரத்துச் செய்ய வேண்டும். சாதாரண சிறு தொழில்கள் செய்து கொண்டிருக்கக்கூடியவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கடலை மிட்டாயினுடைய வரியையும் குறைக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இப்போது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் கடன் வழங்குவது எளிமைப்படுத்தப்பட வேண்டும். அந்தக் கடனை அதிகமாக 2 இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும். ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதை இரண்டு இலட்சம் ரூபாயாகக் கொடுக்க வேண்டும். அதை எளிமைப்படுத்தி அந்தக் கடன் அனைவருக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அல்லது சிறுபான்மை மக்கள்தான் இப்போது கல்விக் கடன் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் கல்விக் கடன் என்பது எட்டாக் கனியாக இருக்கிறது. ஏதாவது ஒரு காரணம் சொல்லி அந்த வங்கிகளிலே இருக்கக்கூடிய மேலாளர்கள் அவர்களை அனுப்பி விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற மாதம் அறந்தாங்கி State Bank-லே கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்லி மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தி, ஆர்ப்பாட்டம் நடந்த பிறகும் அவர்கள் கடன் கொடுக்கவில்லை. இன்னும் சொல்கிறார்கள், 'அவர் என்ன அமைச்சர் அவர் சொல்லிக் கொண்டே இருப்பார்; நாங்கள் கொடுக்க முடியாது' என்றுகூடச் சொல்கிறார்கள். ஆகவே, நிருவாகத்தைக் குறை கூறுகின்ற இந்த நேரத்தில் அந்த வங்கி மேலாளர்கள் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டுமே தவிர, எங்களுடைய மத்திய அரசு கொடுக்கிறது என்கிற வாதத்தை இங்கே வைக்கக் கூடாது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

***திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தோற்றத்தாலே சாமானியனுக்கும் ஜனநாயகம் உரித்தானது என்ற உண்மையை உணர்த்தும்விதமாய், சாமானியக் குடும்பத்தில் பிறந்த என்னை தமிழகத்தின் உயர்ந்த இடமான நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் வெற்றி பெறச் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் இரண்டாவது முறையாக உரையாற்ற வாய்ப்பளித்த வாழும் தமிழ் அன்னையை, நம் முதல்வரை வணங்குகிறேன்.

அரிமா நோக்கின் அவசியத்தையும், தேவையையும் எதிர்வரும் தலைமுறைக்கும் எடுத்துரைத்து, விறுபாய்ச்சும் விரிவுரையாளர்களை உருவாக்கிய இனமானப் பேராசிரியர் பெருந்தகையை வணங்குகிறேன்.

திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறையின் வழிகாட்டியாகவும், மனித குல மகான்களான புத்தர் மற்றும் பெரியாராய் வாழும் வரலாற்றுத் தலைவரின் வழித்தோன்றல் என்பதை மெய்ப்பிக்கும்வண்ணம் புத்தருக்கு அரசு விழா கண்ட சிந்தனையின் சிகரமே, எங்கள் வழிகாட்டியே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியாருக்கு நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1920 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழ்நாட்டில் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வாழும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் ஒரு பிரிவினரான பிரமலைக்கள்ளர் சமுதாயத்தை ரேகைச் சட்டம் என்ற ஒன்றைப் போட்டு அந்த மக்களுடைய வாழ்வுரிமை, சுதந்திரம் பாதிக்கப்பட்ட காலத்தில் அவற்றை மீட்டெடுத்த பெருமை எல்லாம் நீதிக் கட்சியைச் சாரும் என்று சொன்னால், அதன் வழித்தோன்றலாக வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்களும், இந்த நாட்டிற்கும், இந்த இனத்திற்கும், இந்த மண்ணுக்கும், இந்த மக்களுக்கும், நாகரீகத்திற்கும் செய்த படிப்படியான பணிகளை எடுத்துக் கூறுவதில் வரலாற்றுச் சிறப்புமிகு நாளாக இந்நாளும் திகழ்கிறது என்பதைக் கூறினால் அது மிகையாகாது.

தலைவர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு சமூக நீதியை அடைவதற்கு சட்டத்தின் வாயிலாக இத்துறையை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்ற ஒன்றை உருவாக்கி, அதன் பிறகு மூன்றாவது முறையாக



முதல்வரானபொழுது 1989 ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை என்ற ஒன்றையும் உருவாக்கி, இச்சமுதாய மக்களை கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் அடையச் செய்ததோடு, எதிர்வரும் தலைமுறையினரும் வாழ்வு மற்றும் அல்லாது அனைத்து சமூக மக்களோடும் பொருளாதார ரீதியாகவும், இணக்கமாகவும் வாழ்வதற்கு படிப்படியாக பல்வேறு துறைகளை உருவாக்கி அவற்றின் வாயிலாக பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட, சீர்மரபினருக்கு அவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளை ஒதுக்கி அவற்றின் வாயிலாக நிதிகளை குழுக்கள் வாயிலாகவும், ஆணைகளின் வாயிலாகவும் வழங்கி, இப்போது நாட்டில் ஓரளவு சமூக நீதியை அடையும் நிலையை எட்டியிருக்கிறது என்று சொன்னால் அது கழகத்தின் சாதனை, தலைவருடைய அணுகுமுறை என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மைய அரசின்கீழ் உயர் கல்வியில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு நிறைவேற்றியதில் இவ்வரசின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். மேலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து பாதுகாப்போம் என்று உறுதிபூண்டிருக்கின்ற கழக அரசின் தோற்றமும், நோக்கமும், கொள்கையும் இதில் உள்ளடங்கி இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பிற்பகல் 12-05

கல்வி வளர்ச்சியே ஒரு சமுதாய நிலையை மாற்றக்கூடிய சக்தியாகும் என்பதை நன்கு அறிந்த தலைவர் அவர்கள், இத்துறைக்கு ஒதுக்கும் நிதியில் சுமார் 80 சதவீதம் கல்விக்காகவே ஒதுக்கியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இம்மக்களுடைய கல்வி வளர்ச்சியில் சிந்தனை ஆற்றலையும், பகுத்தறிவு ஆற்றலையும் வளர்த்து, நாட்டை நல்வழிப்படுத்துவதற்கான திட்டங்களில் ஒன்று கல்வி வளர்ச்சி என்றால் அது மிகையாகாது. அதற்காக ஒதுக்கப்படும் நிதிகளில் குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்குகின்ற இல்லங்களானாலும் சரி, கல்வித் துறையானாலும் சரி, அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காக, மாணவர்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக, பல்வேறு நிதிகளை ஒதுக்கி, அவ்வப்போது இவ்வரசு வரும்போதெல்லாம், முக்கியத்துவம் வழங்குகிறது என்பது இம்மாமன்றமும், நாட்டு மக்களும் நன்கு அறிந்த ஒன்றுதான்.

தொடர்ந்து மக்களுக்குப் பணியாற்றும் தலைவரின் இச்செயல்களால், எதிர்காலத்தில், சமுதாயத்தில் பல்வேறு நலத் திட்டங்களோடு, சமூக இணக்கத்தோடு ஒரு சமதர்ம ஜனநாயகத்தை அடைவதற்கான வழிகளில் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கின்றவர் தலைவர் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

குறிப்பாக, இத்துறை, தொடர்ந்து சமுதாயத்தின் நலத் திட்டம், சமூக நலனில் அக்கறை கொண்ட ஒரு துறையாக இருக்கிறது. அதிலும் சமூக நீதிக்கான ஒரு துறை என்றால் அது மிகையாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையை எடுத்துக்கொண்டால் அரசின் பல்வேறு துறைகளிலும் இத்துறைதான் தலையாய வருவாய் ஈட்டி, பல்வேறு நலத் திட்டங்களுக்கும், அரசின் நலத் திட்டங்களுக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும், அதிக வருவாயை, நிதியை ஈட்டுகின்ற ஒரு துறையாக விளங்குகிறது. ஆகவே, இத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த, இத்துறை, மக்களோடும், அதிகாரிகளோடும் எந்த அளவிற்கு இணக்கமாக இருக்க வேண்டும், உண்மைகள் வெளிவரவேண்டும் என்பதற்காக தலைவர் அவர்கள், ஆட்சிக்கு வரும்போதெல்லாம், இத்துறையின் செயல்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில், மேலும் புகார்கள், குறைகள், வரி ஏய்ப்பு போன்ற விவரங்களையெல்லாம், பொதுமக்கள் தங்களுடைய ஆலோசனைகளை வணிக வரி ஆணையரிடம் நேரடியாகத் தெரிவிக்க வசதியாக, தொலைபேசி எண்களையும் பொதுமக்களுக்கு அறிவித்து, அவற்றின் வாயிலாக பல தகவல்களையும் பெற்று, நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து உண்மைகளையும், வாய்மையையும், நல்ல எண்ணங்களையும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

அதோடுமட்டுமல்லாது, இத்துறையின் வருவாயை வைத்துத்தான் பல்வேறு நலத் திட்டங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. ஆகவே, இத்துறையின் வருவாயை மேலும் அதிகரிக்கும்வண்ணமாக, இத்துறையின் பணி மற்றும் நிருவாகம் வணிகர்களின் ஒத்துழைப்பைச் சார்ந்துள்ளது என்ற காரணத்தால், வணிகர்களின் நலன் நோக்கி, வணிகர்களின் எதிர்கால நலன் நோக்கி, பல்வேறு நல வாரியங்களை அமைத்த தலைவர் அவர்கள், 28-2-2007 வரை, குடும்ப உதவிகள் முதல், மாணவர் மதிப்பெண் ஊக்குவிக்கும் திட்டம் வரை, சுமார் 81 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய்க்கு 430 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இவ்வரசின் சாதனைகளில் இதுவும் ஒன்றாகும்.



தொடர்ந்து பல்வேறு சட்டங்களை இயற்றி, குறிப்பாக, வணிக வரிச் சட்டங்களுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956, தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939, தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1930, இப்படிப் பல்வேறு சட்டங்களை, பல்வேறு துறைகளுக்கும் சட்டத்தின் வாயிலாக அவற்றைத் தெளிவாகவும், உண்மையாகவும் மக்களுக்கு எடுத்துரைக்கும்வண்ணமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, உரிய வரிகளை வசூல் செய்து, செவ்வனே செயல்படுகின்ற அரசாகத் திகழ்கிறது என்பது மட்டுமல்லாது, இந்திய திருநாட்டிற்கே வழிகாட்டுகின்ற அரசாகவும், வரி வசூல் செய்து, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நல்ல அரசுகளில் இது முக்கியப் பங்கு பெறுகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, தேயிலை மற்றும் தொழிற்சாலையை நவீனப்படுத்தும்வண்ணமாக ரூபாய் 89 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு தொகுதி மக்கள் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், தலைவர் அவர்கள், பழங்குடியின மக்களுக்காக ஒரே மாதத்தில் சுமார் 4 ஆயிரம் இலவச மின்சார இணைப்பு வழங்கி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கியதற்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பகாசூரன் மலைக்கு சாலை வசதியில்லை. இப்பகுதியானது சுற்றுலாத் தலங்களில் முக்கிய இடம் வகித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் சாலை வசதி இன்னும் சரிவர இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தெங்குமரஹடாவிற்கு மோயாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டும். அப்பகுதியில் சுமார் 1,500 பேர் வாழ்கிறார்கள். நீண்டகாலமாக சாலை வசதி இல்லாமல் அப்பகுதி மக்கள், பள்ளி, கல்லூரிகள் செல்ல கஷ்டப்படுகிறார்கள். மழைக் காலங்களில் ஏதோ தீவில் வாழ்வது போல் இருக்கிறார்கள். ஒரு பாலம் அமைக்குமாறு வேண்டுகிறேன்.

குன்னூர் பகுதியில் இருந்து சுமார் 1.5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சோலடா மட்டத்திற்கு, வனத் துறையின் எவ்வித இடையூறும் இன்றி சாலை அமைப்பதற்கு வசதி இருந்தும், அவர்கள் அதை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்ய வேண்டும். அந்த மக்கள் மகப்பேறு காலங்களிலும் மருத்துவமனைக்குச் செல்லும்போதோ அல்லது வயதானவர்களை எடுத்துச் செல்லும்போதோ தொட்டிலில் கட்டித் தூக்கிச் செல்ல வேண்டிய ஒரு அவல நிலையில் அந்த மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்பகுதிக்குச் சாலை அமைக்குமாறு வேண்டுகிறேன்.

மேட்டுப்பாளையம்—கோத்தகிரிக்கு இடையில், குளிர்ப்பிரதேசம் என்ற காரணத்தால் இயற்கை உபாதைக்கும், மக்கள் சிற்றுண்டிச் சாலையில் டீ அருந்திச் செல்வதற்கும் வசதியாக, இடையில் வனத் துறையினர், நெடுஞ்சாலைத் துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் ஆகிய மூன்று துறைகளும் சேர்ந்து, அந்தப் பகுதியில், பர்லியாரில் இருப்பது போன்று பொதுவான ஒரு பாத்ரூம் வசதி மற்றும் சிற்றுண்டி சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜெகதளா பேரூராட்சியில், உதயம் நகர் என்ற பகுதியில் கழிவு நீரகற்ற வழிவகை இன்றி, பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை உரிய அதிகாரிகள் வைத்து ஆய்வு செய்தபோது, அவர்கள் பட்டா நிலம், தன்னுடைய சொந்த நிலம் என்கிறார்கள். ஆனால், பொது நலனுக்காக, யாருக்கும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லை. ஆகவே, அதையும் ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

உலிக்கல் பேரூராட்சிப் பகுதியில், பாரதி நகர், கக்காச்சி, பில்லூர் மட்டப் பகுதியில் மின்சாரப் பற்றாக்குறை உள்ளதாக பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதால், அங்கு துணை மின் நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன்.

குன்னூர் மிகப் பழமையான நகராட்சி. பேருந்து நிலையம் விரிவாக்கம், தினசரி மார்க்கெட் விரிவாக்கம் மற்றும் குன்னூர் நகர மக்களின் எதிர்கால நலன் கருதி, குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வுக்கு உதகை அருகில் உள்ள காமராஜர் Dam-லிருந்து, தண்ணீர்



கொண்டு வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு, வரலாறு என்று நேற்றைய செய்தியை, செய்தியின் முக்கியத்துவத்தை நாளைய சமூகத்திற்கு எடுத்துரைக்கும் அதேநேரத்தில், இச்சிறப்புமிகு பேரவையில் உயிரோட்டமுள்ள செம்மொழித் தமிழை, உயிரோட்டமுள்ள அணுசக்தி வாழ்த்திட, இப்பேரவையை உயிரோட்டம் பெறும் கண்கொள்ளாக் காட்சியை நாம் அனைவரும் காண இருக்கிற காலக்கட்டத்தில், இச்சிறு அடியேனுக்கும், சமூக நீதிக்கு வித்திட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் மற்றும் பதிவுத் துறையில் பேச வாய்ப்பளித்து, "விதிவிட்ட வாழ்வு" என்ற நிலைதன்னை மாற்றி, எண்ணம் போல் வாழ்வு" என்ற யதார்த்த நிலையை இம்மாமன்றம்மூலம் மனித குலத்திற்கு வழங்கிய பொன்விழாத் தலைவரை, அன்றே 50 ஆண்டுகளுக்கு முன்பு இந்நாடாளுவதற்கும், இந்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கும் இனம் கண்டு, அன்றே வெற்றி பெறச் செய்த குளித்தலை தொகுதிவாழ் பொது மக்களுக்கு நன்றி கூறி, பொன்விழாத் தலைவரை வணங்கி, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹசன் அலி.

***திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் எல்லோருக்கும் சாந்தியும் சமாதானமும் உண்டாகுவதாக. கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதிலே, கலைஞர் இன்றைக்கு வாக்குறுதிகளுக்கு மேல் வாக்குறுதியாக கொடுத்து இன்றைக்கு சிறுபான்மை மக்கள் எல்லாம் தங்களுடைய இதயத்திலே, இன்ப ஊற்றுக்களைச் சுமந்தவர்களாகச் செல்லப் போகின்றோம். தேர்தல் சமயத்திலே, அன்னை சோனியாவினுடைய தொண்டனாக நான் தேர்தலிலே நின்றபோது ஐயா அவர்களுடைய வாக்குறுதியான சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு என்பதைச்

சொல்லித்தான், நான் சிறுபான்மையினரிடம் வாக்களிக்குமாறு கேட்டேன். திருச்சியிலே நடந்த மாநாட்டிலே, சேது சமுத்திரத் திட்டம் எப்படி தமிழர்களின் நீண்ட நாள் கனவாக இருக்கின்றதோ, அதேபோல் சிறுபான்மையினர் கிறிஸ்துவ சமுதாயத்திற்கும், இஸ்லாமிய சமுதாயத்திற்கும், இந்த இடஒதுக்கீடு நீண்ட கனவாக இருக்கிறது. நான் ஆட்சிப் பொறுப்பேற்பேனேயானால் உடனடியாக அதை நிறைவேற்றுவேன் என்று சொன்ன கலைஞர், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலும் இதை இடம் பெறச் செய்தார்கள். இப்போது உள்ள நிலையிலே கலைஞர், தன்னைச் சிறுபான்மையினர் எப்படி நம்புவார்கள், அவர்களுக்கு நான் என்ன செய்வேன் என்று நினைக்கிறார்களே! கலைஞர், கலைஞர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைவிட கலைஞர்மீது, சிறுபான்மையினர் வைத்திருக்கிறார்கள். அது கலைஞருக்கும் தெரியும், எனக்கும் தெரியும், அவர்களுக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, இந்த இடஒதுக்கீடு என்பது இன்றைக்கு இங்கே சட்டமன்றத்திலே நான் உங்களிடம் கேட்க வேண்டுமா அல்லது நீதிமன்றதிலே போய் எனக்கு இடஒதுக்கீடு கேட்கவேண்டுமா என்கின்ற ஒரு நிலை இருக்கிறது. ஏனென்றால் Judiciary-யிலே போய்க் கேள் என்றுதான் இப்போது சொல்கிறார்கள்.

*பிற்பகல் 12-15*

இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும் நீதிமன்றத்தினுடைய நிலை எப்படியிருக்க வேண்டுமென்றால், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் யார் என்பதை எப்படி அறிய வேண்டும் என்று சொல்லுகின்ற தகுதி நீதிமன்றங்களுக்கு இல்லை. அதற்கு நீதிமன்றங்கள் ஏற்புடையவும் அல்ல. ஏனென்றால் சமுதாயத்தில் யார் யார் எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளார்கள் என்பதை அளவிடக்கூடிய அளவுகோல் எதுவும் நீதிமன்றங்களிடம் இல்லை. இதற்கு நீதிமன்றங்கள் சமுதாயத்திலுள்ள மக்களுடைய ஏற்றத்தாழ்வுகளிலிருந்து ஒதுங்கிருப்பதே காரணம். இதை நான் சொல்லவில்லை. நீதியரசர் சின்னப்ப ரெட்டி அவர்கள், வசந்தகுமாரினுடைய வழக்கிலே சொல்லியிருக்கிறார். அவருடைய வார்த்தையிலே சொல்லப்போனால் "Courts are not necessarily most competent to identify the backward classes or to lay down guidelines for their identification, except in a broad and general way. We are not equipped for that. We have no legal parameters to measure social backwardness. We are truly removed from the people, particularly those of gradation and degradation."



Also Justice Desai, in the very same case made a review of the earlier judgements pronounced by the Supreme Court and stated that "they focus the dithering and vacillation on the part of the Judiciary in dealing with the question of reservation in favour of socially and educationally backward classes. He further observed that, Judiciary retained its traditional blind-fold on its eyes and thereby ignored the perceived realities of the people." இந்தக் கண்களிலே, "நீதி தேவதையினுடைய கண்களிலே கட்டியிருக்கிறார்களே கருப்புத் துணி அதை யார் என்று பார்க்காமல் சம நீதி செய்வதற்கு. ஆனால், இன்றைக்குக் கட்டியிருக்கும் கருப்புத் துணியோ இந்த மக்களிடமிருந்து விலக்கிவைப்பதற்கு. இந்த மக்களைப் பார்க்கக்கூடாது என்பதற்காக கட்டி வைப்பது என்று." இப்படி எத்தனையோ இருக்கின்றன. இவற்றை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்று அவற்றையெல்லாம் மீறி முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு செய்வதில் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் எந்தவிதச் சட்டச்சிக்கலும் இல்லை. ஏற்கெனவே தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவீதம் இடஒதுக்கீடு உள்ளது. மண்டல் ஆணையம் தொடர்பான வழக்கில் முஸ்லிம்கள் 94.61 சதவீதமும், கிறிஸ்தவர்கள் 79.83 சதவீதமும், பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளார்கள் என்று உச்சநீதிமன்றமே கூறியிருக்கின்றது. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பு என்.எஸ்.எஸ்.ஓ—தேசிய மாதிரி ஆய்வு நிறுவனங்களை மேற்கோள் காட்டி தமிழக முஸ்லிம்கள் 93.3 விழுக்காடு, பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என சச்சார் குழு அட்டவணை 10-ல் 3 ஆம் பாகத்தில் 204 வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் இதைப் பார்க்கலாம். கேரளாவிலே உள் ஒதுக்கீடு வழங்குவதிலே எந்த இடர்பாடும் எழவில்லை. கர்நாடகாவிலே சிறுபான்மையினருக்கு உள் ஒதுக்கீடு வழங்குவதிலே எந்த இடர்பாடும் எழவில்லை. அதுபோல இந்த இடஒதுக்கீட்டுக்கு அரசியல் சாசனச் சட்டத் திருத்தமோ தேவையில்லை. 2007-2008 ஆம் ஆண்டு பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் வளர்ச்சிப் பணிக்களுக்காக தமிழக அரசு செலவிடும் மொத்தத் தொகையில் 15 சதவீதத்தை மத ரீதியான சிறுபான்மையினருக்கு மேற்கு வங்காளம் ஒதுக்கியிருப்பதுபோல, தமிழக அரசும் ஒதுக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிபதி இராஜேந்தர் சச்சார் அவர்களுடைய குறிப்பிலே மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது, 25 சதவீதம் பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற முஸ்லிம் சமுதாயக் குழந்தைகள் பள்ளிக்கே செல்வதில்லை. அப்படியே சென்றாலும் பாதியிலேயே அந்தப் பள்ளிப் படிப்பை

விட்டுவிடுகிறார்கள். இதைக் களைவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலாவதாக, முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளிலே மானியங்களும், ஊக்கத் தொகைகளும் அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளுக்கு, வழங்கப்பட வேண்டும். அவர்கள் நடத்துகின்ற தரமான பள்ளிகளை தமிழக அரசே முன்வந்து நடத்த வேண்டும். அதிலும் குறிப்பாக, மாணவிகளுக்கு என்று தனியாகப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். அவர்கள் தங்கும் விடுதிகளும் அமைக்கப்பட வேண்டும். தமிழ் வழியில் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளிலே அவர்கள் தொடங்கும் புதிய வகுப்புகளுக்கு மானியம் அளிப்பதில்லை என்ற முடிவை, அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல தமிழ் வழியிலே முஸ்லிம் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படும் பாடங்களுக்கு மானியம் அளிப்பதில்லை என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியிலே தொழிற் பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும். தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்வதற்கு என்று ஒரு வரைமுறை இருக்கிறது. அதாவது 8-வது படித்தால் அவர்கள் சேரமுடியும் என்ற நிலையை உருவாக்கினால்தான் அங்கே இந்த பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற மாணவர்கள் சேர்வதற்கு வகை செய்யப்படும்.

பிற்பகல் 12-20

நவீன உயர் கல்வி. சிறுபான்மையினரால் நடத்தப்படும் பொறியியல் மற்றும் உயர் தொழிற்கல்வி நிறுவனங்களில் நலிவுற்ற சிறுபான்மை மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் படிக்கவும் முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சிறுபான்மையினர் தொடங்கும் பள்ளிகளுக்கு மானியம் வழங்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு சார்பாக பல்வேறு பணியாளர்களைத் தேர்வு செய்யும் குழுக்கள் இருக்கின்றன. இவற்றில் முஸ்லிம்களுக்கு கண்டிப்பாக பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். சச்சார் குழு பரிந்துரையின் அடிப்படையில் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் இவற்றில் அந்த இடங்களிலே உள்ள சிறுபான்மையினருக்கு ஊக்கத் தொகை வழங்கிட வேண்டும்.



அரசின் மானியங்களையும், ஊக்கத் தொகையையும் பெற்று நலிந்த பிரிவு சிறுபான்மையினருக்கு வாய்ப்பளிக்காமல் உள்ள பள்ளிகள், பல்கலைக்கழகங்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மத ரீதியாக சிறுபான்மையினருக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகை மிக மிகக் குறைவு. உதவித் தொகையையும், பயனாளிகள் தொகையையும் பெருக்கிட இந்த அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களில் 4.1 விழுக்காடு முஸ்லிம்கள். இதைச் சொல்லும்போது மொத்தத் தமிழக மக்கள் தொகையிலே 5.66 விழுக்காடு முஸ்லிம்கள் என்பதைக் கருத்தில்கொண்டு பார்த்தால் இந்தக் கொடுமை உங்களுக்கு விளங்கும்.

சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கான நிதியைப் பன்மடங்கு உயர்த்த வேண்டும். இதற்கு நீங்கள் அளிக்கும் கடன்களுக்கு வட்டி வசூல் செய்கின்றீர்கள். வட்டி வசூல் செய்வது ஒரு சிறிய தொகையானாலும்கூட, முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், வட்டி கொடுப்பதும், வாங்குவதும் மத ரீதியாகத் தடைப்படுத்தப்பட்ட ஒன்று. ஆகவே நீங்கள் என்ன செய்யலாம் என்றால், நீங்கள் அளிக்கும் கடன்களுக்கு வட்டியிலிருந்து விலக்களித்து--மேற்கு வங்கத்திலே செய்திருக்கிறார்கள்--இதற்கு சேவை வரி ஒன்றைச் செய்யலாம். சேவை வரி என்று சொன்னால் தயங்காமல் அதை வாங்க முடியும். ஆகவே அதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

முஸ்லிம்களுடைய அவல நிலையை நீங்கள் அறிய வேண்டுமென்றால், 1-1-2006, அதாவது சென்ற வருட தமிழக அரசின் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தாலே உங்களுக்கு விளங்கும். 296 IAS அதிகாரிகளில், வெறும் 10 பேர்தான் முஸ்லிம்கள். 231 IPS அதிகாரிகளில் வெறும் 10 பேர்தான் முஸ்லிம்கள். அதிலும் இருவர் ஓய்வு பெற்றுவிட்டனர். 2007-ல் குடிமைப் பணியில் 540 அலுவலர்களில் வெறும் 17 பேர்தான் முஸ்லிம்கள். அவர்களில் 3 பேர் ஓய்வு பெற்றுவிட்டனர்.

போக்குவரத்துத் துறை, கல்வித் துறை, சுகாதாரத் துறை, தமிழக அரசின் புள்ளிவிவரத்தைப் பார்த்தால் எத்தனை சதவீதம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது இன்றைக்குக்கூட விளங்கும். இதை நீங்கள் பார்த்தால் தெரியும். போக்குவரத்துத் துறையிலே A பிரிவிலே zero percent. எல்லாத் துறைகளிலும் zero percent தான் இருக்கிறது.

இப்போது சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டாலும் அதற்கு சட்டபூர்வமான அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. தமிழக அரசு, அதை கவனத்தில் எடுத்து சிறுபான்மையினர் ஆணையத்தை Statutory level, சட்டபூர்வமாக அதைச் செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

சச்சார் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என்ற கலைஞர் அரசின் அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். நாங்கள் முக்கியமாக வரவேற்கிறோம். அவர்கள் நிறைய சொல்லியிருக்கிறார்கள்; செய்வார்கள். இதில் சுட்டிக்காட்டியுள்ள கேரள இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி தமிழகத்தில் கிறிஸ்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு செய்ய வேண்டும். நான் இதையெல்லாம் இங்கே கலைஞரிடம் சொல்லி, 'கலைஞர் அவர்களே இதையெல்லாம் எனக்கு நீங்கள் செய்ய வேண்டும்' என்று நான் கேட்கும்போது, ஒரு கல்லூரிப் பேராசிரியரிடம் ஒரு L.K.G மாணவன் ஐயா, இப்படி, இப்படி நடக்க வேண்டுமென்று சொல்வதுபோல் இருக்கலாம். ஏனென்றால், கலைஞர் நான் சொன்ன எல்லாவற்றையும்விட கூடுதலாகச் செய்பவர். நான் சொல்வதே சிறிது. இதைவிடச் சிறப்பான திட்டங்களை வைத்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களுடைய அவல நிலையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியை வைத்து ஒன்றே ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். என்னுடைய தொகுதியிலே மண்டபம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த மண்டபம் என்ற ஊரில் ஒரு விபத்தைப் பார்ப்பதற்காக நான் சென்றிருந்தேன். என் பின்னால், 10 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் வந்தார்கள். அங்கே அ.தி.மு.க.-வினுடைய தலைவர் தங்கமரைக்காயருடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் எல்லாம் ஏன் இங்கே வந்து நிற்கிறீர்கள், உங்களுக்கு எல்லாம் பள்ளி இல்லையா என்று கேட்டேன். இல்லை, நாங்கள் எல்லாம் பள்ளிக்குப் போவதில்லை என்று சொன்னார்கள். பள்ளிக்குப் போவதில்லையா, தங்கமரைக்காயர் மாமா இதுவெல்லாம் பெரிய பாவமில்லையா, இத்தனை குழந்தைகளா பள்ளிக்குப் போகவில்லை, இவர்கள் எல்லாம் யார் என்று கேட்டேன். அநேகமாக அவர்களில் 90 விழுக்காடு முஸ்லிம் பிள்ளைகள். பத்து கிறிஸ்துவ மீனவப் பிள்ளைகள். இவர்களெல்லாம் அங்கே பள்ளிக்குச் செல்வதில்லை. ஏன் செல்லவில்லை என்று கேட்டேன். உங்களுக்கு என்ன கஷ்டம், என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன்.



பிற்பகல் 12-25

அவர்கள் சொன்ன பதில், 'நாங்கள் பள்ளிக்குப் போய்விட்டால், இங்கே சோளி பொறுக்குவதற்கும், சிப்பி பொறுக்குவதற்கும், பாசலை தொடுப்பதற்கும் யார் போவார்கள் எங்கள் வீட்டிலே? எங்களுக்கு ஒரு நாளைக்கு 100 ரூபாய் கிடைக்கிறது. அந்த 100 ரூபாயை நீங்கள் தருவீர்களா?' இதுதான் கேட்டார்கள். இதோ பாருங்கள், இன்றைக்குக் கிடைக்கும் 100 ரூபாய்க்கு, வருங்காலத்திலே தங்களுக்குக் கிடைக்கப்போகின்ற கோடி ரூபாய்களை அவர்கள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை எடுத்துச் சொல்லக்கூட இந்த முஸ்லிம் மக்களுக்கு ஆட்கள் இல்லை. அந்தச் சமயத்திலே தான், ஏதோ ஆண்டவன் போல்--நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன், வியாதியை வைத்திருக்கும் இறைவன், அதற்கு மருந்தையும் வைத்திருப்பான். இந்த முஸ்லிம்களிடம் வியாதியை வைத்து, அதற்கு மருந்தைக் கலைஞரிடம் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், கலைஞர் இன்றைக்கு முஸ்லிம்களுக்கு நல வாரியம்--பிற்படுத்தப்பட்டோருக்கும், முஸ்லிம்களுக்கும் செய்கின்றார்கள். அவர்கள் செய்கின்ற இந்த வேளையிலே (குறுக்கீடுகள்) (குறுக்கீடு) மன்னித்துக்கொள்ளுங்கள். அந்த வார்த்தை தவறியதனாலே வந்தது. அந்த வார்த்தையில் தவறில்லை, ஏதோ ஒரு தப்பைச் சொல்லிவிட்டதனாலே.

நான் கலைஞரைப் புகழவே வேண்டும். காரணம், கலைஞர் முஸ்லிம்களை அடித்துக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த ஒருவருக்கு மகுடாபிஷேகம் நடக்கும்போது ஓடிச் சென்று வாழ்த்துச் சொல்லப் போகவில்லை அல்லவா? அப்போது, கலைஞரைப் புகழ்ந்துதானே பேச வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆந்திராவிலே முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வரும்பொழுது வேறு யாருமே குரல் கொடுக்காமல் இருந்தபொழுது, இங்கிருந்து குரல் கொடுத்தார்களே, கூடாது, கூடாது என்றார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை எதிர்த்துத் தானே பேச வேண்டும்? வேறு வழி? நாங்கள் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள். அடித்தால் அழ விடாதே, அழுதால் இன்னும் அடி என்று சொன்னவருடைய மகுடாபிஷேகத்திற்குப் போனார்கள், இரண்டாவது வரிசையிலே உட்கார்ந்தார்கள். நாங்கள் என்ன சொல்ல, இப்படியெல்லாம் இரு நடக்கும்பொழுது? இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லலாம் இரு பக்கத்திலும் இப்போதுள்ள நிலைமையிலே எங்களுக்கு சச்சார் குழுவாக இருந்தாலும், எந்தக் குழுவாக இருந்தாலும்--நேற்றைக்கு நடந்த ஒரு விஷயத்தைச் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு, தொலைக்காட்சியிலே ஒரு காட்சி. நேற்று இராத்திரி ஒரு கட்சியின் தலைவர் அதிலே பேசுகிறார். பேசும்போது, 'இங்கே முஸ்லிம்களைப்பற்றி தவறான பிரச்சாரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பாலும் தேனும் அவர்களிடம் ஓடிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவ மக்களிடத்திலே கல்வி, செல்வம் பெருகி, கிறிஸ்தவர்களெல்லாம் நல்ல நிலைமையிலே இருக்கிறார்கள்.' இது நேற்று தொலைக்காட்சியிலே நடந்த நிகழ்ச்சியில் இன்றைக்கு நீங்கள் 'இந்து' பேப்பரையும், 'தினமலர்' பேப்பரையும் எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு இந்தியாவிலேயே ரொம்பக் கேவலமான முறையிலே, தொழில், வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருப்பது கிறிஸ்துவ சமுதாயம்தான் என்கிறார்கள். இதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்துவிட்டோம். இப்போது அழக்கூட சக்தியில்லாமல் இருக்கிறோம். ஆகவேதான், என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் சொல்கிறேன்.

இவற்றையெல்லாம்கூட நிறைவேற்றுவார் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும், ஐயா அவர்களுக்கு மீண்டும் இதை நினைவுபடுத்துவதற்கும், இதற்கு நீங்களெல்லாம் உதவியிருப்பதற்கும், பொன்விழா காணப்போகும் அந்த நல்ல மனிதருக்கு நாங்களெல்லாம் வாழ்த்துச் சொல்ல முடியாது. கட்சித் தலைவர்கள் மட்டும்தான் வாழ்த்துச் சொல்ல முடியும் என்று அதிலே போட்டிருக்கிறது. ஆகவே, இந்த மாமன்றத்திலே அந்த நல்ல மனிதர் எந்நாளும் எல்லா நலமும் பெற்று, அவர் வாழ்கின்ற நாளெல்லாம்-- (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறுபான்மை மக்களுடைய பாதுகாவலர். அன்றைக்கு காயிதே மில்லத் அவர்கள் சொன்னார்கள்; 'நான் இறந்துவிடுவேன், தம்பி கருணாநிதி அவர்களே, நீங்கள்தான் அவர்களுக்கு -- நான் பெயரைச் சொல்கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் சொன்னதைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன் --தம்பி, இந்த முஸ்லிம் மக்களை உங்களை நம்பித்தான் நான் ஒப்படைக்கிறேன், இவர்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அன்றைக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் சொன்ன வார்த்தையை, இன்று கலைஞர் தலைமேல் சுமந்து நிறைவேற்றுவதைப் பார்க்கும்போது, கண்ணீர் வடிக்காமல் என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) யார் செய்தார்கள் இதை? இதுநாள்வரை யார் எங்களுக்குச் செய்தார்கள்? யார் எங்களுக்குக் குரல் கொடுத்தார்கள்? எங்களுடைய குரல்வளையை நெரிப்பதிலே தானே சிலபேருக்கு ஆனந்தம் இருந்தது. அந்த ஆனந்தத்தையெல்லாம் இப்போது போக்கிவிட்டு, அவர்களையே புகழவைத்து, கலைஞர் அவர்களே நீங்கள் நீடூழி



வாழவேண்டும், நீங்கள் வாழ்கின்ற காலமெல்லாம் நீங்கள் முடியோடு வாழவேண்டும், நீங்கள் நற்குடியோடு வாழ வேண்டுமென்று வாழ்த்தி, விடைபெறுகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டியிட்டுக் கிடந்த தமிழனை அடக்கியாண்ட ஆதிக்கப்பிடியிலிருந்து விடுபட, சிந்திக்க, நாடு செழிக்க, நற்றமிழ் மணக்க, பைந்தமிழ் புகழ் பாரெங்கும் பாப்ப, தமிழ்த் தரணியில் தனியொரு இயக்கம் கண்ட, கன்னாட் கோமகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, அறிஞர்களும், சான்றோர்களும் உரைநிகழ்த்திய இந்த மாமன்றத்தில் எனது குரலும் ஒலிக்க, தமிழகத்தின் கடைக் கோடியில், கரிசல்காட்டுப் பகுதியில் பிறந்த என்னை இயக்கமறிய, மாவட்ட மாணவர் அணி இணைச் செயலாளராக்கியும், பிறகு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆக்கி, ஒன்றியம் அறிய எங்கள் குடும்பத்திற்கு ஒன்றியப் பெருந்தலைவர் பதவி கொடுத்து நாடறிய என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய ஒப்பற்ற தலைவி, எங்கள் குடும்பத்தோடு ஒன்றிய எங்கள் ஒப்பற்ற தலைவி, உலக வரலாற்றில் வாழ்கின்ற Joan of Arc, எங்கள் அம்மா தங்கத் தாரகை, இதய தெய்வம் புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைப் பாண்டிய மண்டலத்தின் திருமந்திரநகா முத்துக்களாக்கி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து எனது கன்னிப்பேச்சைத் தொடங்குகிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்ஜி-ஆர். நாடு போற்றும் இந்த நல்லவர்களின் கருத்துகள் இன்னும் மங்கிவிடவில்லை இந்த மண்ணில்; செத்துவிடவில்லை அந்தச் செப்பேடுகளில் என்பதை நிரூபிக்கும்விதமாக, ஜாதி உணர்வுகளைத் தூண்டியவர்களுக்குச் சாவு மணியடித்து, சாகசக்காரர்களுக்குச் சவுக்கடி கொடுத்து, தீவிரவாதத்தை ஒடுக்கி, காட்டுக்கொள்ளையர்களை சின்னாபின்னமாக்கி, ரௌடிகள் சாம்ராஜ்யத்தை ஒழித்து, ஜாதிக் கலவரங்களை அடக்கி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக்கிய மக்கள் சக்தி எங்கள் அடையாளம் அம்மா அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) அடையாளம் காட்டப்பட்ட சாதாரணத் தொண்டனான என்னை, ஏங்கவேண்டாம், வாடவேண்டாம், ஒட்டப்பிடாரம் தொகுதி எங்கள் அம்மாவின்

எஃகுக் கோட்டை என்று ஏறக்குறைய பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த ஓட்டபிடாரம் தொகுதி மக்களுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், கூட்டணிக்கட்சி நண்பர்களுக்கும், எனது கோடானுகோடி நன்றியை இந்த மாமன்றத்தின் வாயிலாக காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

ஓட்டபிடாரம் தொகுதி வானம் பார்த்த பூமி. ஆனால், சலுகைகள் மறுக்கப்படும் பூமியாகவே இருந்து வருகிறது. இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இதர சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்களின் சமூகக் கல்வி பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தியும், அவர்கள் சமூக அளவிலும், கல்வி அளவிலும், பொருளாதார அளவிலும், எந்த நிலையில் உள்ளார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்க ஏதுவாக மத்தியப் பிரதேச முன்னாள் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. குமாரராஜரத்தினம் அவர்களின் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்பட்டும், இஸ்லாமியரான ஓய்வுபெற்ற நீதிபதி அப்துல் வகாப் அவர்களையும் உள்ளடக்கி ஓராண்டு காலத்திற்குள் இவ்வாணையம் அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் சிறுபான்மை மக்களுக்கு அரசு இடஒதுக்கீடு அளிக்கும் என்று இதற்காக ஆணையத்தினை அமைத்து, சிறுபான்மை மக்கள் இடஒதுக்கீடு பெற வித்திட்டவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையை தட்டும் ஒலி) ஆனால், நாங்கள் அமைத்த ஆணையத்தை இரண்டு ஆண்டிற்கு நீட்டித்து இவ்வாணையத்தில் இஸ்லாமியர்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்தவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளிவிளக்கேற்ற பூமிக்கு வந்த பிறைச்சந்திரன், எங்கள் அம்மா அவர்கள் ஆட்சியில்தான் ஓட்டப்பிடாரம் தொகுதியில் கல்வி தேடி அலைந்த மாணவர்களை கரைபோட்டுத் தடுக்க நாகம்பட்டி கிராமத்தில் மனோ கல்லூரி அமைக்கப்பட்டது. ஆன்றோர் மனம் குளிர கழுகுமலை நகரம் சுற்றுலாத் தலமாக்கப்பட்டது. தென்னாட்டுத் திலகர் என்று போற்றப்படும் செக்கிழுத்த வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டது. அந்நியரை எதிர்த்த கடமை வீரன் அழகுமுத்துக்கோனுக்கு கட்டாரங்குளத்தில் மணிமண்டபம் எங்கள் அம்மா ஆட்சியில்தான் அமைக்கப்பட்டது. சுதந்திர முழக்கமிட்ட வீரத் தளபதிகளின் விடிவெள்ளி, மாவீரன் சுந்தரலிங்கத்திற்கு கவர்னகிரி கிராமத்திலே மணிமண்டபம் கட்டப்பட்டது. அவன் பிறந்த அந்த கவர்னகிரி கிராமத்திலே நானும் பிறந்திருக்கிறேன்



என்பதில் பெருமைப்படுகிறேன். ஜாதி மதமற்ற ஆட்சி நடத்திய எங்கள் அம்மா அவர்களால் கட்டப்பட்ட அந்த மணிமண்டபம் இந்த அரசு அமைந்து ஓராண்டு ஆகியும் திறக்கப்படவில்லை. அது திறக்கப்படுமா அல்லது அப்படியே மூடியேதான் இருக்குமா என்பதை இந்த மாமன்றத்தின்மூலம் அறிய விரும்புகிறேன்.

**கோரிக்கைகள்**. புதியம்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும், கயத்தாரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தையும் 30 படுக்கை வசதிகள் கொண்ட, 24 மணி நேரமும் இயங்கும், மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுகிறேன். நகர மக்களுக்குக் கிடைக்கும் சிகிச்சை, கிராம மக்களுக்குக் கிடைக்க, கிராம மக்களின் நலனே நாட்டு நலன் என்று, நல்லாட்சி நடத்திய எங்கள் அம்மாவின் ஆட்சியில்தான் ஓட்டப்பிடாரத்தில் இயங்கும் மருத்துவமனை கூடுதல் படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டு எக்ஸ்-ரே, ஸ்கேன் போன்ற வசதிகளும் உருவாக்கித் தரப்பட்டன. ஆனால், அவை எல்லாம் இயங்காத அவலநிலை இந்த ஆட்சியிலே தொடர்கிறது. எனவே, மக்களுக்கு அந்தச் சிகிச்சை வசதி கிடைத்திட உடனடி நடவடிக்கை எடுத்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

ஓட்டப்பிடாரத்தில் நீதிமன்றமும், கயத்தாறை மையமாகக் கொண்டு தாலூகா அலுவலகமும் அமைக்க வேண்டுகிறேன். ஓட்டப்பிடாரத்திலும், கயத்தாறிலும் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாகம்பட்டி கிராமத்தில் எங்கள் அம்மாவின் பொற்கால ஆட்சியில் கட்டப்பட்ட மனோ கல்லூரிக்குக் கூடுதலாக கட்டட வசதிகள் செய்திடவும், B.Com., B.B.A., மற்றும் B.Sc.,-யில் கணினி வகுப்புகள் மட்டுமே தற்பொழுது உள்ளது. மேலும், B.A., மற்றும் B.Sc.,-யில் Chemistry, Physics, Geology போன்ற பாடத் திட்டங்களை உருவாக்கித் தந்திடவும் இந்த அரசை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்குச்சாலையில் உள்ள அரசு உயர்நிலைக் கல்விக் கூடத்தை, மேல்நிலைக் கல்விக்கூடமாகத் தரம் உயர்த்திட இவ்வரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஓட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அமைத்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில் குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படுகின்ற நகரம் புதியம்புத்தூர். இங்கே நூற்றுக்கணக்கான ரெடிமேட் துணி வியாபாரிகள் உள்ளனர். இவர்கள் தினமும் மதுரை, சென்னை, கோவை போன்ற நகரங்களுக்குச் செல்கிறார்கள். எனவே, அவர்களின் வசதியைக் கருத்தில்கொண்டு, தூத்துக்குடியிலிருந்து புதியம்புத்தூர் வழியாக மதுரைக்குப் பேருந்து வசதி செய்து கொடுத்திடவும், மேலும் புதியம்புத்தூரில் ஒரு ரெடிமேட் துணி வியாபாரச் சந்தை அமைத்திடவும், இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டியிலிருந்து அழகப்பபுரம் வரை செல்லும் பேருந்தை, கூடுதலாக 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வள்ளிநாயகபுரம் வரை இயக்க இவ்வரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். விளாத்திகுளத்திலிருந்து குமாரெட்டியாபுரம் வரை சென்று வந்த பேருந்தும், கோவில்பட்டியிலிருந்து கழுகுமலை துரைச்சாமிபுரத்திற்குச் சென்று வந்த பேருந்தும், சமீபகாலமாக நிறுத்தப்பட்டுள்ளன. அவ்வழித்தடங்களில் பேருந்துகளை உடனடியாக இயக்கிட இவ்வரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள பெரும்பாலான சாலைகள், எங்கள் அம்மாவின் ஆட்சியில் போடப்பட்ட போதிலும், விடுபட்ட சாலைகளை உடனடியாகப் போட இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பட்டியிலிருந்து வண்டானம் செல்லும் பாதை, மழைக்காலங்களில் துண்டிக்கப்படுவதால், அங்கே பாலம் அமைக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

உபரியாகச் சென்று கடலில் கலக்கும் கொம்பாடி ஓடையைச் சீரமைத்து, வாய்க்கால் வெட்டி அதிலுள்ள நீரை ஓட்டப்பிடாரம் பெரிய கண்மாய் வரை செல்ல வசதி செய்து கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள 40-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும். இதை உடனடியாகச் செய்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி, கோவில்பட்டி போன்ற நகர மக்கள் மட்டுமே பருகிவந்த பரணி நீர், கோபுரத்தில் வாழும் கோமான்களுக்கு மட்டுமல்ல, குடிசையில் வாழும் ஏழைகளுக்கும் சொந்தம் என்று சொல்லி பரணியின் தண்ணீர், அந்தப் பகுதியெங்கும் கிடைத்திட



ஓட்டப்பிடாரம் தொகுதியில் சிவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்தியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், இப்பொழுது பாசன நீர் சீராகக் கிராமங்களுக்குக் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. உடனடியாக அதை நிவர்த்தி செய்து முறையாகக் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டப்பிடாரம் தொகுதியில் புதியம்புத்தூர், நடுவக்குறிச்சி, ஓட்டப்பிடாரம், சில்லாங்குளம், மேலமுடிமண், ஓட்டநத்தம், வானரமுட்டி, குமாரெட்டியாபுரம் போன்ற கிராமங்களில் குறைந்த அழுத்த மின்சாரப் பிரச்சினை உள்ளது. இதை உடனடியாகக் கவனிக்க இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

வானம் பார்த்த விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் ஓட்டப்பிடாரம் தொகுதி மக்கள், ஆண்டில் பாதி நாட்கள் வேலையின்றி வாடித் தவிக்கிறார்கள். அவர்களின் வாட்டத்தைப் போக்க ஏதாவது ஒரு தொழிற்சாலை அமைத்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நீங்கள் வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். ஆனால், தொடர்ந்து 3 ஆண்டுகள் எங்கள் அம்மா ஆட்சியில் வரி இல்லாத பட்ஜெட்தான் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) VAT வரி இந்த அரசைத்தான் வாழவைக்கிறது. ஆனால், ஏழைகளை வாட்டி வதைக்கிறது. 11 கிராம ஊராட்சிகளைக் கொண்ட ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் இதுவரை 4 கிராம ஊராட்சிகளில் மட்டுமே கலர் டி.வி. கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் ஒன்றியத்திலே குறைவான மக்கட்தொகை கொண்ட ராஜாவின்கோவில், குதிரைக்குளம், ஆவரைக்குளம், குமரெட்டியாபுரம் ஊராட்சிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. விடிந்தால் ஒருவேளை உணவுக்குக்கூட வழியில்லாத மக்கள், களியாட்டம் காணும் கலர் டி.வி. பற்றிக் கவலைப்படவில்லை. வெந்ததைத் தின்று, விதி வந்தால் சாவோம் என விட்டில் பூச்சி விளக்கிலே வாழும் மக்கள், டைடல் பார்க்கைப் பற்றிக் கவலைப்படவில்லை. விஷம்போல் ஏறும் விலைவாசி உயர்வைப்பற்றித்தான் கவலைப்படுகிறார்கள்.

எங்கள் அம்மா ஆட்சியில், கையிலே பணம் கொண்டு சென்று, பையிலே பொருள் வாங்கி வந்தார்கள். ஆனால், இன்றோ பையிலே பணம் கொண்டு சென்று, கையிலே பொருள் வாங்கி வருகிறார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் வாட்டத்தைப் போக்க, இன்று சட்டத்தை நீட்டுவோர்கள் சிந்திக்கவில்லை. ஏழைகளின் கண்ணீர், ஒன்றுக்கும் உதவாத உப்புநீர்தானே என்று அலட்சியம் காட்டும் ஆட்சியாளர்களே, ஏழைகளின் நிலை தெரியாத ஏகபோக முதலாளிகள் வாழ்ந்ததாக வரலாறில்லை. மக்களின் மனம் புரியாத ஆட்சி நீண்ட நாள் நீடித்ததாக சரித்திரமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன. மக்கள் தலைவி எங்கள் அம்மாவின் ஆட்சி மலரும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு நன்றியோடு விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) திரு. குத்தாலம் க. அன்பழகன் என்ன சொல்லுங்கள்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகிறபொழுது, அனைவருக்கும், அனைத்து இஸ்லாமிய உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. நம்முடைய எதிர்க்கட்சியிலே மட்டும் அதற்கான வாய்ப்புகள் தரவில்லை, ஏன்? நம்முடைய அம்மையார் திருமதி பதர் சயீத் அவர்களுக்கு ஏன் தரவில்லை என்பதைக் கேட்டு, (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், ஒரு நிமிடம்; அவையில் ஒரு தவறான செய்தியை நம்முடைய உறுப்பினர் பதிவு செய்து கொண்டிருந்தார். ஓட்டப்பிடாரம் தொகுதி. ஓட்டப்பிடாரம் தொகுதி அல்ல. (கூச்சல்-குழப்பம்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது எதிர்க் கட்சியில் இஸ்லாமிய பெண் உறுப்பினருக்குப் பேசுவதற்கு ஏன் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கேட்டார். திருமதி பதர் சயீத் அவர்கள் இரண்டு, மூன்று முறை கை தூக்கி Speaker-அவர்களிடத்திலே கேட்டார்கள். மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, அவருக்கு வழங்கப்படவில்லை. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) கொறடா பெயர் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் கொறடா பட்டியலில் அந்த அம்மாவின் பெயரைக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன் குறித்த இந்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், எங்கள் இலட்சியத் தலைவர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் முதலில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*1921-1922* ஆம் ஆண்டு இருந்த நீதிக்கட்சி அமைச்சரவையில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பிறப்பிக்கப்பட்ட முதல் communal G.O. அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணையை அன்றைக்கு இருந்த வெள்ளைக்கார I.P.S. அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருந்த வேளையில், டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமையில் இருந்த அந்த அமைச்சரவையில், அன்றைக்கு அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் ஆணையை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

காலி
தன்னுடைய பத்திரப் பதிவுத் துறையிலே இருக்கின்ற பார்ப்பன இடங்களில் 12 இடங்கள் இருக்கின்றன என்று சொன்னால், மிகவும் சமுதாயத்திற்கு 2 இடங்களும், பிற்படுத்தப்பட்ட, அதேபோல பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 5 இடங்களும், ஆங்கிலோ இஸ்லாமிய சமுதாயத்திற்கு 2 இடங்களும், ஐரோப்பிய இந்தியர் என்று சொல்லக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு 2 இடங்களும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஓர் இடமும் என்று அன்றைக்கு ஒதுக்கி, இட ஒதுக்கீட்டினைப் பகிர்ந்து அளிக்கின்ற முறையை இந்த நாட்டில் கொண்டு வந்தவர் முத்தையா முதலியார் அவர்கள். அதனால்தான் 'ஜஸ்டிஸ் கட்சி தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள், நினைக்காததை, செய்யாததை, செய்ய விரும்பாததை, முத்தையா முதலியார் அவர்கள் இன்றைக்கு ஓர் அதிசயத்தின்மூலம் நிகழ்த்திக் காட்டி இருக்கிறார். எனவே, தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரின் வீட்டிலும் பிறக்கின்ற பிள்ளைகளுக்கு முத்தையா என்று பெயரிடுங்கள்' என்று தந்தை பெரியார் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்.

அதைப்போல 'மதத்திலே அவனுடைய தரகு வேண்டாம். சமுதாயத்திலே அவனுடைய சூழ்ச்சிக்கு இரையாகாதே. அரசியலிலே அவனுடைய உயர்வுக்கு உழைக்காதே. திராவிட வீரனே விழி, எழு. உன் நாட்டை உனதாக்கு' என்று இந்த நாட்டு மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் Sir Pitti Theagarayar. அதைப்போலவே பனகல் அரசரும் இந்த நாட்டின் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அரும்பணியாற்றினார். இப்படி திராவிட இயக்கத் தலைவர்கள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், நீதிக்கட்சித் தலைவர்கள் எல்லாம் இடஒதுக்கீட்டுக்காக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடினார்கள்.

இன்னும் சொல்லப்போனால், மகாத்மா காந்தி அவர்கள்கூடச் சொன்னார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் முன்னேறினால்தான் இந்த நாடு முன்னேறும்; இந்தச் சமுதாயம் முன்னேறும்' என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னாலும்கூட, பல சங்கடங்கள், பல முட்டுக்கட்டைகள் அதை நடைமுறைப்படுத்துவதிலே இருந்து வந்தன. ஆனால், இருளைக் கிழித்துக்கொண்டு வெளிவருகின்ற ஞாயிறைப் போல, அதேபோல முகிலைக் கிழித்துக்கொண்டு வெளிவருகின்ற சந்திரனைப்போல, இந்த நாட்டில் பரவிக் கிடக்கின்ற, காலங்காலமாகக் கண்மூடிக்கிடந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு விடியலைக் காட்டுகின்றவகையில் இந்த நாட்டில் தோன்றியவர் தந்தை பெரியார். அவர்கள் தோன்றி ஒரு யுகப் புரட்சியை இந்த நாட்டில் ஏற்படுத்தினார். அவர் சொன்னார். 'இந்த நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு முதலில் கல்வி அறிவைப் போதிக்க வேண்டும்' என்ற அடிப்படைத் தத்துவத்தைத் தந்தை பெரியார் அவர்கள்தான் இங்கே சொன்னார்கள். அதற்குப் பிறகு அவருடைய வழியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அரும்பணியாற்றினார்கள்.

*பிற்பகல் 12-45*

அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'இந்த நர்ட்டில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு விடியல் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருக்க வேண்டும்' என்று அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். எப்பொழுது 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொல்லக்கூடிய



அளவிற்கு இந்தச் சாதிகள் ஒழிக்கப்பட்டு, ஓரே குலம் என்ற நிலைமை இந்த நாட்டில் உருவாகிறதோ, அதுவரையிலும், இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற கொள்கையை அண்ணா அவர்கள் கொண்டிருந்தார்கள்.

அதுமட்டுமல்ல. 'பசித்தவனுக்குத்தான் கஞ்சிக் கலயம் வழங்க வேண்டும். புளியேப்பக்காரனுக்கு மருந்து வட்டில் வழங்க வேண்டும்' என்ற இந்தக் கொள்கைதான் முறையானது என்ற கொள்கையையும், கோட்பாட்டையும் இந்த நாட்டிற்கு எடுத்துச் சொன்னவர் அறிஞர் அண்ணா அவர்கள். அதுமட்டுமல்ல. 'ஓநாயை வேட்டைக்காரன் கொன்றுவிடாமல் பாதுகாப்பது அல்ல நீதி, ஓநாயிடமிருந்து ஆட்டுக் குட்டிகளைப் பாதுகாப்பதுதான் நீதி' என்ற கொள்கையை இந்த நாட்டில் பரப்பியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட அண்ணா அவர்கள் இப்படிச் சொன்னதற்குக் காரணம், காலங்காலமாக இந்த நாட்டில் செல்வாக்கோடு இருந்த தமிழன், பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும், ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்தாலும், அவன் தமிழனாக இருந்த காரணத்தால், ஒரு காலத்தில் இந்த நாட்டில் கொடி கட்டி ஆண்ட தமிழன், சிங்களம், சீனம், யவனம், வங்கம், மகதம், கலிங்கம், காந்தாரம் என்று உலகின் பல மூலைகளிலும் கொடிகட்டி ஆண்ட தமிழன், போர்க்களத்திலே ஓயாத ஓலம், உலைக்களத்திலே அணையாத நெருப்பு, வாள் முனையிலே வடியாத இரத்தம், வேல் முனையிலே காயாத குடல்கள் என்று வீரத்தோடு வாழ்ந்த தமிழன், இன்றைக்கு ஒரு சிறிய கூட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி, இப்படி அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறான் என்ற வேதனையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. பெரியார் அவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டில் வெறும் 3 சதவீதம் இருப்பவர்கள்--97 சதவீதம் அது பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும் ஆதி திராவிட, ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்தாலும், இவர்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கின்ற பொழுது இந்த நாட்டில் 97 விழுக்காடு இருக்கின்ற இந்த மக்களை வெறும் 3 சதவீத மக்கள் ஆட்டிப்படைத்து வருகிறார்களே, இதென்ன கொடுமை என்று இந்த நாட்டில் இருக்கின்ற வேலைவாய்ப்புகளில், கல்வித் துறையாக இருந்தாலும், பொருளாதாரத் துறையாக இருந்தாலும், வேலைவாய்ப்பாக இருந்தாலும், நாட்டில், 100 வேலையிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னால், 3 இடங்களை மட்டும்

அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, 97 இடங்களை நாம்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஓர் இலக்கணத்தை இந்த நாட்டில் எடுத்துச் சொன்னவர் தந்தை பெரியார் அவர்கள். இப்படி பெரியாரும் அண்ணாவும் காலங்காலமாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபட்டு வந்தார்கள். அதனால்தான் முத்தையா முதலியார் அவர்களால் 1921 வாக்கில் தொடங்கி வைக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அன்றைக்கு அவர் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு விதை தூவினார் என்று சொன்னால், அந்த விதை பாழ்பட்டுப் போகாமல், பாதுகாத்து, வளர்த்து, இந்த நாட்டில் மரமாக வேரூன்றச் செய்தவர்கள், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்தான். அந்த நிலையில்தான் ஒரு காலகட்டத்தில் அன்றைக்கு உருவாக்கப்பட்ட இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு இப்போது வளர்ந்து, ஆலவிருட்சமாக வளர்ந்து, முழுமையாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்கவில்லையென்று சொன்னாலும்கூட, முழுமையாக அது பலனளிக்கவில்லையென்று சொன்னாலும்கூட, இப்போது நிலைமை ஓரளவு அன்றைய தினத்திலிருந்து பார்க்கின்றபோது மாறி இருக்கிறது.

ஒரு காலகட்டத்தில், சமீபத்தில், சில வருடங்களுக்கு முன்பு ஒரு சூழ்நிலை, இந்த இடஒதுக்கீட்டிற்கு ஒரு சிக்கல் வந்தது. 1991 என்று கருதுகிறேன். அப்பொழுது, மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் மொத்த இடஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்குமேல் இருக்கக் கூடாது என்று தடையாணையை அன்றைக்குப் பிறப்பிக்கின்றபோதே, இங்கே அப்படிப்பட்ட 69 சதவித இடஒதுக்கீட்டுக்கு ஓர் ஆபத்து வருகிற நேரத்தில்தான், இந்த சட்டமன்றத்தில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி அவர்கள் இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஓர் ஆணையைப் பிறப்பித்தார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12-50*

அதுமட்டுமல்லாமல் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்காக இங்கே பல கோரிக்கைகளை நிறைவேற்றி பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார். இந்தியாவிலேயே முதன்முதலாக பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தை அமைத்துத் தந்தவர் புரட்சித் தலைவி. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் எப்போதுமே contradictory-ஆகத்தான் பேசுவார். (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கிராமங்களில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்டவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், உரையை முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) Time கொடுப்பது என் இஷ்டம்.

**திரு. வீர. இளவரசன்:** மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் எல்லாம் கிராமங்களில் இன்னும் கல்வியறிவில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் பக்கத்துக் கிராமங்களுக்கு, நகரங்களுக்குச் சென்று படிக்க வேண்டுமானால், அவர்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று இலவச சைக்கிள் திட்டத்தை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தியவர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இப்படி பல திட்டங்கள்.

அதேபோல, சுய தொழில் வேலைவாய்ப்பு, சுய தொழில்மூலம் இந்த நாட்டிலே கிராமங்களில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தையல் இயந்திரங்களைக் கொடுத்து இங்கே ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, தொன்றுதொட்டு, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. வீர. இளவரசன். (குறுக்கீடுகள்) 3 Demands-க்கு Ministers பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Not allowed. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிருக்கும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற எங்கள் முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைச் சொல்லி, வணிக வரித் துறை, பத்திரப்பதிவுத் துறை மானியங்களின்மீது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி, தமிழகத்தில் சீராக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களில் எளிமையாகவும், சீராகவும், அதிகமான பொருள்களுக்கு வரி விலக்கும், குறைந்த சதவீத வரி விதிப்பு செய்தும் உள்ளது தமிழக அரசுதான் என்ற பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

27-2-2007 நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய வணிகர் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டத்தில், வரி விலக்குக் கோரியும், 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக்கக் கோரியும், வைக்கப்பட்ட ஏராளமான கோரிக்கைகளை மாநில மதிப்புக் கூட்டு வரி கண்காணிப்புக் குழு பரிசீலித்து, மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையிலான மாநில அதிகாரம் அளிக்கப்பட்ட குழு கவனத்துடன் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமனதுடன் அத்துணையையும் ஏற்றுக்கொண்டார்கள். அன்றைக்கு 57 subjects --பொருள்கள். முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி 50 நிமிடங்கள், 10-45-க்குத் தொடங்கி, 12-35 வரை நேரம் ஒதுக்கி, ஒவ்வொன்றையும், கேட்டறிந்து, 2007-2008 நிதிநிலை அறிக்கையில் அத்துணைக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. 29 வகைப் பொருட்களுக்கு வரி விலக்கும், 30 வகைப் பொருட்களுக்கு 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக வரிக் குறைப்புச் செய்தும் அறிவிக்கப்பட்டன. TIN-ன் கால அவகாசம் 15-2-2007 வரை நீட்டித்து அளிக்கப்பட்டது. வணிகர்கள், 31-12-2006-ல் கையிலுள்ள இருப்பின் கொள்முதலின்போது, செலுத்தப்பட்ட வரியை, கழித்துக்கொள்ள வரப்பெற்றக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, 28-2-2007 வரை கால நீட்டிப்புச் செய்து அறிவிக்கப்பட்டது. இவ்வளவு அறிவிப்புகளுக்குப் பிறகும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கைகளைக் கனிவுடன் கேட்கிறார்; பரிசீலிக்கிறார்; ஏற்றுச் செய்து தருகிறார் என்ற கருத்து பரவி, நிரவி, தொடர்ந்து வரும் கோரிக்கைகள் ஏராளம் என்றாலும்கூட, நமது முதல்வர் அவர்கள் சலிக்கவில்லை, சளைக்கவில்லை; அனைத்தையும், அதையும்கூட மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். அவை பின்வருமாறு:

பிற்பகல் 12-55

இன்றைக்கு மானியக் கோரிக்கையிலே வரி விலக்கு அளிக்கப்படுபவை: 1) செங்கல் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் களிமண் (clay) 2) கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய்,



பொரி உருண்டை மற்றும் கையினால் தயாரிக்கும் மிட்டாய்கள்; தூத்துக்குடி மற்றும் பிற மாவட்ட உற்பத்தியாளர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, உற்பத்தியாளர்கள் தொழிற்சாலைக்கு விற்கும்போது, வரி விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

எலும்புத் துகள்கள்-Bone meals-க்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இன்றைக்குப் பேரவை கூடியதற்குப் பின்னாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வரப்பெற்ற கோரிக்கையை அவர்கள் பரிசீலித்து, ஊதுவத்திக்கு வரி விலக்கு தற்போது அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் அரசுக்கு வரி வருவாய் இழப்பு ஏற்படும்.

12.5 சதவிகிதத்திலிருந்து, 4 சதவிகிதமாக இந்த மானியக் கோரிக்கையில் குறைத்து அறிவிக்கப்படுபவை: பழைய டயர்களைப் புதுப்பிக்கப் பயன்படுத்தப்படும் tread rubber உட்பட cushion, vulcanizing rubber போன்ற பொருட்கள்மீது விதிக்கப்படும் 12.5 சதவீத வரி, 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 200/-க்கும் குறைவாக மதிப்புள்ள காலணிகளுக்கு ஏற்கெனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.200/-க்கும் மேல் மதிப்புள்ள வணிகச் சின்னமிடாத காலணிகளுக்கு 4 சதவீதமாக வரி குறைக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறது. வணிகச் சின்னமிட்ட காலணிகள்மீதான வரி விதிப்பு 12.5 சதவீதத்திலேயே தொடரும். காலணிகள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் உதிரிப் பொருட்கள்மீதான வரி 4 சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது. நெய்யப்படாத (non-woven) துணி மற்றும் அதில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கும் வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

சிவில் ஒப்பந்தப் பணி மற்றும் ஏனைய ஒப்பந்தப் பணி செய்வோர், விருப்பப்பட்டால் தற்போது இணக்க வரி முறையில் வரி செலுத்தலாம். அவ்வாறு வரி செலுத்தும் வணிகர்கள், வெளி மாகாணத்திலிருந்து பெரும்பாலான பொருட்களைக் கொள்முதல் செய்து, ஒப்பந்தப் பணியில் பயன்படுத்தி, 2 சதவிகிதம் அல்லது 4 சதவிகிதம் என இணக்க வரி செலுத்துகின்றனர். இதனால், தமிழ்நாட்டு வணிகம் பாதிப்புக்கு உள்ளாவது மட்டுமின்றி, அரசுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே, பல வணிகர் சங்கங்கள் இதுபோன்ற கோரிக்கைகளை வைத்துள்ள நிலையில், அக்கோரிக்கையினை ஏற்று, தமிழக வணிகர்களின் நலனைக் கருதியும், வெளிமாநிலங்களிலிருந்து

கொள்முதல் செய்து, ஒப்பந்தப் பணி செய்வோருக்கு, இணக்க வரி முறை பொருந்தாது என மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வணிகர் நல வாரியம்: தற்போது வழங்கப்பட்டுவரும் குடும்ப நல உதவித் தொகை ரூ.20 ஆயிரத்திலிருந்து, ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு, மருத்துவச் சான்றிதழின்பேரில் ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இது ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

மேலும், வணிகர் நல வாரியப் பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/- வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறையிலுள்ள Dialysis, Chemotherapy, Radiation therapy, Angioplasty ஆகிய மருத்துவ சிகிச்சைகளுக்கு ரூ.15,000/- தொடர்ந்து வழங்கப்படும்.

இதுவரை வணிகர் நல வாரிய உறுப்பினரின் மகன், மகள் யாரேனும் ஒருவருக்கு ஓராண்டிற்கு மட்டும் கல்லூரிப் படிப்பிற்கு ரூ.3,000/- வழங்கப்படுகிறது. இதை உறுப்பினரின் மகன், மகள் யாரேனும் ஒருவருக்கு ரூ.5,000/- ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் என உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்கல்விக்கு ரூ.10,000/- ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் என வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நலிவுற்ற வணிகர்களுக்குக் கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக் கடை வாங்கவும் அல்லது 3 சக்கர மிதி வண்டி வாங்கவும், பின்தங்கிய மாவட்டங்களாகக் கருதப்படும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து மட்டும் வரும் விண்ணப்பங்களுக்குத் தற்பொழுது ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது. இதனை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, ஒவ்வோராண்டுக்கும் முதலில் பெறப்படும் 10 விண்ணப்பங்களுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் ரூ.10,000/- வீதம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கும்



கீழ் இருக்குமானால், அவர்கள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற முடியாத சூழ்நிலை உருவாகிறது. எனவே, ஏற்கெனவே தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்று, வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகவுள்ள வணிகர்களைத் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாவிட்டாலும், வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து நீடிக்கலாம்.

வணிக வரித் துறை, நமது முதலமைச்சர் அவர்கள், இத்துறைக்கு 22 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். 465 அலுவலகங்களுக்கு மின் ஆளுமை செயல்படுத்த, தளவாடம் போன்றவை மூலம் கட்டமைப்புகள் ஏற்படுத்த, 5 கோடியே 81 இலட்சம் ரூபாய் கணினி மென்பொருள், அச்சுப்பொறி, Scanner, U.P.S., Fax machine போன்றவை வாங்கிட ரூ.6 கோடியே 27 இலட்சம்; (மேசையைத் தட்டும் ஒலி) தள அமைப்பு ஏற்படுத்திட 16 இலட்சம்; TNSWAN என்ற இணையத்துடன் இணைப்பை ஏற்படுத்த, பிணையக் கருவி வாங்கிட ரூபாய் 2 கோடியே 20 இலட்சம்; சோதனைச் சாவடிகளுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்திட 1 கோடியே 40 இலட்சம்; கணினிப் பயிற்சி அளித்திட ரூபாய் 2 கோடியே 10 இலட்சம்; ஆக மொத்தம் தொடர், தொடராச் செலவினங்களைச் சேர்த்து 22 கோடியே 23 இலட்சம் ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏராளமான வரி விலக்குகள் அளிக்கப்பட்டன. எண்ணெய், பருப்பு போன்ற பொருள்களுக்கெல்லாம் வரி விலக்குகள் அளிக்கப்பட்டன. நிறைய வரிக் குறைப்பும் செய்யப்பட்டன. இந்த நிதிநிலை அறிக்கையிலே, நான் முன்னாலே சொன்னதைப்போல, 29 பொருள்களுக்கு வரிவிலக்கும், 30 பொருள்களுக்கு 12.5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரிக் குறைப்பும் செய்து, அதற்குப்பின்னாலே இன்றைக்கும் வரி விலக்கும், வரிக் குறைப்பும், அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியெல்லாம் இருந்தபோதும்கூட, இந்த ஆண்டு, கடந்த ஆண்டிலிருந்த 16,615 கோடி ரூபாய் வருவாயை இந்த ஆண்டு 27 மார்ச் முடிய, ரூபாய் 19 கோடியே 217 இலட்சமாக உயர்த்தி வரவு உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 2,601 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதலான வரி வருவாய் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இங்கே பணியிடங்கள் என்கிறபோது, கடந்த ஐந்தாண்டு காலமாக பதவி உயர்வு என்பது தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது இணை ஆணையர் 4 பேர், துணை ஆணையர் 9 பேர், உதவி ஆணையர் 32 பேர், வணிக வரி அலுவலர் 185 பேர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல வணிக வரி அலுவலர் 29 பேர், ஓட்டுநர் 63 பேர், காவலர் மற்றும் துப்புரவாளர் 29 பேர், அலுவலக உதவியாளர் 150 பேர், கருணை அடிப்படை பணி நியமனம் மூலமும், அலுவலக உதவியாளர் 136 பேர், தட்டச்சர் 262 பேர், இளநிலை உதவியாளர் 280 பேர், இளநிலை உதவியாளர் 25 பேர் கருணை அடிப்படையில், நேர்முக எழுத்தர் 53 பேர், உதவி வணிக வரி அலுவலர் 192 பேர், உதவி வணிக வரி அலுவலர் நேரடி நியமனம் 79 பேர், இப்போது கணினி இயக்குநர் 520 பேர்களும் புதிதாக நியமிக்கப்பட இருக்கிறார்கள். அதற்கானத் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கணினி மேலாளர்கள் 10 பேர்களுக்கும் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய உரையின்போது குறிப்பிட்டார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுகிற நாளில் அவர்களுக்கு suspension order கொடுக்கப்படுவதை, 'அவர்கள் கண்ணீரோடு செல்வதை' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இந்த நிலை எங்கு அதிகம் என்றால், வணிக வரித் துறையிலேதான் அதிகம். அது கையெழுத்துப் போடுகிற அந்த நிலையிலேதான் தெரியும். ஒவ்வொரு மாதமும் தேடிப் பிடித்து வந்து நான்கு பேர், ஐந்து பேர் என்று கையெழுத்து வாங்குகிறபோதுதான் அந்த மன அழுத்தம், நமக்கே மன அழுத்தம் என்றால், அவர்களுக்கு எப்படி? எவருக்கும் உதிக்காத, எவரும் நினைத்துக்கூட இத்துணை ஆண்டு காலம் எண்ணிப் பார்க்காத ஒரு பெரிய மனதுடன், தாயுள்ளத்துடன், தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்திருக்கிற இந்த முயற்சி--தாய் உணர்வு, தாய் உள்ளம் என்பது வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் மாறுபடுவது அல்ல. அதைப்போன்றதுதான் மனித நேயமும். அத்தகைய தாய்மை உணர்வும், மனித நேயமும்மிக்க தலைவர் அவர்களை இந்த நேரத்திலே வாழ்த்திப் போற்றுகிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



"அன்னை நீ, அப்பன் நீ, அரும்பொருள் நீ, அன்பு நீ, எம் நன்னெறி நீ, எமக்குரிய நட்பு நீ, எம் நல் ஆசான் நீ, எமைக் கலந்த உறவு நீ, உயிர் நீ, ஊன் நீ, உணர்வு நீ"

என்று போற்றி வணங்கி, தலைவர் அவர்களே, நீங்கள் வாழும் காலத்திலே சமூக அவலங்கள் எத்தனையையோ நீங்கள் நீக்கிட வேண்டியிருக்கிறது. நீங்கள் நூறாண்டு காலம் வாழ வேண்டுமென்று இந்த நேரத்திலே வாழ்த்தி, வணங்கி, பேரவை உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இரண்டு மணி நேரமா? கவலைப்படாதீர்கள், சீக்கிரம் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன் மற்றும் பத்திரப் பதிவு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் விவாதத்தின்மீது, பதிலளிக்கின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களின் தங்கத் தலைவர், ஏழைத் தாய்மார்களுக்கு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கிய கலைஞர், இலவச கலர் டி.வி. வழங்கிய கலைஞர், இலவச கேஸ் அடுப்பு வழங்கிய கலைஞர், ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவியாக 15 ஆயிரம் ரூபாய் தந்த கலைஞர், ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூபாய் 6 ஆயிரம் நிதியுதவி வழங்கிய கலைஞர், பள்ளி மாணவர்களுக்கு வாரந்தோறும் மூன்று முட்டைகள் வழங்கிய கலைஞர், விவசாயிகள் பெற்ற 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்த கலைஞர், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கிய கலைஞர், தொடர்ந்து இம்மாமன்றத்தில் 50 ஆண்டுகள் பணியாற்றி, பொன்விழா காணும் கலைஞர், ஐந்தாவது தடவையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற எங்களுடைய குடும்பத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாமன்றத்தில், 2007-2008 ஆம் ஆண்டிற்கான சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையினை அளித்த எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், தமிழகத்தினுடைய நிதித் துறை அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், கழகத்தினுடைய பொருளாளர், மின் துறை அமைச்சர், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களுடைய எழுச்சி நாயகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் பேசுவதற்கு எனக்கு அனுமதி தந்த தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைவர் கலைஞர் அவர்கள், எப்போது ஆட்சிப் பீடத்தில் இருந்தாலும், ஒரு சாதனையைப் புரிந்துகொண்டேயிருப்பார்கள். இங்கே எனக்கு முன்பாக, எதிர்க்கட்சியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் செ.ம. வேலுசாமி அவர்கள், இந்தத் துறையைப்பற்றிப் பேசும்போது, அவர்களுடைய அம்மா ஆட்சிக் காலத்தில், அந்தத் துறைக்கு அதிகமாகச் செய்ததாகவும், கட்டடங்களைக் கட்டியதாகவும், ரொம்பவும் பேசினார். இந்தத் துறையை ஆரம்பித்ததே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) 1969 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, முதன்முதலாக இந்தத் துறையைத் தொடங்கி வைத்தவர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று உருவாக்கி, அந்தத் துறைக்கு ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, இந்தத் துறையை உருவாக்கி வளர்த்தவர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு கோடி நிதி என்பது, இப்போது 107 கோடி ரூபாயாகி, இந்தத் துறை வளர்ச்சியடைந்ததும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இந்த ஆண்டு மட்டும், இந்த நிதிநிலை அறிக்கையில், கிட்டத்தட்ட 98 கோடி ரூபாயை இந்தத் துறைக்காகக் கூடுதலாக நிதியை ஒதுக்கிச் சாதனை புரிந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 1989 ஆம் ஆண்டு ஆட்சியிலே, . . . ** தலைவர் கலைஞர் அவர்கள், நாட்டு மக்களுக்காக. . . (கூச்சல்—குழப்பம்) உண்மையைச் சொல்கிறேன். ** (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றவை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இதற்கு என்ன சத்தம்? (கூச்சல்--குழப்பம்) 1989 ஆம் ஆண்டு, மீண்டும் முதலமைச்சராகிறார். மீண்டும் முதலமைச்சராகி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று உருவாக்கி, அந்தத் துறைக்கு.... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதிலுரை முடிந்தவுடன் சொல்லுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அதேபோல, அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கு, யாரும் கேட்காமலே, டாக்டர் அய்யா போராடினார், எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே. 23 பேரைச் சுட்டுக் கொன்றார்கள், அது உங்கள் ஆட்சியிலே. (குறுக்கீடுகள்)-- ஆனால், கலைஞர் அவர்களுடைய ஆட்சி, (குறுக்கீடு) 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, கலைஞர் அவர்கள்தான் இந்தத் துறையை முதன்முதலிலே தொடங்கினார்கள் என்று சொன்னார்கள்.** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ** என்று கேட்டார். அது உங்களுடைய மனதைப் புண்படுத்துமானால், அந்த வார்த்தைகளை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** ** *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** எனக்கும் சத்தம்போடத் தெரியும். (குறுக்கீடுகள்) நாங்களும் அங்கிருந்து சத்தம் போட்டவர்கள்தான். நீங்கள் அடக்கி வாசியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** 1989 ஆம் ஆண்டு... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை ஆரம்பித்து, (குறுக்கீடு) அப்போது இடஒதுக்கீடு கேட்டு டாக்டர் அய்யா அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அப்போது எதிர்க்கட்சியிலே இருந்த 23 பேரைச் சுட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அப்போது கலைஞருடைய அரசு 20 சதவீத இடஒதுக்கீடு கொடுத்தது. உயிரிழந்த 23 பேர்களை, தியாகி என்று அறிவித்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அதேபோல, இப்பொழுது 2007; இப்பொழுதும் சாதனை புரிகிறார். சிறுபான்மையினருக்கென ஒரு தனி இயக்குநரகத்தை ஆரம்பித்து, இன்றையதினம் அந்தச் சமுதாய மக்களுக்கு இடஒதுக்கீடு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொடுக்கப்படும் என்று அறிவித்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தாயிற்று, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No Point of Order, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அமைச்சர் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தாயிற்று. இன்னும் என்ன இருக்கிறது உங்களுக்கு. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அதேபோல இந்தச் சமுதாய மக்களை கை தூக்கி விடவேண்டுமென்றால், அவர்கள் கல்வியறிவு பெறவேண்டும். அதற்காகவே இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில், 82 சதவீத நிதியைக் கல்விக்காகவே ஒதுக்கீடு செய்து, இந்த அரசு சாதனை புரிந்துள்ளது. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் துறை சம்பந்தப்பட்ட பதிலுரையை மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** கள்ளர் சீரமைப்புத் துறைக்கு--தேனி, மதுரை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும், முடித்ததற்குப் பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Minister பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் உரையை முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** 48,000 மாணவ, மாணவிகள் கல்வி பயில்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். அதேபோல... (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், இருங்கள்; உறுப்பினர் ஒரு வார்த்தை சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் எது சொல்வதாக இருந்தாலும், அவர் உரையை முடித்ததற்குப்பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

(அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி இருக்கையில் அமர்ந்துகொண்டு ஏதோ பேசினார்.)

திரு. சின்னசாமி, (கூச்சல்—குழப்பம்) சொல்வதை எழுந்து நின்று சொல்லுங்கள். என்ன, அந்த வார்த்தையைத் திரும்பச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே அமைச்சராக இருந்தவர்தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். இதே அமைச்சரவையில் வளர்மதி என்று ஒரு அமைச்சர் இருந்தபோது, மானியக் கோரிக்கையில் என்ன பேசினார் என்று அந்தத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுவும், 'தகர டப்பாவோடும், ஜிப்பாவோடும் வந்தவர்களெல்லாம்' என்று இந்த அவையிலே என்னென்ன பேசினார்கள் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதையே இந்த அவை அனுமதித்திருக்கிறது; 'பெயரைச் சொல்லவில்லை' என்று சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவு நாகரீகத்தையும் உருவாக்கி வைத்துவிட்டு, இப்பொழுது இதற்குப்போய் என்ன? அவர் எதுவுமே சொல்லவில்லையே! ** என்ன தவறாகக் கேட்டுவிட்டார்? அதனால், இதெல்லாம் ஒன்றுமில்லை. இதெல்லாம் ஜெயக்குமாருக்குத் தெரியாதா? இன்றைக்கு ரொம்பக் கோபமாகக் கத்துகிறீர்களே? நீங்கள் பேசாத பேச்சா? நீங்கள் கேட்காததா? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எவ்வளவு செய்தீர்கள் உட்கார்ந்துகொண்டு? எவ்வளவு அனுபவித்துக்கொண்டிருந்தோம் நாங்கள்? (குறுக்கீடுகள்) உங்கள் அம்மாவிற்கு நீங்கள்தான்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** விசுவநாதன் எவ்வளவு பேசினார்? தெரியுமா உங்களுக்கு? என்ன, கை காட்டிப் பேசுகிறார் அவர்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஆனால், இதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், இதெல்லாம் நிற்கின்ற அத்தனை பேருக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அவர் பேசியது ஒன்றும் பெரிய விஷயமில்லை. ** இதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறுவது என்பது வேறு. அமைச்சரவையிலே அமர்ந்துகொண்டு, 'எனக்கும் உங்களைவிட சத்தம் போடத் தெரியும்' என்றும், அதுமட்டுமல்ல; 'எங்களை மிரட்டுவதைப்போல நீங்கள் செய்ததைக்காட்டிலும், எங்களால் செய்யமுடியும்' என்று ஒரு அமைச்சர் சொல்வது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் சொல்ல வேண்டாமா? இருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பிரச்சினையைத் திசை திருப்ப வேண்டாம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இருங்கள், please. ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். அதற்குப்பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** One second, one second.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** No, no. பேரவைத் தலைவர் அவர்களே, வெகுசாமர்த்தியமாக நம்முடைய அ.தி.மு.க. கொறடா அவர்கள் பிரச்சினையைத் திசை திருப்புகிறார். மிரட்டுகின்ற பாணியில் பேசியது, சத்தம் போட்டதெல்லாம் அந்த வரிசையிலேயிருந்துதான். அதை மாற்றி இங்கே கொண்டுவருகிறார். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிரட்டுகின்ற பாணியில் யார் பேசினார் என்பது இங்கே அமர்ந்து கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, 1969-லே முதலமைச்சராக இருந்தவர் அன்றைக்கு அறிவித்திருக்கிறார் என்று சொன்னார்கள். 1969-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மட்டும் இல்லையென்றால், திராவிட இயக்கமே இருந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆரை அரசியலில் கொண்டு வந்தவரே எங்களுடைய தலைவர் கலைஞர்தான். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972ஆம் ஆண்டு, இந்த இயக்கத்தாலே வளர்ந்த எம்.ஜி.ஆர். அவர்கள், இந்த இயக்கத்திற்குத் துரோகம் செய்துவிட்டு வெளியே போனபிறகுதான், (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் மூன்று முறையாக தமிழகத்திலே ஆட்சிப்பீடத்திலே அமர்ந்து, நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து நல்ல ஆட்சியை இந்த மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject திசை மாறி போய்க்கொண்டிருக்கிறது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் நீங்கள் உரையாற்றுங்கள். உங்கள் துறை சம்பந்தப்பட்டதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பிற்படுத்தப்பட்டோர் நலன் சம்பந்தமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பேச்சிற்கு அமைச்சர் அவர்கள் பதில் தந்து கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இல்லை, இல்லை. . . (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள் (குறுக்கீடுகள்) விசுவநாதன், உங்கள் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். தயவுசெய்து பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. வி.பி. கலைராஜன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. இரா. விசுவநாதன் மற்றும் திரு. சி.வி. சண்முகம் ஆகியோர் தமது இருக்கைகளிலிருந்து இடம் மாறி வந்து கையை நீட்டிக் கூச்சலிட்டனர்.

உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள், எல்லோரும். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) முதலில், அவரவர்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். பாண்டுரங்கன், உங்களுடைய இருக்கையில் போய் உட்காருங்கள். ஜெயக்குமார், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) கலைராஜன், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) விசுவநாதன், விசுவநாதன், உங்கள் இருக்கைக்குப் போங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) ஜெயக்குமார், இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினரான திரு. வி.பி. கலைராஜன் தன்னுடைய செருப்பைக் கழற்றி உயர்த்திக்காட்டிக் கூச்சலிட்டார்)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைராஜன், (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) கலைராஜன், கலைராஜன் எங்கே? காவலர்கள், கலைராஜனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள் (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் கலைராஜனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் கலைராஜனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். சீக்கிரம். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) வெளியேற்றியாகிவிட்டது. போங்கள், போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள், சீக்கிரம் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) மற்ற உறுப்பினர்கள் உங்களுடைய இடத்திற்குப்



போங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) காவலர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

*(அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)*

மற்றவர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள், வெளியேற்றுங்கள்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தயவுசெய்து ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்கார வேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேற்றி இருக்கிறார்கள். நீங்கள் தயவுசெய்து- (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? வெளியேற்றுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் காரசாரமான விவாதங்கள் வருவதுண்டு. கூச்சல்—குழப்பங்கள் வருவதுண்டு. சபாநாயகர் அவர்கள் நடவடிக்கை எடுப்பது உண்டு. ஆனால், இவை எல்லாவற்றிற்கும் அத்துமீறி தியாகராய நகர் தொகுதி எம்.எல்.ஏ. கலைராஜன் அவர்கள் இன்று முன் வரிசைக்கு வந்தது மட்டுமல்லாமல், செருப்பை எடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து வீசுவதற்கு முற்பட்டிருப்பது இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயலாகும். இது போனால் போகிறது என்று மன்னிக்கக்கூடிய செயல் அல்ல. செருப்பை எடுத்துக் காட்டியிருப்பது மிகப் பெரிய குற்றம். இது இந்த அவைக்கு இழிவான செயல். சபையிலே உறுப்பினராக இருப்பதற்குக்கூட அருகதை இல்லை என்ற நிலைதான் அதற்கு உண்டே தவிர, வேறல்ல. இந்த நிலையை நீங்கள் நீடிக்க விட்டால், மிகப் பெரிய விளைவுகளை இந்த மன்றத்தில் ஏற்படுத்தும். இந்த மன்றத்தினுடைய மரபும், கண்ணியமும் காப்பாற்றப்பட வேண்டுமென்றால், தயவு தாட்சண்யமின்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## 5. அரசினர் தீர்மானம்

### உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.பி. கலைராஜன், பொள்ளாச்சி வி. ஜெயராமன், இரா. விசுவநாதன் மற்றும் சி.வி. சண்முகம் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் நீக்கிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவையின் அலுவல்கள் நடைபெறவிடாமல் இடைமறித்து, பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்துவதால், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி 2-ன்கீழ், இன்று அவைக்கு வருகை தந்திருக்கும், திரு. வி.பி. கலைராஜன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. இரா. விசுவநாதன், திரு. சி.வி. சண்முகம் ஆகிய நான்கு பேரும் இக்கூட்டத்தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்யப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. விசுவநாதன், திரு. வி.பி. கலைராஜன், திரு. சி.வி. சண்முகம், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகிய இந்த நான்கு பேரும் இக்கூட்டத்தொடர் முடிகின்ற வரையிலான எஞ்சிய நாட்களுக்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்.



## 4. மானியக் கோரிக்கைகள் 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடரலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய மக்கள், பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய சமுதாய மக்களை முன்னேற்றுவதற்கு TABCEDCO மூலமாக பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்குக் கடன் வழங்குகின்ற திட்டம், இந்த ஆண்டு மட்டும் 20 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதனுடைய பலனாக, 28,202 பயனாளிகள் கடன் பெற்றுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, என்னுடைய துறையினுடைய புதிய அறிவிப்புகளை அறிவிக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு, ஏழை மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் 50 விடுதிகளுக்கு 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நூலகம், படிப்பறை உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட கட்டடங்கள் இந்த ஆண்டு கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், 3,750 மாணவ மாணவியர் பயன்பெறுவார்கள்.

புதிய ஒரு நீர்ப்பாசனக் கடனுதவித் திட்டம். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், இதுவரை

சிறுதொழில் மற்றும் வியாபாரம் செய்வதற்காக மட்டுமே கடனுதவி வழங்கி வந்துள்ளது. முதல்முறையாக, தற்போது கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக, கடனுதவி வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். இப்புதிய திட்டத்தின்கீழ், மானாவாரி சாகுபடி செய்யும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த ஏழை விவசாயிகளுக்கு ஆழ்துளாய்க் கிணறுகள் அமைக்கவும், திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கவும், நீர்ப்பாசன வாய்க்கால்களில் இருந்து குழாய்மூலம் தண்ணீர் எடுத்து வேளாண் உற்பத்திக்கு பயன்படுத்திக்கொள்ளவும், கடனுதவி வழங்கப்பட உள்ளது. அதிகபட்சமாக ஏழை விவசாயி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும். இதில், 50,000 ரூபாயை அரசு மானியமாக வழங்கும். இப்படி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்படுவதால், தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாறும். மானாவாரி விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் மேம்படும்.

இந்தத் திட்டத்தின்மூலமாக, 5,000 ஏழை விவசாயிகள் பயன்பெறும் இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, படித்து முடித்து வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் பயன்பெறத்தக்க வகையில், 2006-2007 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 14,865 பயனாளிகளுக்கு 42 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதேபோன்ற பயிற்சிகளை இந்த ஆண்டில் அளித்திடவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக இதன்மூலம் Diploma in Computer Application, Medical Transcription, 2D and 3D animation, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, பெண்களுக்கான அழகுக் கலைப் பயிற்சி போன்ற பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் இத்துறையின்மூலமாக புதிய முயற்சியாக 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 200 ஏழைப் பெண்களுக்கு விமானப் பணிப்பெண் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது என்கிற செய்தியையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-35

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் உணவுக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று, டாக்டர் கலைஞர் அவர்கள் பின்வரும் அறிவிப்பை அளித்துள்ளார்கள். 1998-1999 ஆம் ஆண்டில் கழக ஆட்சியில்தான் கல்லூரி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் மாதம் 198 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இன்று வரையில் அது உயர்த்தப்படவில்லை. அதற்கிடையில் அண்ணா திமுக. ஆட்சி இருந்தது. அவர்களும் செய்யவில்லை. மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இந்த ஆண்டிலிருந்து கல்லூரி விடுதி மாணவ/மாணவியர்கட்கான உணவுக் கட்டணம் 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பள்ளி விடுதிகளில், மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் மாதம் ரூபாய் 300 என்பது 400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஆண்டுக்கு 6 கோடியே 79 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் புதிய விடுதிகள் வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளனர். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், 50 புதிய விடுதிகளைத் தொடங்குவதற்கு 4 கோடியே 22 இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு எவ்வித உதவித் தொகையும் வழங்கப்படுவதில்லை. கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டு முதல் புதிய திட்டமாக மாலை நேரக் கல்லூரி மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கும் உதவித் தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தில் 4 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் 88 ஆயிரத்து 714 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள்

மேல்நிலைப் பள்ளிகளாகவும் இந்த ஆண்டு 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 100 விடுதிகளுக்கு சூரிய ஒளியினால் சூடுபடுத்தும் கருவிகள் வழங்கப்படவுள்ளன. இதன்மூலம் விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள். காரணம் என்னவென்றால், குளிர் காலங்களில் தண்ணீர் மிகவும் சில்லென்று இருக்கும். அவர்களுக்கு நோய் ஏற்படக்கூடும் என்கிற காரணத்தினால், அதை எடுத்துக் கூறியவுடன், உடனடியாக, பரிட்சார்த்தமாக 100 விடுதிகளுக்குக் கொடுக்க அனுமதியளித்துள்ளார்கள்.

ஏழை எளிய பெண்களுக்கு இந்த ஆண்டில் 3,000 தையல் இயந்திரங்கள் 66 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

690 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் 55 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இந்த ஆண்டு 400 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு 44 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் 202 விடுதிகள் 34 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். 25 இலட்சம் ரூபாய் செலவில் கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்கு இரண்டு நீராவி கொதிகலன்கள் வழங்கப்படும். இந்த ஆண்டில் 73 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் 14 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் ஒன்று நடப்பாண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் படித்து அதிக மதிப்பெண்கள் பெறும் 10 மாணவ, மாணவியர்களைத்



தேர்ந்தெடுத்து, அவர்களின் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள தலைசிறந்த மேல்நிலைப்பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து படித்திட வழிவகை செய்யப்படும். அவர்களுக்கான கல்விக் கட்டணம், உறைவிடக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்றுக்கொள்ளும். இதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்கிற செய்தியையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

விடுதிகளில் தங்கிப் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு 12,11,000 ரூபாய் செலவில் சுடிதார் சீருடைகள் வழங்கப்படும் என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள 30 மாவட்ட, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல அலுவலகங்களுக்கு ஒரு கணினியும், அதற்குரிய துணை பாகங்களும் 13,50,000 ரூபாய் செலவில் இந்த ஆண்டில் கூடுதலாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு 7,29,000 ரூபாய் செலவில் முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதி நூலகங்களுக்குப் பார்வைக் குறிப்புப் புத்தகங்கள் 11,80,000 ரூபாய் செலவில் வழங்கப்படும்.

இந்தத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை, அனைவரும் அறிந்து கொள்ளும்வகையில், 5 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்யப்படும்.

1,131 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், மருத்துவப் பரிசோதனைகள் செய்யும் திட்டம் 13,91,000 ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

இந்த ஆண்டு 7,35,000 ரூபாய் செலவில் நில எடுப்புப் பணிகளுக்கு உதவும் வகையில், ஒரு பணியாளர் குழு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறை இயக்ககத்தில் ஏற்படுத்தப்படும்.

ரூபாய் 44,50,000 செலவில் 10 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு 10 ஈப்புகள் இந்த ஆண்டில் வழங்கப்படும்.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு உருதுமொழி கல்வியில் மாநில அளவில் சிறந்து விளங்கும் 3 மாணவர்கள் மற்றும் 3 மாணவிகளுக்கு ரூபாய் 21,000 செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

தமிழகத்தில் சிறுபான்மையினர் நலன்களுக்காக தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது அறிவிப்புச் செய்துள்ளார்கள். நம்முடைய சிறுபான்மையின மக்களின் நீண்டநாள் கோரிக்கை இப்போது நிறைவேற்றப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவித்த வேளையில் சிலர் மகிழ்ச்சியைக் கெடுப்பதற்காகவே வேண்டுமென்றே ஒரு செட்அப் செய்து வெளியே போய்விட்டார்கள். நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் தமிழகத்தில் சிறுபான்மையினர் நலனுக்காக இவ்வரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை ஆய்வு செய்த—சர்டிபிகேட் கொடுக்கிறார்கள் பாருங்கள்—மத்திய அரசினுடைய தேசிய சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தலைவர் நீதியரசர் திரு. எம்.எஸ்.ஏ. சித்திக் அவர்களும், அவர்களின் தலைமையின்கீழ் தமிழகத்திற்கு வருகைபுரிந்த குழுவினரும், தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் செயல்பாடுகளில் முழு நிறைவு கொண்டு, இவ்வரசு "சிறுபான்மையினருக்காகப் பாடுபடும் அரசு" எனப் புகழாரம் சூட்டிப் பாராட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில அளவில் ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் இஸ்லாமிய சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்காகத் தனி திட்டங்களைத் தீட்டுவதற்கும், அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் ஒரு புதிய சிறுபான்மை நல இயக்ககம் விரைவில் தொடங்கப்படும்.



தமிழ்நாட்டில் வாழும் ஆதரவற்ற முஸ்லிம் விதவை மற்றும் முதியோர்கள் பயனடையும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு இஸ்லாமிய மகளிர் உதவிச் சங்கத்திற்கும், ரூபாய் ஒரு இலட்சம் ஆரம்பத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இச்சங்கங்கள் வசூலிக்கும் நிதியின் அளவிற்கு இணையாக அரசு மானியமும் வழங்கப்படும்.

தனியார்த் துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும், சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், நலிந்த சிறுபான்மையினர் திறனை மேம்படுத்துவதற்கும், ரூபாய் 2.5 கோடி செலவில் சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், 5,000 சிறுபான்மையின இளைஞர்கள் பயன்பெறுவார்கள். குறிப்பாகப் பெண்களுக்கு, தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடை போன்ற தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம், தொழில் முனைய முன்வரும் சிறுபான்மையினத்தவருக்கு, சிறு மற்றும் குறுந்தொழில் தொடங்கிட ரூபாய் 30 கோடி கடன் உதவி அளிக்கப்படும். இதன் மூலம் 21,000 சிறுபான்மையினர் பயன்பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

**வக்ஃப் வாரியம் தொடர்பான அறிவிப்புகள்:** ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் புதிய அலுவலகக் கட்டடத்தில் மின்னாக்கி நிறுவப்படும்.

இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகத்திற்கு EPABX என்ற முறை தொலைபேசி அமைக்கப்படும்.

6 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகத்திற்கு இணைய தள வசதியுடன் ஒரு சர்வர் மற்றும் 10 கணினிகள் வழங்கப்படும்.

மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்கள் பராமரிப்பு வழக்குகள் தொடர்பாக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் மானியம் அளிக்கப்படும்.

52 இலட்சம் ரூபாய் செலவில் பழுது பார்ப்பு மற்றும் சீரமைப்பு மானியம் வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும். 8 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மற்றும் 10 சரக அலுவலகங்களில் தொலை நகல் படிப்பெருக்கி மற்றும் தொலைபேசி வசதிகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பத்திரப் பதிவு சம்பந்தமாக புதிய அறிவிப்புகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். கடந்த ஆண்டு மட்டும் பத்திரப் பதிவுத் துறையில் அரசின் சாதனையாக 2005-2006 ஆம் நிதியாண்டில் வருவாய் 2,349 கோடி ரூபாயாகும். கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், அதாவது, 2006-2007 ஆம் நிதியாண்டில் கிடைத்த வருவாய் 3,407 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு, அதாவது கலைஞரின் இந்த 10 மாத ஆட்சிக் காலத்திற்குள் 1,058 கோடி ரூபாய் கடந்த ஆண்டைவிட, கடந்த அரசைவிட 1,058 கோடி ரூபாய் அதிகமாகப் பத்திரப் பதிவுத் துறை வருமானத்தை ஈட்டியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அறிவிப்புகளுக்கு வந்துவிடுகிறேன். சமாதானத் திட்டத்தைப் பற்றி பேசிய சில சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். அதிகமாக documents பத்திரப் பதிவு அலுவலகத்தில் தேங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதையெல்லாம் clear பண்ணுவதற்கு இப்போது சொத்துக்களின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக நிலுவையிலுள்ள 27 ஆயிரம் ஆவணங்களில் முடங்கியுள்ள வருவாய் 400 கோடி ரூபாயைத் தாமதமின்றி ஈட்டும்பொருட்டு, புதிய திட்டம் ஒன்றை, அதாவது சமாதானத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமாதானத் திட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட ஆவணத்திற்குச் சார் பதிவாளரால் நிர்ணயிக்கப்படும் முத்திரைத் தீர்வைக்கும் ஏற்கெனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வைக்கும் உள்ள வித்தியாசத்தில் 40 விழுக்காடு தொகை தள்ளுபடி செய்யப்பட்டு, மீதமுள்ள 60 விழுக்காடு தொகையைச் செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கு அமலில் இருக்கும். இத்திட்டத்தின்படி, செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை சார் பதிவாளர் அலுவலகத்திலேயே செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இதனால் அரசுக்கு சுமார் 240 கோடி ரூபாய்க்கு மேலாக உடனடியாக வருவாய்



கிடைக்கும். பொது மக்களும் பயனடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது. ஏனென்றால், Guideline Value fix பண்ணுகிற நேரத்தில், இதை உடனடியாகக் கட்டிவிட்டால் எல்லோருக்கும் நல்லது.

புதிய அறிவிப்புகள்: நடப்பு நிதியாண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்களையும் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்:

9 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட 6 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகம் மாவட்டத் தலைநகரங்களில் கட்டுவதற்கு இந்த ஆண்டு அனுமதி அளித்துள்ளார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 5 கோடி ரூபாய் செலவில் 20 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவதாக, 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் 250 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் கருவிகள் வழங்கப்படும். 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 10 சார் பதிவாளர் அலுவலகங்கள் மீண்டும் திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 19 மாவட்டப் பதிவாளர்களுக்கு வாகனங்கள், ஜீப்புகள் வழங்கப்படும்.

பிற்பகல் 1-50

34 இலட்சம் ரூபாய் செலவில் சார் பதிவாளர் அலுவலகங்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் மற்றும் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு 500 அலமாரிகள் வழங்கப்படும்.

15 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் 18 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களின் வாகனங்களுக்கு ஓட்டுநர் பதவி புதியதாகத் தோற்றுவிக்கப்படும்.

10 இலட்சம் ரூபாய் செலவில் 258 சார் பதிவாளர் அலுவலகங்களில் மின்னணு விளம்பரப் பலகைகள் அமைக்கப்படும்.

10 இலட்சம் ரூபாய் செலவில் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் புதிய மின்தூக்கி அமைக்கப்படும்.

5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்பட்ட 72 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் குடிநீர் சுத்திகரிப்பான் வழங்கப்படும்.

4 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவருக்குப் புதிய பொலிரோ வாகனம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் பதிவுத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன். எனவே, இம்மானியக் கோரிக்கைகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களின்மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, அளித்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.



"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.353,52,27,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.32,47,72,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 11 – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.134,60,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.187,52,10,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 9-4-2007 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2005-2006 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

42. மானியக் கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

43. மானியக் கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

44. மானியக் கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

45. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 'மக்கள் சாசனம்', 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

46. கட்டடங்கள் மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

## இணைப்பு–I

*(370 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 9

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**முன்னுரை**

நெடுங்காலமாக சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கிய நிலையில் இருந்து வரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ,மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் ஆகியோரை சமூகத்தின் இதர பிரிவினரோடு சம நிலைக்குக் கொண்டுவரும் நோக்குடன் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதிலும், அவர்களது உயிர்நாடியான சமூக நீதியை நிலைநாட்டுவதிலும் இம்மாநிலம் இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் பெரும்பான்மையினராக உள்ள இவர்களுக்கான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும், 1989 ஆம் ஆண்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையும் இவ்வரசால் தோற்றுவிக்கப்பட்டன. கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை பாதுகாத்திட இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. மைய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தினை மைய அரசு நிறைவேற்றியதில் இவ்வரசின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தற்போதைய நிலையில்

பெருமளவிலான வேலைவாய்ப்புகள் தனியார்த் துறையில் வசமே அமைந்துள்ளன என்பதை நன்குணர்ந்த இவ்வரசு தனியார்த் துறையிலும் மேற்குறிப்பிட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உரிய திருத்தம் கொண்டு வருமாறு மைய அரசினை வலியுறுத்தி வருகிறது.

கல்வியே ஒரு சமுதாயத்தின் நிலையை மாற்றும் என்று நம்பும் இவ்வரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரது கல்வி நிலையினை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 80 விழுக்காடு கல்வி வளர்ச்சிக்காகவே செலவிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பிரிவு மாணவர்களின் நலனுக்காகக் கல்வி உதவித் தொகை வழங்குதல், தொழிற்கல்வி / பட்டப்படிப்பு ஆகியவற்றில் இலவசக் கல்வி அளித்தல், இலவச மிதிவண்டிகள் வழங்குதல், கிராமப்புற மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பிரிவு மாணவர்கள் இலவசமாகத் தங்கிப் பயில விடுதிகள் இத்துறையால் நடத்தப்படுகின்றன. சொந்தக் கட்டடங்கள் இல்லாத விடுதிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடங்களைக் கட்டித் தர இவ்வரசு முடிவெடுத்துள்ளது. கல்வியில் பின்தங்கியுள்ள பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் மேம்பாட்டிற்காக மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் உயர்நிலை/மேல்நிலை வகுப்புகளில் கணினிக் கல்வி அளிக்கும் பொருட்டு, கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மற்றும் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) ஆகியவற்றின் மூலம் இம்மக்கள் சுயதொழில் தொடங்கும் வகையில் கடன் வசதி செய்துதரப்படுகிறது. நடப்பாண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்திற்காக ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவு மக்கள் தங்கள் தொழில் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறும் வகையில் பல்வேறு



வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நலிந்த நிலையிலுள்ள இவ்வின மக்களுக்குச் சலவைப் பெட்டிகளும், தையல் இயந்திரங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. வீடற்ற பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## இடஒதுக்கீடு

சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தில் உள்ள இதர வகுப்பினருக்கிணையாக உயர்வதற்கு இடஒதுக்கீடு முக்கியக் கருவியாகச் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் இடஒதுக்கீட்டுக் கொள்கை 1921 ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தப்பட்டு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. தற்போது நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கையின்படி, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு கீழ்வருமாறு வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 30% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 20% |
| ஆதி திராவிடர் | 18% |
| பழங்குடியினர் | 1% |
| மொத்தம் .. | 69% |

மேற்குறிப்பிட்ட 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை நிலை நிறுத்துவதற்கு ஏதுவாகக் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு சட்டம் 45/94-ஐ பாதுகாப்பதற்கு இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலங்கள் தங்கள் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு அளவினை நிர்ணயிக்கும் உரிமையினை மாநில அரசுகளுக்கே அளிக்கும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யுமாறு மத்திய அரசினை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2006 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவித்தவாறு மாநிலத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடங்களை ஒதுக்கீடு செய்யும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (தனியார் கல்வி நிலையங்களில் இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 31-5-2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டமுன்வடிவு 6-06-2006 அன்று சட்டமாகியது. இந்தச் சட்டம் 21-10-2006 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி செய்யப்படும் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க தொடர்ந்து செயலாற்றுமாறு மைய அரசினை வலியுறுத்தி தீர்மானம் ஒன்று 31-5-2006 அன்று சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் 8-6-2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு அன்று அனுப்பி வைக்கப்பட்டது. இப்பொருளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட உறுதியான முயற்சிகளின் விளைவாக, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டமுன்வடிவு அண்மையில் நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. மேற்குறிப்பிட்ட சட்டமுன்வடிவிற்கு மேதகு இந்தியக் குடியரசு தலைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்.

தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தில் தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்க ஏதுவாக அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 15(4)-க்கு திருத்தம் கொண்டு வருமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கல்வி

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பினரின் சமூக, பொருளாதார பின்னடைவைப் போக்குவதற்கு கல்வி ஒன்றுதான் நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதனால், இவ்வகுப்பினருக்கு கல்வி வசதியை அளிப்பதும், குறிப்பாக பெண்



கல்வியை ஊக்குவிப்பதும் முக்கியமான ஒன்றாகும். எனவே இவ்வரசு கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. இவ்வகுப்பினரிடையே குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களில், எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவு என்பதையும், இடையில் படிப்பை நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதையும் கருத்திற்கொண்டு, அவற்றை நிவர்த்திக்கும் வகையில், மாணவரில்ல வசதிகள், படிப்புதவித் தொகைகள், சீருடைகள் மற்றும் சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி இவர்களது கல்வித் தரத்தினை உயர்த்திட அரசு சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் இத்துறைமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள் அனைத்திந்திய அரசுப் பணிகள் தேர்வை எழுதுவதற்கு சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினரின் கல்வித் தரம், ஏனைய சமுதாயத்தினரின் கல்வித் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளதை அறிந்த அரசு இவ்வகுப்பினரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக் கள்ளர் அதிகமாக வாழும் இடங்களான மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைமூலம் 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. (மேல்நிலைப் பள்ளிகள் 16, உயர்நிலைப் பள்ளிகள் 23, நடுநிலைப் பள்ளிகள் 31, ஆரம்பப் பள்ளிகள் 190, மொத்தம் 260). இப்பள்ளிகளில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 48,000 மாணவ, மாணவியர்கள் பயில்கின்றனர்.

2006-2007 ஆம் ஆண்டில் இப்பள்ளிகளில் 5 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியருக்கு நான்கு இருக்கைகள் கொண்ட பெஞ்சுகள் ரூ. 269.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. மேலும், 31 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.48.50 இலட்சம் செலவில் கணினி மற்றும் துணை பாகங்கள் வழங்கப்பட்டன.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.28,58.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 5

## கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ/மாணவியருக்குப் பரிசுகள் வழங்குதல்

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் திட்டம் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்குப் பொதுவானது.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பில் பொதுத் தேர்வில் முதலிடம் பெறும் மாணவ அல்லது மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.3,000/-ம், இரண்டாம் இடம் பெறும் மாணவ அல்லது மாணவியருக்கு இரண்டாம் பரிசாக ரூ.2,000/-ம், மூன்றாம் இடம் பெறுகின்ற 3 மாணவர்கள் அல்லது மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/-ம் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

## கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எழுது பலகைகள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் வழங்குதல்

### எழுது பலகைகள் வழங்குதல்

ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு எழுது பலகைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### குறிப்பேடுகள் வழங்குதல்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மூன்றாம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை குறிப்பேடுகள் (Note Books) இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்

ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் எழுது பலகைகள், குறிப்பேடுகள் மற்றும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.[illegible] இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 5]

## சீருடைகள் வழங்குதல்

### கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவர்களுக்கு

பள்ளிகள் கோடை விடுமுறைக்குப்பின் திறக்கும்போது கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 2 தொகுதி பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

### விடுதி மாணவர்களுக்கு

அதேபோன்று பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர்களுக்கு 2 தொகுதி பாலிகாட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

2007-2008 ஆம் ஆண்டில் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூ.155.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாத பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு பள்ளிப் படிப்பு உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை மற்றும் பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் பட்டயப் படிப்பு, தொழிற் பட்டப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

10ஆம் வகுப்பு முதல் மூன்று ஆண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பு (பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., மற்றும் பிற) பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த உச்சவரம்பு ஏதுமில்லை. இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

### பள்ளிப் படிப்பு உதவித் தொகை

### சிறப்புக் கட்டணம் ஈடுசெய்தல்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பள்ளிப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் பின்வருமாறு கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**சீர்மரபினர்**

6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை பயிலும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு இத்துறை கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் சிறப்பு கட்டணத் தொகை ஈடு செய்யப்படுகிறது.

**பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்**

9 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு இத்துறை கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் சிறப்புக் கட்டணத் தொகை ஈடு செய்யப்படுகிறது.

**மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்**

10ஆம் வகுப்பு பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**பிற்படுத்தப்பட்டோர்**

10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/ மாணவியர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு (வருமான வரம்பு/ முதல் பட்டதாரி) இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்**

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கான செலவினத்தை இத்துறை தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு ஈடு செய்கிறது.



**தேர்வுக் கட்டணம்**

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரிடையாக இத்துறையால் அரசுத் தேர்வுகள் துறைக்கு ஈடு செய்யப்படுகிறது.

**ஆங்கில வழி படிப்பிற்கான பயிற்றுவிப்புக் கட்டணம்**

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி யாருமில்லை என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்ணயிக்கப்பட்ட அளவில் பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதும் இன்றி பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

பள்ளிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.2,209.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

**பிற்படுத்தப்பட்டோர்**

பள்ளி மேல் நிலைப் படிப்பு, கல்லூரி பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் பயிற்சிப் படிப்பு, தொழில்நுட்பப் படிப்பு மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் படிப்புவரை பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

**மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்**

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களைப் பொறுத்தமட்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு முதல், மூன்றாண்டு கல்லூரி பட்டப் படிப்புவரை வருமான வரம்பு நிபந்தனையின்றி

இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால், பிற படிப்புகளான கல்லூரி பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் பட்டயப் படிப்பு, பல்கலைக்கழக ஆராய்ச்சிப் படிப்பு போன்றவற்றில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

## தேர்வுக் கட்டணம்

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பொதுத் தேர்வுக்கு செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரடியாக இத்துறையால் அரசுத் தேர்வுகள் துறைக்கு ஈடுசெய்யப்படுகிறது.

## ஆங்கில வழி படிப்பிற்கான பயிற்றுவிப்புக் கட்டணம்

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு அவர் தம் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி யாருமில்லை என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதும் இன்றி பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது.

பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.3,353.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவசக் கல்வி (பட்டப் படிப்பு)

10 ஆம் வகுப்பு முதல் 3 ஆண்டு பட்டப் படிப்பு வரை பயிலும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனை இன்றியும், பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம்



ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயித்த அளவிலான கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1,790.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவசக் கல்வி (தொழிற்படிப்பு)

மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்வி போன்ற தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயித்த அளவிலான கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1,618.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவசக் கல்வி (பட்டயப் படிப்பு)

பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் போன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயித்த அளவிலான வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.934.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 5

## படிப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு தமிழகத்தின் சிறந்த பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி அளிக்கும் திட்டம்

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் ஒன்று நடப்பாண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவியர்களைத் தேர்ந்தெடுத்து அந்த மாணவர்களின் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள தலைசிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து சிறந்த முறையில் படித்திட வழிவகை செய்யப்படும். அவர்களுக்கான கல்விக் கட்டணம், உறைவிடக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும். இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.84.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மத்திய அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

### பள்ளிப் படிப்பு உதவித் தொகை

பள்ளிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மைய அரசின் பள்ளிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம், மைய மற்றும் மாநில அரசின் 50:50 என்ற பங்களிப்பின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.44,500.

### பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

பள்ளி மேற்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் தொழில் பட்டப் படிப்பு போன்ற கல்வி பயிலும் தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மைய அரசின் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டம், 2003-2004 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் 100 விழுக்காடு பங்களிப்பின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.44,500/-

## கிராமப்புற மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

கிராமப்புறங்களில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை இடையிலேயே கைவிடுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்



2007 ஏப்ரல் 5]

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.500/- வீதமும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின பெண் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.1,000/- வீதமும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் இவ்வரசால் 1999-2000 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 90,000 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவியர்கள் பயன்பெறுவர்.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.600.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பரிசுகள் வழங்குதல்

### மாநில அளவிலான பரிசுகள்

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு, இரண்டு முதல் பரிசுகள், (மாணவருக்கு ஒன்று மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியாராக இருந்தால் ரூ.3,000/-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5,000/-ம் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1,500/-ம், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/-மும் வழங்கப்படுகிறது.

### மாவட்ட அளவிலான பரிசுகள்

மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு ஒன்றும், மாணவியருக்கு ஒன்றுமாக இரண்டு முதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவராக இருப்பின் ரூ.1,500/-ம், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவராகயிருப்பின் ரூ.3,000/-ம் பரிசுத் தொகையாக வழங்கப்படுகின்றது. அதேபோன்று மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு ஒன்றும், மாணவியருக்கு ஒன்றுமாக இரண்டு

முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராய் இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.500/, ரூ.250/- மற்றும் ரூ.150/- வழங்கப்படுகின்றன. மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியராகயிருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.1,000/- ரூ.500/- மற்றும் ரூ.300/- வழங்கப்படுகின்றன.

இப்பரிசுகள் வழங்கும் திட்டங்களுக்காக 2007-2008ஆம் ஆண்டில் ரூ.2.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியருள் ஒவ்வொரு மாவட்டத்திலும், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்லூரியில் சேர்ந்து பயிலும் இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் நான்கு/ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தந்தை பெரியார் நினைவு விருது

ஒவ்வொரு மாவட்டத்திலும் பாலிடெக்னிக்குகளில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்றுள்ள இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசிடமிருந்து பகுதியாக நிதியுதவி பெற்று செயல்படும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித வருமான வரம்பின்றி இலவசமாக மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இத்திட்டத்தை விரிவுபடுத்தி 2006-2007 ஆம் ஆண்டு முதல் இலவச பஸ் பாஸ் பெறும் மாணவ, மாணவியர்களுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்காக 2007-2008ஆம் ஆண்டில் ரூ.7,293.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்கள் நலன் கருதி, அவர்கள் பொருளாதார சிரமமின்றி கல்வியினைத் தொடர 1,131 மாணவ, மாணவியர் விடுதிகள் இத்துறைமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உணவு மற்றும் உறையுள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இவ்விடுதிகளில் ஆண்டுதோறும் 62,900 மாணவ/மாணவியர்கள் தங்கிப் பயின்று பயனடைகின்றனர்.

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள மாணவ/மாணவியர் அதற்காக அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு இவ்விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இலவச தங்கும் வசதியும், வாராந்திர வரையறுக்கப்பட்ட உணவுப் பட்டியலின்படி இலவச உணவும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மொத்தமுள்ள 1,131 விடுதிகளில் 568 விடுதிகள் தற்போது அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 395 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டும்பணி பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் உள்ளன. தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் மீதமுள்ள 168 விடுதிகளுக்கு தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு நவீன வசதிகளை உள்ளடக்கிய கட்டடங்கள் படிப்படியாகக் கட்டித்தரப்படும்.

இவ்விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி விடுதிகளுக்கு மட்டும்) விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மாணவர்களது பொது அறிவுத் திறனை வளர்த்திடவும், அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ளவும், ஒவ்வொரு விடுதிக்கும் ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

விடுதி மாணவர்கள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற சிறப்பு வழிகாட்டுப் புத்தகங்கள் அனைத்துப் பாடப் பிரிவுகளிலும் வழங்கப்படுகின்றன.

மலைப் பகுதியிலுள்ள மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் நலன் கருதி குளிர் காலங்களில் அணிந்துகொள்ள இரண்டாண்டுகளுக்கொருமுறை கம்பளி மேலாடைகள் வழங்கப்படுகின்றன.

மாணவர் விடுதிகள் முறையாகச் செயல்படுவதைக் கண்காணிக்க வருவாய்க் கோட்ட அலுவலர் தலைமையில் விடுதி நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும்பொருட்டு மாணவர் விடுதிகளில் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதன்படி 2006-2007 ஆம் ஆண்டில் 400 பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூ.44.00 இலட்சம் செலவில் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.16.00 இலட்சம் செலவில் போர்வைகள் வழங்கப்பட்டன.

### உணவுத் தொகை

விடுதி மாணவர்களுக்கு நல்ல உணவளிக்கும்பொருட்டு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கல்லூரி விடுதி மாணவருக்கு ரூ.400/-ம், பள்ளி விடுதி மாணவருக்கு ரூ.300/-ம் உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது.



இவ்விடுதிகளின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் உணவுச் செலவினங்கள் போன்றவற்றிற்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.7,380.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 50 விடுதிகளுக்குப் புதிய நவீன கட்டடங்கள்

நடப்பாண்டில் அரசு சொந்தக் கட்டடங்கள் இல்லாத 50 விடுதிகளுக்கு, போதுமான கழிவறைகள், குளியலறைகள், நூலகம் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகிய நவீன வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். இதற்காக ரூ.32.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களில் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு மாணவருக்கு ரூ.200/- வீதம் ஒரு வருடத்தில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.38.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இனத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, இலவச சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டம், இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் மற்றும் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களினால் அவர்களது வாழ்க்கைத் தரம் பொருளாதார ரீதியாக உயர்ந்து வருகின்றது.

### தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.16,000/-ம் நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.24,000/-ம் ஆகும்.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.31.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும்பொருட்டு இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.16,000/-ம் நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.24,000/-ம் ஆகும்.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.85.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சிகளும், வேலைவாய்ப்புத் திட்டங்களும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி நிலையம்

சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அனைத்திந்திய சிவில் பணிகளுக்கான தேர்வுகளில் வெற்றி பெற போட்டியிடும் வகையில் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க கருத்தில் கொண்டு 1971 ஆம் ஆண்டிலேயே சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்றினை தொடங்கியது. இப்பயிற்சி நிலையத்தில் ஆண்டுதோறும் நூறு நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் வருமான வரம்பின்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இருப்பினும், இப்பயிற்சி நிலையத்துடன் கூடிய விடுதியில் தங்குவதற்கு ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் மாணவ, மாணவியரின் உணவுச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.500/- வீதம் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனத்தைப் போன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பயிற்சி அளிப்பதற்கென தனியே ஒரு பயிற்சி நிலையம் சென்னையில் இயங்கி வந்தது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் ஒன்றாக இணைந்து வாழ்வதன்மூலமே நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என்ற சமத்துவபுர கோட்பாட்டின்படி, இவ்வாறாக



கடந்த 1999-2000 ஆம் ஆண்டு இரு பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.37.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற்றிட மற்றும் வருமானமுள்ள சுய தொழில் செய்திட வேலைவாய்ப்புத் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளுக்கான கட்டணத்தை அரசே முழுவதுமாக ஏற்கிறது.

2006-2007 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இளைஞர்களுக்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 42 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இப்பயிற்சிகள் பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்குபவர், காலணி மற்றும் தோல்பொருள் தயாரிப்பு, ஆடை தயாரிப்பு, ஆடை வடிவமைப்பு, நெசவுத் தொழில், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, மருத்துவ செவிலிய உதவியாளர் பயிற்சி, உணவக நிர்வாகம் மற்றும் உற்பத்தி, அழகுக் கலை, கணினி வடிவமைப்பு, கணினி பயிற்சிகள், செல்போன் சர்வீசிங், ரேடியோ/டி.வி. மெக்கானிஸம் மற்றும் பிற பிரிவுகளில் அளிக்கப்பட்டன.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.969.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்

சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ள நிலமற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு 3 சென்ட் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டு முதல் 2005-2006 வரை இத்திட்டம் அரசால் தற்காலிகமாக கைவிடப்பட்டது. [illegible] முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இவ்வரசு 2006-2007 முதல் இத்[illegible]த்தை

227654
சென்னை-600 008

மீளவும் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளது. கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏற்கெனவே இருந்து வந்த 15 தனி வட்டாட்சியர் பணியிடங்களை உடன் பணியாளர்களுடன் மீளவும் தோற்றுவிக்க அரசு உத்தரவிட்டு நடப்பாண்டில் பணியாளர்கள் அமர்த்தப்படுவர்.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.525.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருதல்**

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் தவிர, ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டாக்களைப் பெற்ற பயனாளிகள் தத்தம் வீட்டு மனைகளில் வீடுகளைக் கட்டி குடியேறுவதை ஊக்குவிக்கும் விதமாக அப்பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகளான சாலை வசதிகள், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.128.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈமச்சடங்கிற்கு உதவித் தொகை வழங்குதல்**

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் அவர்களது குடும்பத்திற்கு ஈமச்சடங்கிற்காக ரூ.500/- உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏனைய திட்டங்கள்**

**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் 'அரசு' சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை வழங்கி வருகிறது. இவ்விருதுக்காகத் தேர்வு செய்யப்படும் பெரியோர்களுக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கமும் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் அரசு விழா ஒன்றின்மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது இனமுரசு திரு. சத்யராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை 1993 ஆம் ஆண்டு அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள தொழில், வியாபாரம் அல்லது திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

53-94—7c

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது டில்லியில் அமைந்த தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராக செயல்படுகிறது.

கீழ்க்கண்ட நிறுவனங்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன்களை வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் துணை முகவர்களாக செயல்பட அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

1. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3. கூட்டுறவு வங்கிகள்
4. தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புது டில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 1993-1994 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ரூ.8165.54 இலட்சம் காலக்கடனாகப் பெற்றுள்ளது. இதுவரையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு காலக்கடன் வகையில் மேற்கண்ட தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுபான்மையினருக்குக் கடன் வழங்குவதற்காக புது டில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சம் காலக்கடனாகப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கும் முன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினர்களுக்கு காலக்கடன் திட்டத்தின்கீழ் ரூ.143.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதித்தொகையை பயன்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனி நபர் கடன்களைப் (தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு



விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வழங்கும் கடன்கள் உட்பட) பொதுக்கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 45,232 நபர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ.5,118.26 இலட்சங்கள் கடன் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்காக தலா ரூ.2,000/- வீதம் கூட்டுறவு வங்கிகளின்மூலம் சிறு கடன் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது இந்தக் கடன் தொகையானது நபர் ஒருவருக்கு ரூ.10,000/- என உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் புது டில்லி, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் 1,31,050 மகளிர் பயனடையும் வகையில் இதுவரையில் ரூ.3,702.01 இலட்சங்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்க மானியத்துடன்கூடிய கடன் அளிக்கும் திட்டம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக, அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை மானியத்துடன்கூடிய கடன் வழங்குவதற்கான புதிய திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும். வங்கிக் கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூபாய் 50,000/- அளவிலான 50 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் இத்திட்டம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலமாக செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்கு கடன் வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மகளிருக்கு அதிகபட்ச திட்ட மதிப்பீட்டுத் தொகையாக ரூ.10,000/- வரை கடனுதவி வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 315 மகளிருக்கு மொத்தம் ரூ.30.58 இலட்சங்கள் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## நடமாடும் சலவையகம் அமைத்தல்

நடமாடும் சலவையகம் அமைக்க பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக, நபர் ஒருவருக்கு ரூ.5,000/- வழங்கப்படுகிறது (மானியம் ரூ.2,000/- + கடன் ரூ.3,000/-). 1,000 நபர்களுக்கு பொது காலக்கடன் திட்ட விதிமுறைகளின்படி மேற்படி தொகையைக் கடனாக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கடன் 6% வட்டி வீதத்தில் 2 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

## தமிழ்நாடு வக்ஃபு வாரியம்

வக்ஃபு சட்டம், 1995 (மைய அரசு சட்டம் 43-ன் கீழ் 1995)-ன அடிப்படையில் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் 1997-ல் 13 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள வக்ஃபு சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைக் கொண்ட 23 வக்ஃபு தீர்ப்பாயங்கள் புதிய வக்ஃபு சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது.

வக்ஃபு சட்டம், 1995 (மைய அரசு சட்டம் 43-ன் கீழ் 1995)-ன் அடிப்படையில் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் ஐந்தாண்டுக்கொருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. அதனடிப்படையில், இவ்வாரியத்திற்கு 17-11-2006 அன்று 9 உறுப்பினர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டனர். பின் 28-2-2007 அன்று தேர்தல் நடத்தி மாநில பார் கவுன்சில் உறுப்பினர்களிலிருந்து 2 நபர்களும் மற்றும் முத்தவல்லி பிரிவிலிருந்து 2 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

தமிழ்நாடு வக்ஃபு வாரிய நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு தனது நிதியிலிருந்து 2006 - 2007 ஆம் ஆண்டுக்கு ரூ.45.00 இலட்சம் நிர்வாக மானியம் அளித்தது. மேலும் வசதியற்ற, நிதியுதவி தேவைப்படும், வக்ஃபு நிறுவனங்களின் மசூதிகள் மற்றும் தர்கா (ம) அடக்கஸ்தலங்கள் ஆகியவற்றை பழுதுபார்ப்பதற்கும் (ம) சிறிய அளவிலான புனரமைப்புப் பணிகளுக்கும் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டது.



தமிழ்நாடு வக்ஃபு வாரியம், மதுரையில் உள்ள M.S.S. வக்ஃபு வாரியக் கல்லூரியை நிர்வகித்து வருகிறது.

## பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள்

மசூதிகளையும் தர்காக்களையும் புதுப்பிப்பதற்காக தமிழ்நாடு அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.52.00 இலட்சம் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

## சிறிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள்

மசூதிகள் மற்றும் தர்காக்களைப் புதுப்பித்தல் மற்றும் முஸ்லிம் இடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகளுக்கும் 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உலமா ஓய்வூதியத் திட்டம்

வக்ஃபு நிறுவனங்களில் 20 ஆண்டுகள் பணியாற்றி 60 வயதை அடைந்த உலமாக்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றிற்கு ரூ.750/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலமாக 2,122 பயனாளிகள் ஓய்வூதியம் பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக, 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.1.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டில் ஹஜ் குழு சட்டம், 1958-ன்கீழ் நிறுவப்பட்டது. மூன்றாண்டுக்கொருமுறை அரசால் இக்குழு திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

புதிய ஹஜ் குழு சட்டம், 2002-ஐ மத்திய அரசு 12-6-2002 அன்று அறிவிக்கை செய்தது. இச்சட்டத்தில் மத்திய மற்றும் மாநில அளவிலான ஹஜ் குழுக்களை சட்டப்படியான குழுக்களாக அமைத்து ஹஜ் புனிதப் பயணம் குறித்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 20-11-2006 ஆம் நாளன்று, அலுவல்சார் உறுப்பினர்-செயல் அலுவலர் உள்ளிட்ட 16 புதிய உறுப்பினர்கள் அடங்கிய தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவினை தமிழக அரசு திருத்தியமைத்தது.

ஹஜ் புனிதப் பயணம் குறித்த பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, நிர்வாகச் செலவினங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.10.00 இலட்சம் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வுக் குழுவில் உறுப்பினர்களை அனுப்புவதற்கு அரசு மானியம்

புனிதப் பயணிகளுக்கு சேவை புரிவதற்காக ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களைத் தெரிவு செய்வதற்கான கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்காகும் செலவினத்தை மானியமாக தமிழக அரசு தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அளித்து வருகிறது. இதற்கென 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.8.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்

சென்னை மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம், ஆதரவற்ற முஸ்லிம் மகளிருக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கி வருகிறது. இச்சங்கம் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1,92,277/- நிதி திரட்டியது. அதற்கு இணையான தொகையை 2006-2007 ஆம் ஆண்டில் தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் மற்ற 30 மாவட்டங்களிலும் (அமையவிருக்கும் அரியலூர் மாவட்டம் உட்பட) முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.



## புதிய திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2007–2008–ல் செலவு |
|---|---|---|---|
| **தலைமைச் செயலகம்** | | | |
| 1 | புதிய நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 1.00 | 1.00 |
| 2 | சர்வர், கணினி, பிரிண்டர் மற்றும் துணை பாகங்களுடன் வலைப்பின்னல் வசதி ஏற்படுத்தல் | 7.36 | 7.36 |
| **தலைமைச் செயலகம் மொத்தம்** | | 8.36 | 8.36 |
| **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்** | | | |
| 1 | அதிகத் திறன்பெற்ற 2 எண்ணிக்கையிலான டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் இயக்ககத்திற்கு வழங்குதல் | 1.00 | 1.00 |
| 2 | இயக்ககத்திற்கு கோப்புகள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாப்புடன் வைக்க இரும்பாலான 10 அலமாரிகள் வழங்குதல் | 0.80 | 0.80 |
| 3 | 30 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு கூடுதலாக ஒரு கணினியும், துணை பாகங்களும் வழங்குதல் | 13.50 | 13.50 |
| 4 | மின் ஆளுமையை செயற்படுத்த அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கும் இணைய தள வசதி வழங்குதல் | 10.05 | 10.05 |
| 5 | 392 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்குதல் | 31.36 | 31.36 |
| 6 | பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு முதலுதவிப் பெட்டி வழங்குதல் | 4.06 | 4.06 |
| 7 | 80 பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு இன்வெர்டர் வழங்குதல் | 12.00 | 12.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2007–2008–ல் செலவு |
|---|---|---|---|
| 8 | 200 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்குதல் | 22.00 | 22.00 |
| 9 | 95 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/ மாணவியர் விடுதிகளுக்கு சிறப்பு பழுது பார்த்தல் | 20.04 | 20.04 |
| 10 | கல்லூரி விடுதி நூலகங்களுக்கு பார்வை குறிப்புப் புத்தகங்கள் வழங்கல் | 8.00 | 8.00 |
| 11 | துறையின் நலத் திட்டங்களின் செயலாக்கம் குறித்து விழிப்புணர்வை விளம்பரங்கள்மூலம் உண்டாக்குதல் | 5.00 | 5.00 |
| | **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மொத்தம்** | **127.81** | **127.81** |
| | **மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்** | | |
| 1 | கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்கு இரண்டு நீராவிக் கொதி கலன்கள் வழங்குதல் | 25.00 | 25.00 |
| 2 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி/பள்ளி விடுதிகளுக்கு முதலுதவிப் பெட்டி ஒன்று ரூ.650/– வீதம் வழங்குதல் | 3.23 | 3.23 |
| 3 | 68 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 39 சீர்மரபினர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு பழுது பார்த்தல் | 14.87 | 14.87 |
| 4 | 38 கல்லூரி விடுதிகளுக்கு இன்வெர்டர் (Inverter) வழங்குதல் | 5.70 | 5.70 |
| 5 | கல்லூரி விடுதி நூலகங்களுக்குப் பார்வை குறிப்புப் புத்தகங்கள் வழங்குதல் | 3.80 | 3.80 |
| 6 | 205 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 93 சீர்மரபினர் விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரம் ரூ.8.000/– வீதம் வழங்குதல் (298 விடுதிகள்) | 23.84 | 23.84 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2007–2008–ல் செலவு |
|---|---|---|---|
| 7 | 150 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 50 சீர்மரபினர் விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்குதல் | 22.00 | 22.00 |
| 8 | மதுரை. திண்டுக்கல். தேனி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் 14 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 73.58 | 73.58 |
| 9 | நிலஎடுப்பு–மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை இயக்ககத்திற்கு ஒரு பணியாளர் குழுவினை வழங்குதல் | 7.35 | 7.35 |
| | **மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் மொத்தம்** | **179.37** | **179.37** |
| | **தமிழ்நாடு வக்ஃபு வாரியம்** | | |
| 1 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகக் கட்டடத்தில் மின்னாக்கி நிறுவுதல் | 5.00 | 5.00 |
| 2 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகத்திற்கு "ஈபிஏபிஎக்ஸ்" முறை தொலைபேசி அமைத்தல் | 2.00 | 2.00 |
| 3 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய அலுவலகத்திற்கு இணையதள வசதியுடன் ஒரு சர்வர் மற்றும் 10 கணினிகள் வாங்குதல் | 6.00 | 6.00 |
| 4 | மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்கள் பராமரிப்பு வழக்குகள் தொடர்பாக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளை செயற்படுத்துவதற்காக தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் அளித்தல் | 1.00 | 1.00 |
| 5 | பெரும் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு மானியம் | 52.00 | 52.00 |
| 6 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய மற்றும் 10 சரக அலுவலகங்களுக்கு தொலை நகல் படிப்பெருக்கி மற்றும் தொலைபேசி அமைத்தல் | 8.00 | 8.00 |

[2007 ஏப்ரல் 5

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தச் செலவு | 2007–2008–ல் செலவு |
|---|---|---|---|
| 7 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய கூட்டரங்கு, தலைவர் அறை மற்றும் கணினி சர்வர் பகுதிகளில் குளிர் சாதன வசதி அளித்தல் | 5.00 | 5.00 |
| 8 | தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்கு அலமாரிகள் வாங்குதல் | 1.50 | 1.50 |
| 9 | தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் "எம்.ஐ.எஸ்." முறையை வலிமைபடுத்துதல் | 2.00 | 2.00 |
| தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மொத்தம் | | 82.50 | 82.50 |
| தமிழ்நாடு ஹஜ் குழு | | | |
| 1 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் அலுவலக உபயோகத்திற்காக மின்னாக்கி (Generator) வழங்குதல் | 0.60 | 0.60 |
| 2 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு டிஜிட்டல் நகல் அச்சடிக்கும் இயந்திரம் (படியெடுப்பு பொறி) வழங்குதல் | 1.40 | 1.40 |
| தமிழ்நாடு ஹஜ் குழு மொத்தம் | | 2.00 | 2.00 |
| பெரு மொத்தம் | | 400.04 | 400.04 |

**முடிவுரை**

தமிழக அரசு நலிவுற்ற நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கு மிக முக்கியத்துவம் அளிப்பதுடன் அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மேலும் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து மேற்குறிப்பிட்டுள்ளவாறு இந்தியாவில் முன்னோடி மாநிலமாக தொடர்ந்து திகழ பல்வேறு சீரிய நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.



2007 ஏப்ரல் 5]

## இணைப்பு

### 2007–2008 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 187.44 | – | – | 187.44 |
| வக்ஃப், ஹஜ் குழு மற்றும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் | 276.85 | – | – | 276.85 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 19561.85 | 1897.79 | – | 21459.64 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 15262.29 | 1349.93 | – | 16612.22 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் | 36.70 | – | – | 36.70 |
| தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 27.19 | – | – | 27.19 |
| மொத்தம் | 35352.32 | 3247.72 | – | 38600.04 |

# இணைப்பு–II

(370 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## சிறுபான்மையினர் நலன்

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது)

**முன்னுரை**

தமிழ்நாட்டில் வாழும் இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்த சிறுபான்மையினரின் அரசியல் மற்றும் சட்ட ரீதியான உரிமைகளைப் பாதுகாப்பதிலும், பெரும்பான்மை மக்களுக்கு நிகராக, அவர்கள் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் வளர்ச்சியடைய சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கிப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றுவதிலும் இவ்வரசு முன்னணியில் உள்ளது.

2. அரசியல் சாசன சட்டப்படி சமய, மொழி வகையில் சிறுபான்மையினரின் நலனையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு, அவர்களது இன்னல்களைக் களைந்திட, 1989-ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் அமைத்த இந்த அரசு, அவர்களது நலிந்த நிலையினைப் போக்கிடவும் பொருளாதார நிலையினை உயர்த்திடவும், 1999-ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தையும் தோற்றுவித்தது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் 2006-2007 ஆம் ஆண்டில் சிறுபான்மையின மக்களில் தொழில் முனைவோர் சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் தொடங்க ரூ.8/- கோடி கடனுதவி வழங்கப்பட்டது.

3. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின்மூலம் தனிநபர் காலக்கடன் திட்டம், கறவை மாடுகள் வழங்கும் திட்டம், இஸ்லாமிய இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன்மூலம் ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கிட கடன் உதவி, சுய உதவிக் குழுக்களுக்குச் சிறு கடன் உதவிகள், போன்ற உதவிகளை வழங்கிச் சிறுபான்மையினரின் வாழ்வு ஆதாரத்திற்கு அரசு துணை நிற்கிறது.

[2007 ஏப்ரல் 5

4. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்க, மைய அரசு அமைத்த நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரையின்படி, சமூக, பொருளாதார ரீதியிலும், கல்வியிலும், பின்தங்கியுள்ள சிறுபான்மையினரின் நிலையைக் கருத்தில்கொண்டு, தனிக் கவனம் செலுத்தி அனைத்துத் துறைகளிலும், அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்திடவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

5. சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்திட, 1999 ஆம் ஆண்டில், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5/- கோடியாகும்.

**தனிநபர் காலக்கடன் திட்டம்**

6. சிறுபான்மையினர் பயனடையும் விதத்தில் அவர்களுக்கு 6 விழுக்காடு வட்டியில் சொந்தமாகத் தொழில்/வியாபாரம் தொடங்குவதற்குத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் வழங்குகிறது. இக்கழகத்தின் ரூபாய் ஒரு இலட்சம் வரை கடன் அனுமதிக்கப்படுகிறது. ரூபாய் ஒரு இலட்சம் முதல் ரூபாய் ஐந்து இலட்சம் வரையிலான கடன்கள், தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழக அனுமதி பெற்று வழங்கப்படுகின்றது. இக்கடன்கள், மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்றன.

7. இஸ்லாமிய இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அதன்மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்கிட 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் தாய்கோ வங்கிமூலம் கடன் வழங்கப்படுகிறது.

**கறவை மாடுகள் வாங்கிட கடன் வழங்கும் திட்டம்**

8. ஒரு கறவை மாடு வாங்குவதற்கு ரூ.15,000/- வீதம் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்கு ரூ.30,000/- கடன் அளிக்கப்படுகின்றது. இக்கடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தனிநபர் காலக்கடன் திட்டத்தின்கீழ் 6 விழுக்காடு வட்டியில் ஆவின் மூலமாக வழங்கப்படுகின்றது.



2007 ஏப்ரல் 5]

**1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்**

9. இத்திட்டத்தின்கீழ் 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்து, பயிற்சிக்குப் பின்னர் தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழக தனி நபர் கடன் திட்டத்தின் கீழ், 6 விழுக்காடு வட்டியில் தலா ரூபாய் 25,000/- வீதம் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்கள்மூலம் சிறுகடன் திட்டம்**

10. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், நபர் ஒருவருக்கு ரூ.10,000/-க்கு மிகாமல், 4 விழுக்காடு வட்டியில் சுய உதவிக் குழுக்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்குச் சில்லரை வியாபாரம் செய்திட கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு கடன் வழங்கப்படுகிறது. சிறுபான்மையின மக்களிடையே சிறு கடன் பெறுவதற்கான தேவை மற்றும் ஆர்வமும் அதிகம் உள்ளதால் கறவை மாடுகள் வாங்கிட, கோழிப் பண்ணை அமைத்திட மற்றும் காலணிகள் செய்யும் தொழிலில் ஈடுபட சிறுகடன் தொகையாக ரூ.10,000/- வழங்கப்படுவதை, ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்கிடும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**போக்குவரத்துக் கடன்**

11. சிறுபான்மை மக்கள் சிறுந்து/வேன் மற்றும் டிராக்டர் போன்ற போக்குவரத்து வாகனங்கள் வாங்கிட, ரூ.3.13 இலட்சம் வரை 10 விழுக்காடு வட்டியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்கப்படுகிறது.

**மகிளா சம்ரிதி யோஜனா திட்டம்**

12. இத்திட்டம், அரசு சாரா அமைப்புகள்மூலமாக ரூ.1,80,000/- திட்ட மதிப்பீட்டில் 40 சிறுபான்மையின மகளிர் பயன்பெறும் வகையில், தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முடிந்தவுடன் பயனாளிகள் சுய உதவிக் குழுக்களை அமைத்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் சிறு கடன் பெற்றிட ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**பங்கு மூலதனம்**

13. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தன்னுடைய வளர்ச்சி மற்றும் சிறுபான்மையின மக்கள்

நலனுக்காகச் சீரிய முறையில் நலத் திட்டங்களைச் செயல்படுத்திட தமிழக அரசிடமிருந்து ரூபாய் 6 கோடியும், மத்திய அரசிடமிருந்து ரூபாய் 4 கோடியும் பங்கு மூலதனம் பெறுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கல்விக் கடன்**

14. தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களைத் தயாரித்து அவற்றைச் சீரிய முறையில் செயல்படுத்துவது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும். தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள அரசு/தனியார் கல்வி நிறுவனங்களில் எம்.பி.பி.எஸ்./பி.டி.எஸ்./பி.யு.எம்.எஸ்/பி.பார்ம்./பி.எஸ்ஸி. (நர்ஸிங்)/பி.எஸ்ஸி. (வேளாண்மை)/பி.வி.எஸ்.சி./பி.இ./பி.டெக்./பி.ஆர்க் ஆகிய இதர தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் ஏழை சிறுபான்மையின மாணவ/மாணவியருக்கு 3 விழுக்காடு வட்டி விகிதத்தில் ஆண்டுக்கு ரூ.50,000/- வீதம் அவர்களது படிப்புக் காலம் முழுவதற்கும், ஐந்து ஆண்டுகள் வரை ரூ.2,50,000-க்கும் மிகாமல் கடன் வழங்கிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பொருளாதார மேம்பாட்டு ஆணையங்களின் இணைப்பு ஆணை இரத்து**

15. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முந்தைய ஆட்சியில் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதிக்கும் வகையில் அமைந்த பல நடவடிக்கைகளை மாற்றி அமைத்ததுடன் பெரும்பான்மையின மக்களுக்கு இணையாகச் சிறுபான்மையினர், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிடவும், அவர்களது மதம், மொழி, பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றின் மதிப்புகளைப் பேணிக் காத்திடவும் உறுதிபூண்டதற்கு இணங்க, பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. முந்தைய அரசு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோருக்கான பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துடன் இணைத்து ஆணையிட்டதை தமிழ்நாட்டில் சிறுபான்மையினருக்கு ஒரு தனித்தன்மையை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இரத்து செய்து, இரு பொருளாதார மேம்பாட்டுக் கழகங்களும் தனித்தனியே செயல்பட வழிவகை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.



16. இவற்றிற்கு முத்தாய்ப்பாக, தமிழகத்தில் சிறுபான்மையினர் நலன்களுக்காக இவ்வரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை ஆய்வு செய்த மத்திய அரசின் தேசிய சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தலைவர் நீதியரசர் திரு. எம்.எஸ்.ஏ. சித்திக் அவர்களும், அவர்களின் தலைமையின்கீழ் தமிழகத்திற்கு வருகைபுரிந்த குழுவினரும் தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் செயல்பாடுகளில் முழு நிறைவு கொண்டு, இவ்வரசு "சிறுபான்மையினருக்காகப் பாடுபடும் அரசு" (Pro-Minority Government) எனப் புகழாரம் சூட்டி பாராட்டியுள்ளது.

17. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது, அரசு பின்வரும் திட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்துகிறது:

(அ) கல்விக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்;

(ஆ) பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்புகளில் சம பங்களித்தல்;

(இ) சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்;

(ஈ) வகுப்பு மோதல்களை முன்னெச்சரிக்கையுடன் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்;

(உ) எங்கெல்லாம் முடியுமோ, அங்கு திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளில் 15 விழுக்காடு நிதியினைச் சிறுபான்மையினருக்கெனத் தனி இலக்குகள் நிர்ணயித்தல்;

(ஊ) சிறுபான்மையின மாணவர்கள், அவர்களுடைய தாய்மொழியில் கல்வி பயில வசதி செய்து கொடுத்தல்;

(எ) மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம்மூலம் பாட நூல்கள் வழங்குதல்;

(ஏ) உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான உயர் ம[illegible]க்

குழு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான குழுக்கள் ஆகியவற்றின்மூலம் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்துக் கண்காணிக்கப்படுகின்றன.

## முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்

18. தமிழ்நாட்டில் வாழும் ஆதரவற்ற விதவை மற்றும் முதியோர்கள் பயனடையும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில், முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு இஸ்லாமிய மகளிர் உதவிச் சங்கத்திற்கும், ரூ.100 இலட்சம் ஆரம்பத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இச்சங்கங்கள் நிதியினை நன்கொடையாக வசூலிக்கும். இச்சங்கங்கள் வசூலிக்கும் நிதியின் அளவிற்கு இணையாக அரசு மானியம் அளிக்கும்.

## சிறுபான்மையினர் நலனுக்காகத் தனி இயக்ககம்

19. தமிழக அரசு, சிறுபான்மையின மக்களின் நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னோடியாக விளங்குகிறது.

மேதகு ஆளுநரின் உரையில், இவ்வரசு சமுதாயத்தில் அனைத்து மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபடும் எனவும், சிறுபான்மை மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களைத் தீட்டுவதற்கு முடிவு செய்துள்ளது எனவும் அறிவித்தது. மேலும், பாரதப் பிரதமரின் சிறுபான்மையினர் நலனுக்காகப் புதிய 15 அம்ச திட்டத்தினைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கும், பாரதப் பிரதமரால் அமைக்கப்பட்ட நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இஸ்லாமியர் சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்காகத் திட்டங்கள் வகுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளது. சிறுபான்மையின மக்களுக்காகத் தனித் திட்டங்களை தீட்டுவதற்கும், அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் இந்திய அரசுப் பணி அலுவலர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு தனியே சிறுபான்மையினர் நல இயக்குனரகம் ஒன்று விரைவில் தொடங்கப்படும்.



## கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சிறுபான்மையினத்தவருக்குத் தனி இடஒதுக்கீடு

20. தமிழகத்தில் நடைமுறையிலுள்ள 69 விழுக்காடு மொத்த இடஒதுக்கீட்டில், 20 விழுக்காடு இடங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கும், 30 விழுக்காடு இடங்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கிருத்துவர் மற்றும் இஸ்லாமியர்களில் உள்ள பெரும்பாலான பிரிவினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய இடஒதுக்கீட்டின்கீழ் பயனடைகின்றனர். எனினும், அனைத்து கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் கிருத்துவ மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையினருக்குத் தனி இடஒதுக்கீடு வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

## சிறுபான்மையினர் திறன் பயிற்சி மற்றும் கடனுதவி

21. தனியார் துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும், சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், நலிந்த சிறுபான்மையினர் திறனை மேம்படுத்துவதற்கும் (Skill Upgradation) ரூபாய் 2.5 கோடி செலவில் சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், 5,000 சிறுபான்மையின இளைஞர்கள் மற்றும் பெண்களுக்குத் தலைசிறந்த நிறுவனங்களில் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள், ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடை தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். தொழில் முனைய முன்வரும் சிறுபான்மையினத்தவர்க்கு நடப்பு நிதியாண்டில் சிறு மற்றும் குறுந்தொழில் தொடங்கிட தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் ரூபாய் 30 கோடி கடன் உதவி அளிக்கப்படும். இதன்மூலம் 21,000 சிறுபான்மையினர் பயன்பெறுவர்.

22. இவ்வரசு, தெய்வப் புலவர் திருவள்ளுவரின் கருத்தான "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதை ஏற்றுக்கொண்டு, பெரும்பான்மை மக்களுக்கு இணையாகச் சிறுபான்மையினர் அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் பெற அயராது பாடுபட்டு வருகிறது.

# இணைப்பு III

*(370 ஆம் பக்கத்தில் ஆரம்பத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 11

## முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**முன்னுரை**

நிலம் மற்றும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்களைப் பரிமாற்றம் செய்வதற்குரிய விற்பனை, குத்தகை, அடமானம், விருப்புறுதி போன்ற ஆவணங்களைப் பதிவு செய்வதில், மதிப்புமிக்க மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சேவையைப் பொதுமக்களுக்கு பதிவுத் துறை வழங்கி வருகிறது. ஆவணங்களின் பதிவு அத்தகைய பரிமாற்றங்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை அளிக்கிறது. பதிவுத் துறை கடந்த 1865 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்துறை, சொத்துப் பரிமாற்றத்தில் அடங்கியுள்ள அசையாச் சொத்தின் சந்தை மதிப்பின் மீது முத்திரைத் தீர்வையை விதித்து வசூலித்து வருகிறது. ஆவணங்களைப் பதிவு செய்வதில், துறையால் வழங்கப்படும் சேவைகளுக்காகப் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. துறை, 2005-2006 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2,349 கோடி வருவாய் ஈட்டியது. 2006-2007-ல் பிப்ரவரி 2007 முடிய ரூபாய் 2,914.31 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது, அதற்கு முந்தைய ஆண்டான 2005-2006-ல் ஈட்டப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில், 45 விழுக்காடு வளர்ச்சியாகும். 2006-2007 நிதியாண்டின் முடிவிற்குள் (அதாவது 31 மார்ச், 2007-க்குள்), துறையின் வருவாய் அதற்கு முந்தைய நிதியாண்டை விட ரூபாய் 1,000 கோடி அதிகமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. மாநில அரசுக்கு இத்துறையின் வருவாய் பங்களிப்பு, வணிக வரி மற்றும் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைகளுக்கு அடுத்தபடியாக உள்ளது.

ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பின்மீது, முத்திரைத் தீர்வை 6 சதவீதம், மாற்றுத் தீர்வை (மேல்வரி) 2 சதவீதம், மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவீதம் விதிப்பதன்மூலம் துறைக்கு வருவாய் கிடைக்கிறது. விற்பனை, பரிவர்த்தனை, கொடை, சுவாதீனத்துடன் கூடிய அடமானம் ஆகிய ஆவணங்களின்மீது மட்டும் மாற்றுத் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்த மாற்றுத் தீர்வை நகரப் பகுதிகளிலுள்ள உள்ளாட்சிகளுக்கு 95 விழுக்காடும், ஊரகப் பகுதிகளிலுள்ள உள்ளாட்சிகளுக்கு 97 விழுக்காடும் ஒப்படைவு செய்யப்படுகிறது.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் வசூலிக்கப்பட்ட வருவாய்**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | வளர்ச்சி சதவீதம் | வசூலிக்கப்பட்ட வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி சதவீதம் |
|---|---|---|---|---|
| 2001-2002 | 1390394 | 0.49% | 1264.20 | 15.54% |
| 2002-2003 | 1581764 | 13.76% | 1648.86 | 30.43% |
| 2003-2004 | 1592934 | 0.71% | 1732.91 | 5.10% |
| 2004-2005 | 1761696 | 10.59% | 1881.53 | 8.58% |
| 2005-2006 | 2011566 | 14.18% | 2348.64 | 24.83% |
| 2006-2007 (பிப்ரவரி 2007 முடிய) | 2188773 | 22.11% | 2914.31 | 43.98% |

பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் ஆகிய இரண்டு இனங்களிலும், துறை 2006-2007 ஆம் ஆண்டில் முறையே 22.11% மற்றும் 43.98% வளர்ச்சி அரசின் சிரத்தையான முயற்சியால் அடைந்துள்ளது.





**துறையால் நிர்வகிக்கப்படும் வரிச் சட்டங்கள்**

பதிவுத் துறை பின்வரும் வரிச் சட்டங்களை நிர்வகிக்கின்றது:

1. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
2. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
3. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)
4. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)
5. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)

**வரையறுக்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் சமூகச் சட்டங்கள்**

கீழ்க்காணும் சமூகச் சட்டங்களின்கீழ் சில வரையறுக்கப்பட்ட பணிகளைப் பதிவுத் துறை புரிகின்றது:

1. 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
2. 1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)
3. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)
4. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
5. 1932 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 3/1936)
6. 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
7. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 8/1961)
8. 1932 ஆம் ஆண்டு கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)

[2007 ஏப்ரல் 5

## துறையின் நிர்வாக அமைப்பு முறை

### பதிவுத் துறைத் தலைவர்

சென்னை சாந்தோமில் உள்ள பதிவுத் துறைத் தலைவர் துறையின் தலைவர் ஆவார். இவர், 1899 ஆம் ஆண்டு இந்தியப் பதிவுச் சட்டத்தின்கீழ் சட்டரீதியான முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அலுவலராக உள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் பதிவாளராகவும் உள்ளார். இவர், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் 17-ஏ (1) மற்றும் 17-ஏ (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

### தலைமையிடத்தில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவிடும் அலுவலர்கள்

பதிவுத் துறைத் தலைவர் தனது பணிகளை ஆற்ற தலைமையிடத்தில் பின்வரும் அலுவலர்கள் அவருக்கு உதவுகின்றனர்:

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டுப் பதிவாளர்
5. நேர்முக உதவியாளர்(பொது)
6. மாவட்டப் பதிவாளர்(வழிகாட்டி)
7. மாவட்டப் பதிவாளர்(ஆய்வு)
8. நேர்முக உதவியாளர்(சீட்டு)
9. கணக்கு அலுவலர்

### துணைப் பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான பதிவு மண்டலங்கள்

நம் மாநிலத்தில், சென்னை, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியைத் தலைமையிடங்களாகக் கொண்டு ஒன்பது பதிவு மண்டலங்கள் உள்ளன. மண்டலத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுகின்றனர். இவர்கள் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளர்களாகவும் உள்ளனர்.



2007 ஏப்ரல் 5]

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் ஐந்து உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். சார் பதிவாளர் அலுவலகங்களைத் திடீராய்வு செய்வது, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின்மீது விசாரித்து அறிவது, மாவட்டப் பதிவாளர்களின் (தணிக்கை) பணிகளை சோதனை சரிபார்ப்பு செய்வது போன்றவை இவர்களது பணிகளாகும்.

### பதிவு மாவட்டங்கள்

ஐம்பது பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு நிருவாக மாவட்டப் பதிவாளர் தலைமையின்கீழ் செயல்படுகின்றன. அவர்கள், சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டுக்களின் துணைப் பதிவாளராகவும், திருமணங்களின் பதிவாளராகவும், நிறுவனங்களின் பதிவாளராகவும் உள்ளனர்.

### தணிக்கை அலகுகள்

ஒவ்வொரு தணிக்கை மாவட்ட பதிவாளர் தலைமையில், 45 தணிக்கை அலகுகள் உள்ளன. அவர்கள், சொத்துக்களின் சந்தை மதிப்பு சரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும், அதன்மீது முத்திரைத் தீர்வை முறையாக வசூலிக்கப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்ய பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் 100 சதவீதம் தணிக்கை செய்கின்றனர்.

### சார் பதிவாளர் அலுவலகங்கள்

இம்மாநிலத்தில் 558 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. சந்தை மதிப்பைச் சரிபார்த்து, ஆவணங்களின் சொத்துக்களின்மீது முத்திரைத் தீர்வையும், பதிவுக் கட்டணமும் முறையாகச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்த பின்னர், அவ்வாவணங்களைப் பதிவு செய்வது சார் பதிவாளரின் தலையாய கடமை ஆகும். இவர், திருமணங்கள் பதிவாளராகவும் மற்றும் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் உதவிப் பதிவாளராகவும் செயல்படுகிறார்.

## பயிற்சி மையம்

சென்னையில் துறையின் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. துறையின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும், முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் துறையால் நிருவகிக்கப்படும் இதரச் சட்டங்கள் ஆகியவற்றை நிருவகிப்பது குறித்து இங்கு முனைப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்வது குறித்தும்கூட பயிற்சி அளிக்கப்படுகிறது.

## புலனாய்வுக் குழு

கட்டடங்கள் அடங்கிய அசையாச் சொத்துக்களைப் பரிமாற்றம் செய்யும் நிகழ்வுகளில், அந்தக் கட்டடங்களின் உண்மையான மதிப்பின் மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். கட்டடங்களின் மதிப்பு குறைவு செய்யப்பட்டுள்ளதைக் கண்டறிய சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் எட்டு மாவட்டப் பதிவாளர்கள், நான்கு சார் பதிவாளர்கள் மற்றும் இரண்டு உதவி நிர்வாகப் பொறியாளர்கள் ஆகியோரைக் கொண்ட புலனாய்வுக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

## விழிப்புப்பணிக் குழு

பதிவுத் துறைப் பணியாளர்கள்மீது பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து விசாரித்தறிய, ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் சார் பதிவாளரை உள்ளடக்கிய விழிப்புப் பணிக் குழு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

## வழிகாட்டி மதிப்புகள்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பரிமாற்றம் செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வையை வசூலிக்க வழிவகை செய்கிறது. பதிவுக்குத் தாக்கலாகும் ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களின் சந்தை மதிப்பினை மதிப்பீடு செய்யும் பொருட்டு அனைத்துப் பதிவு அலுவலர்களுக்கும் கிராமவாரியான உத்தேச சந்தை மதிப்பைக் குறிக்கும் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. பொது மக்கள் பயன்பெறும் வகையில் இவ்வழிகாட்டி மதிப்புகள் துறையின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.



பதிவுத் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் வழிகாட்டி மதிப்புகளில் பெருமளவில் முரண்பாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொணரப்பட்டது. இம்முரண்பாடுகளைக் களைந்து வழிகாட்டி மதிப்புகள் சரியான சந்தை மதிப்பைப் பிரதிபலிப்பதாக இருக்கும் பொருட்டு வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்க வட்டக் குழுக்கள், மாவட்டக் குழுக்கள் மற்றும் மைய மதிப்பீட்டுக் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கும் பணியினை இக்குழுக்கள் மேற்கொண்டு தற்போது இப்பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் விரைவில் அமல்படுத்தப்படும்.

## தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை)

வழிகாட்டி மதிப்பைவிட, சொத்துக்களின் மதிப்பு ஆவணதாரர்களால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பொறுத்தமட்டில், ஆவணதாரர்கள் வழிகாட்டி மதிப்பிற்கு ஏற்ப தீர்வையைச் செலுத்த மறுக்கும் பட்சத்தில், பதிவாளர் அந்த ஆவணத்தைப் பதிவு செய்த பின்பு, சொத்தின் சரியான சந்தை மதிப்பையும் அந்த ஆவணத்தின் மீது செலுத்தத்தக்க முறையான தீர்வையையும் நிர்ணயம் செய்வதற்காக, முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ (1)-ன் கீழ் ஆட்சியருக்கு அனுப்புகிறார். முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47-ஏ-ன் கீழான ஆட்சியருக்குரிய கடமையினை ஆற்ற, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஊர்களில் 9 தனித் துணை ஆட்சியர் (முத்திரை)களும், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் 2 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சொத்துக்களை நேரடி ஆய்வு செய்து, தேவையான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பதிவாளரால் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் கண்ட சொத்தின் உண்மையான சந்தை மதிப்பு மற்றும் அந்த ஆவணம் சம்பந்தமாக செலுத்தத்தக்க முறையான தீர்வை ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றனர்.

## ஆவணங்களில் சொத்துக்களைக் குறைத்து மதிப்பிடுவதைத் தடுத்தல்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ-ஐத் திருத்த சட்டமுன்வடிவு ஒன்று சட்டமன்றப் பேரவையின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் இசைவினை

எதிர்நோக்கியுள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தினால் மட்டுமே ஆவணம் பதிவு செய்யப்படும். இல்லையெனில் ஆவணம் நிலுவையாக வைக்கப்பட்டு, மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை)/தனித் துணை ஆட்சியர்(முத்திரை) ஆகியோருக்கு சரியான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தீர்மானிக்க அனுப்பப்படும். மேலும், வழிகாட்டி மதிப்புகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சமாதானத் திட்டம்**

*2007-2008* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, சொத்துக்களின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக நிலுவையாக உள்ள 27,000 ஆவணங்களில் முடங்கியுள்ள வருவாயான ரூ.400 கோடியை தாமதமின்றி ஈட்டும் பொருட்டு புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆவணதாரர்களும் இவ்வாறு நிலுவையாக உள்ள ஆவணங்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையில் சலுகையைப் பெற்று அதனைச் செலுத்தி விரைவில் ஆவணங்களைத் திரும்பப் பெறுவர்.

*2007-2008* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, மாநிலத்தின் பல்வேறு பதிவு அலுவலகங்களில் ஆவணம் எழுதும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆவண எழுத்தர்கள் நலனைக் கருத்திற் கொண்டு 'ஆவண எழுத்தர் நல நிதியம்' ஒன்றை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நீதிசாரா முத்திரைத் தாள்கள்**

ரூபாய் 2, 10, 20, 50, 100, 500, 1,000, 5,000, 10,000 மற்றும் 25,000 முகமதிப்பிலான நீதிசாரா முத்திரைத் தாள்கள் நாசிக்கில் உள்ள செக்யூரிட்டி அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அவற்றைக் கொள்முதல் செய்து, முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக கருவூலங்களுக்கு விநியோகம் செய்கிறார். முத்திரைத் தாள்களை பொது மக்களுக்கு விற்பனை செய்ய சார் பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், கொடை, குத்தகை போன்ற ஆவணங்களை எழுதுவதற்கு இந்த முத்திரைத் தாள்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இம்மாநிலத்தில் 2,376 உரிமம்



பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர் அவர்களின் முத்திரைத் தாள்கள் விற்பனை குறித்த கணக்குகள் பதிவுத் துறை அலுவலர்களால் முறைப்படி சோதித்தறியப்படுகின்றன.

முத்திரைத் தாள்கள் கிடைக்கப்பெறாத போது, முத்திரைத் தீர்வையைப் பணமாகவோ அல்லது வங்கி வரைவோலை மூலமாகவோ சார் பதிவாளரிடம் செலுத்தலாம். போலி முத்திரைத் தாள்களைக் கண்டறிவதற்காக, அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் புற ஊதா விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆவணங்கள் எழுதுவதிலும், அவற்றின் நகல்களை எடுப்பதிலும் பொது மக்களுக்கு உதவி புரிய உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களும், நகல் எழுத்தர்களும் உள்ளனர். 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் ஆகிய சட்டங்கள் குறித்து நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுகின்றவர்களுக்கு ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்படுகிறது. இந்த உரிமங்கள், மாநில அளவிலானவை, மாவட்ட அளவிலானவை மற்றும் சார்பதிவு மாவட்ட அளவிலானவை என மூன்று வகைகளாக வழங்கப்படுகின்றன.

**மின்னணு முத்திரையிடுதல் (e-stamping)**

போலி முத்திரைத் தாள்களின் புழக்கம் மாநில அரசின் வருவாயை ஈட்டுவதில் பெரும் சவாலாக உள்ள நிலையில், மாற்று வழிகளில் முத்திரைத் தீர்வையை வசூலிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இதற்காக 'மின்னணு முத்திரையிடுதல்' (e-stamping) என்ற புதிய முயற்சியில், இந்திய நாட்டிலேயே முதன்முதலாக, அரசு இறங்கியுள்ளது. இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டால், அரசுக்கு முத்திரைத் தீர்வை மூலம் வர வேண்டிய வருவாய் எவ்விதத் தடையுமின்றி ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆவணதாரர்களின் நிழற்படங்களை ஆவணத்தில் ஒட்டுதல்**

பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில், ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக ஆவணதாரர்களின் நிழற்படங்களை ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### மின்னணு ஆளுமை

ஆவணப் பதிவை மேற்கொள்ளும் 558 சார் பதிவாளர் அலுவலகங்களுள், 450 அலுவலகங்கள் ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 108 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள 558 சார் பதிவகங்கள் மற்றும் 50 மாவட்டப் பதிவகங்களில் பின்வரும் சேவைகள் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன:

(அ) பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஒளி வருடல் (Scan) மூலம் நகலெடுத்தல் மற்றும் குறுந்தகட்டில் (Compact disc) சேமித்து வைத்தல். இதனால் விரைவாக சொத்துக்களின் மீதான வில்லங்கத்தை சரிபார்த்திடவும், ஆவணங்களின் நகல்களை ஆவணதாரர்களுக்கு வழங்கவும் ஏதுவாகிறது.

(ஆ) சொத்து மதிப்பு குறித்த விவரம் தயாரித்தல்.

(இ) திருமணம் /சங்கங்கள்/நிறுவனங்கள்/சீட்டுகள் பதிவு செய்தல்.

(ஈ) மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமான வழிகாட்டி மதிப்புகள் பதிவுத் துறையின் இணைய தளத்தில் பொது மக்களின் தகவலுக்காகவும், சரிபார்ப்புக்காகவும் வெளியிடப்பட்டுள்ளன.

(உ) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம், 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் மற்றும் இச்சட்டங்களின்கீழ் இயற்றப்பட்ட விதிகள், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் போன்றவை துறையின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஊ) இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான விண்ணப்பங்களும் துறையின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(எ) விற்பனை, குத்தகை, அடமானம் போன்ற ஆவணங்களுக்கான மாதிரி வரைவுகளும் துறையின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.



### சங்கங்களின் பதிவு

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கங்களைப் பதிவு செய்வது மற்றும் அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது ஆகியவை துறையின் முக்கியமானதொரு பணியாகும். 28-2-2007 அன்றுள்ளவாறு மொத்தம் 1,33,214 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மாநிலத்தில் உள்ளன.

### சீட்டுகள் நிருவாகம்

இம்மாநிலத்தில் உள்ள சீட்டு நிதியங்களின் சீட்டு நடவடிக்கைகளை 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டமும், 1984 ஆம் ஆண்டு சீட்டு நிதி விதிகளும் கட்டுப்படுத்துகின்றன. மண்டலங்களில் துணைப் பதிவுத் தலைவர்களும் மற்றும் பதிவு மாவட்டங்களில் மாவட்டப் பதிவாளர்களும் சீட்டு நிதியங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிடுகின்றனர். சீட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க பல்வேறு மாவட்டங்களில் 47 சார் பதிவாளர்கள் பிரத்தியேகமாகப் பணியாற்றுகின்றனர். ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையிலான சீட்டு விழிப்புக் குழு சீட்டு நிதியங்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகிறது. சீட்டுகள் சம்பந்தப்பட்ட நடுவர் வழக்குகளை ஆய்வு செய்து தீர்வு செய்ய மூன்று சீட்டு நடுவர்கள் உள்ளனர்.

### கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் பதிவு

1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தின்கீழ் கூட்டு நிறுவனங்களைப் பதிவு செய்வது துறையின் மற்றொரு முக்கிய பணியாகும். 28-2-2007 அன்றுள்ளவாறு மாநிலம் முழுவதும் 4,76,080 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் உள்ளன.

### திருமணப் பதிவு

1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம், இந்துக்களிடையே ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்களைப் பதிவு செய்ய சார் பதிவாளர்களுக்கு அதிகாரம் வழங்குகிறது. இச்சட்டத்தின்படி அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க சட்டத் திருத்தம் கொண்டு வருவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி வெவ்வேறு மதத்தினரிடையேயான திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி, உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணம் குறித்து அறிவிக்கப்பட்ட 30 தினங்களுக்குப் பின் ஆட்சேபனை ஏதும் பெறப்படாதபட்சத்தில், திருமணம் நடத்தி வைக்கப்படும்.

1872 ஆம் ஆண்டு கிருத்துவ திருமணச் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களாலும், கிருத்துவப் பாதிரியார்களாலும் இந்திய கிருத்துவ திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களின் வடிப்புகள் சென்னையிலுள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

**2007–08 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில் பின்வரும் பகுதி II திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(அ) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ரூ.10 இலட்சம் செலவில் புதிய மின்தூக்கி அமைத்தல்.

(ஆ) 258 சார் பதிவாளர் அலுவலகங்களில் ரூ.10 இலட்சம் செலவில் மின்னணு விளம்பரப் பலகைகள் அமைத்தல்.

(இ) நிலை உயர்த்தப்பட்ட 72 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு, குடிநீர் சுத்திகரிப்பான் ரூ.5.04 இலட்சம் செலவில் வாங்குதல்.

(ஈ) ஆண்டுதோறும் ரூ.15.12 இலட்சம் செலவில், 18 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களின் வாகனங்களுக்கு ஓட்டுநர் பதவி புதியதாகத் தோற்றுவித்தல்.

(உ) சென்னை மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவருக்கு ரூ.4 இலட்சம் செலவில் புதிய 'பொலிரோ' வாகனம் வழங்குதல்.

(ஊ) ரூ.223.80 இலட்சம் செலவில் 250 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் கருவிகள் வழங்குதல். இதில் ரூ.75 இலட்சம் தொடர் செலவினமாகவும், ரூ.148.80 கோடி தொடராச் செலவினமாகவும் இருக்கும்.

(எ) ரூ. 34 இலட்சம் செலவில் சார் பதிவாளர் அலுவலகங்கள்/ மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள்/துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் மற்றும் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களுக்கு 500 அலமாரிகள் வாங்குதல்.



# இணைப்பு IV

(371 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**முன்னுரை**

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பெருக்குவதற்காகவும், தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்தகைய திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியில், சுமார் 70 சதவிகிதம் வணிக வரித் துறையால் ஈட்டப்படுகிறது. வணிக வரித் துறையில் 2006-2007 ஆம் ஆண்டில் (பிப்ரவரி மாதம் வரை) ரூ.17,601.49 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 17.33 விழுக்காடு அதிகம் ஆகும்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, 31-12-2006 அன்றுடன் முடிவடைந்து 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**வணிக வரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்**

2. வரி வசூலுக்கென கீழ்க்கண்ட சட்டங்கள் வணிக வரித் துறையினால் நிர்வகிக்கப்படுகின்றன:—

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1-1-2007 முதல்)
2. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31-12-2006 வரை)

[2007 ஏப்ரல் 5

4. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31-12-2006 வரை)

5. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990

6. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001

7. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939

8. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935

9. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

10. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

**கடந்த ஆண்டுகளின் வரி வருவாய் ஒப்பீடு**

3. கடந்த ஆண்டுகளில் அனைத்து விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:

**ஆண்டு வரி வருவாய் (ரூபாய் கோடியில்) வளர்ச்சி விகிதம் (%)**

| | | |
|---|---|---|
| 2000-2001 | 8664 | 17.38% |
| 2001-2002 | 8905 | 2.78% |
| 2002-2003 | 10200 | 14.55% |
| 2003-2004 | 11757 | 15.27% |
| 2004-2005 | 13908 | 18.29% |
| 2005-2006 | 16615 | 19.47% |
| 2006-2007 (பிப்ரவரி வரை) | 17601* | 17.33% |

* கருவூல தொகையுடன் சரிபார்க்கப்படவில்லை.



2007 ஏப்ரல் 5]

**கடந்த ஆண்டுகளின் வரி வருவாய் ஒப்பீடு – சட்டவாரியாக**

**4. சட்ட வாரியாக வருவாய் விவரம் வருமாறு:**

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2000–2001 | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 (பிப்ரவரி, 2007 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. த.நா. பொது விற்பனை வரிச் சட்டம் | 7354 | 7541 | 8507 | 9790 | 11462 | 13658 | 14392.21 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 862 | 904 | 982 | 1186 | 1495 | 1799 | 1868.00 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 74 | 68 | 71 | 75 | 59 | 44 | 23.59 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 | 6 | 5.53 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 92 | 89 | 82 | 63 | 78 | 92 | 114.93 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 276 | 297 | 553 | 638 | 808 | 1016 | 1197.23 |
| மொத்தம் | 8664 | 8905 | 10200 | 11757 | 13908 | 16615 | 17601.49* |

* கருவூல தொகையுடன் சரிபார்க்கப்பட வேண்டும்.

[2007 ஏப்ரல் 5

**வருவாயும் செலவும்**

**5. வணிக வரித் துறையின் வருவாயும், செலவும் வருமாறு:**

**(ரூபாய் கோடியில்)**

| தலைப்பு | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007* |
|---|---|---|---|---|---|---|
| 1. வரி வருவாய் | 8905 | 10200 | 11757 | 13908 | 16615 | 17601.49 |
| 2. செலவுகள் | 94.23 | 93.27 | 93.70 | 102.34 | 110.44 | 128.52 |
| 3. செலவின் விழுக்காடு | 1.06% | 0.91% | 0.80% | 0.74% | 0.66% | 0.79% |

**மதிப்புக் கூட்டு வரி**

6. 22-7-2006 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி இம்மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 இயற்றப்பட்டு 1-1-2007 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திற்கு மாறும் முறை மிகவும் எளிதாகவும் தடைகளற்றும் செயல்படுத்தப்பட்டது. இதனை வணிக மற்றும் தொழிலகங்கள் வரவேற்றன. மதிப்புக் கூட்டு வரி உத்தரப்பிரதேசம் மற்றும் புதுச்சேரி தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளன. தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்தவில்லையெனில் மதிப்புக் கூட்டு வரியினுடைய பயன்களைப் பெறுவதற்கு இங்குள்ள தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வணிகர்கள் வெளிமாநிலத்திற்கு இடம் பெயரும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. அதேபோன்று புதிதாக தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வணிகர்கள் நமது மாநிலத்திற்கு வராமலிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில்கொண்டுதான் மதிப்புக் கூட்டு வரி காலம் தாழ்த்தாமல் தமிழ்நாட்டில் 1-1-2007 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.



2007 ஏப்ரல் 5]

மதிப்புக் கூட்டு வரியில் மிகவும் குறைந்த வரி விகிதமான 1 விழுக்காடு தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களுக்கும்; 4 விழுக்காடு அத்தியாவசியப் பொருட்கள், தொழிலக உள்ளீடுகள், மூலதனப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் ஆகியவற்றின் மீதும், பிற பொருட்கள் மீது 12.5 விழுக்காடு வரியும் நிர்ணயிக்கப்பட்டன. இந்த வரி விதிப்பு முறையில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் செலுத்திய உள்ளீட்டு வரியினை விற்பனை செய்யும்போது செலுத்தக்கூடிய விற்பனை வரியிலிருந்து கழித்துக்கொள்ள இயலும். மாநிலத்திற்குள்ளேயே கொள்முதலும் விற்பனையும் செய்யும் சிறு வணிகர்களின் மொத்த விற்பனைத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ. 10 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் (கேரளா தவிர, மற்ற மாநிலங்களில் ரூபாய் 5 இலட்சம் மட்டுமே). அவர்களுக்குப் பதிவுச் சான்று பெறுவதிலிருந்தும், வரி செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேலும், ரூபாய் 50 இலட்சத்திற்கு மிகாமலும் இருப்பின், அவர்கள் தங்கள் விருப்பப்படி இணக்க வரி முறையை ஏற்று, அரை விழுக்காடு (கேரளா தவிர, மற்ற மாநிலங்களில் இணக்க வரி ஒரு விழுக்காடு) வரி செலுத்தலாம். கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி மற்றும் உபரி வரி ஆகியன அறவே நீக்கப்பட்டுள்ளன. இத்துடன், அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சுய வரி விதிப்பு செய்துகொள்ளும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுச் சான்றையும் ஆண்டுதோறும் புதுப்பிக்கத் தேவையில்லை. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில், சமையல் எண்ணெய், பயறு வகைகள், வெல்லம் உள்ளிட்ட பொருள்களின் விற்பனைக்கு வழங்கப்பட்ட வரி விலக்குச் சலுகைகள் அனைத்தும் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்திலும் தொடர்கிறது. இத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் உற்பத்தியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் பயனளிக்கும் வகையிலும் மற்றும் பொருட்களின் விலைகளை குறைக்கும் நோக்கத்துடனும் கொண்டுவரப்பட்டன.

7. 1-1-2007 அன்று மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின் பொது விநியோக முறையின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விற்கப்படும் மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு மற்றும் உரங்கள் மீதான இரண்டாவது மற்றும் அதற்கடுத்த விற்பனைகளுக்கு 1-1-2007 முதல் முழு வரி விலக்கு அளித்து அரசு அறிவிக்கைகள் வெளியிட்டுள்ளன. மேலும், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் வரி

செலுத்துவோர் அடையாள எண் பெறுவதற்கான கால அவகாசம் 15-2-2007 வரையிலும் நீட்டிக்கப்பட்டது; வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் உள்ளீட்டு வரி வரவு பெறுவதற்காக, 31-12-2006 அன்று இருப்பில் உள்ள சரக்குகள் குறித்த படிவங்கள் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 28-2-2007 வரை நீட்டிக்கப்பட்டது.

8. வரிச் சலுகைகள், உள்ளீட்டு வரி வரவு மற்றும் குறைந்த வரி விகிதங்களின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு வரி இழப்பு ஏற்படும். குறைந்த வரி விகிதங்கள் மற்றும் உள்ளீட்டு வரி வரவு வசதி ஆகியவற்றின் காரணமாக பொருட்களின் மீதான வரிச் சுமை குறைவதனால் வணிகர்கள் இந்தப் பலன்களை நுகர்வோருக்கு அளிப்பார்கள் என்றும் அதனால் பொருட்களின் விலை குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை சில நியாயமற்ற நபர்கள் தன் சுயநலத்திற்காக பயன்படுத்தாமலிருப்பதை உறுதி செய்வதற்கும், மதிப்புக் கூட்டு வரியின் பலன்கள் நுகர்வோரைச் சென்றடையாமல் பொருட்களை அதிக விலைக்கு விற்பதைத் தடுக்கவும், இதனை கண்காணிக்கும் பொருட்டும் அரசால் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வணிக வரித் துறை மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

9. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, வணிக மற்றும் தொழில் நிறுவனங்களிடமிருந்து சில பொருட்களின் மீதான வரி விலக்கு—சில வீட்டு உபயோகப் பொருட்கள், தொழிலக உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பொருட்கள் மீதான 12.5 சதவீத வரியினை 4 சதவீதமாகக் குறைத்தல்—உள்மாநிலத்தில் நுகர்வதற்கும், உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கும் பொருட்களை உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்வதைத் தவிர்ப்பதற்கான வழிவகை செய்தல்— ஆகியவை தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. மேலும், 27-2-2007 அன்று வணிக மற்றும் தொழில் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

10. தமிழகத்தில் 3,89,956 வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பதிவுப் பெற்ற வணிகர்களாக இருந்தனர். இவர்கள் தாங்களாகவே தனது வரி செலுத்துவோர் அடையாள எண்ணை (Tax payer Identification Number) வணிக வரி இணைய தளத்தின்மூலம்



15-11-2006 முதல் உடனடியாகப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டது. மேலும், அவ்வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் புதிய பதிவுச் சான்றிதழினை 1-1-2007 முதல் பெற உரிய விண்ணப்பப் படிவத்தினை முன்னதாகவே தாக்கல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டது. எனினும், வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் பதிவுச் சான்று பெற விண்ணப்பங்களை 15-2-2007 வரை தாக்கல் செய்யலாம் என கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது.

11. 2006 ஆம் ஆண்டில் வணிகர்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துள்ள சரக்குகளை விற்பனை செய்யும்போது ஆறு மாதங்களுக்குள் அதாவது, 30-6-2007-க்குள் உள்ளீட்டு வரி வரவு செய்து கொள்ளலாம். சரக்குகள் குறித்த படிவங்கள் தாக்கல் செய்வதற்கு வணிகர்களுக்கு 28-2-2007 வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

12. வணிக வரித் துறைக்காக தனி வலைத்தளம் www.tnsalestax.com செயல்பட்டு வருகிறது. இது தவிர www.tnvat.gov.in என்ற புதிய இணைய தளம் ஒன்று டிசம்பர் 2006 முதல் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் வணிகர்கள் தங்களது வரி செலுத்துவோர் அடையாள எண்ணையும், புதிய பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பத்தையும் பெற்றனர். மேலும் இந்த இணைய தளத்தில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், விதிமுறைகள், சுற்றறிக்கைகள், வணிக வரித் துறை தொடர்பான புள்ளிவிவரங்கள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், மதிப்புக் கூட்டு வரியை கணக்கிடுவதற்கான உதாரணங்கள், மாதாந்திர படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள், வரி விகிதம் தொடர்பான வணிகர்களின் கேள்விகளுக்கான விளக்கங்கள் ஆகியவை அவ்வப்போது தரப்பட்டுள்ளன. இவை வணிகர்களுக்குப் பெரிதும் பயனுள்ளவையாக உள்ளன. மேலும் வணிகர்கள் கணினி முறையில் மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்வது தொடர்பாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகர்கள் பற்றிய குறிப்பு (Dealer Master) பதிவுச் சான்றிதழ் குறிப்பு மற்றும் 31-12-2006 அன்று உள்ள உள்ளீட்டு வரி வரவு தொடர்பான மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு வரி விதிப்பு அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மதிப்புக் கூட்டு வரி நடைமுறையை விரைவுபடுத்தவும், எளிதாக்கவும் வணிகர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கவும் அரசு 520 கணினி உதவியாளர்கள் (System Operators) மற்றும் 10 கணினி மேலாளர்கள் (System Managers) ஆகியோரை பணியமர்த்த உள்ளது. இதேபோல் ஏற்றுமதியாளர்கள் செலுத்திய வரியை விரைவாக திருப்பித்தர 11 சிறப்பு வரி விதிப்பு அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

13. மதிப்புக் கூட்டு வரியினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து அரசுக்குத் தெளிவுபடுத்த வணிக வரித் துறை அமைச்சர் தலைமையில் ஆறு துறை சார்ந்த உறுப்பினர்களும் மற்றும் நான்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களும் கொண்ட ஒரு "மதிப்புக் கூட்டு வரி கண்காணிப்புக் குழு" தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் வணிகப் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர். 27-2-2007 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் முந்தைய தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959-ன்கீழ் வரி விலக்களிக்கப்பட்டிருந்த இனங்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006-ன் கீழும் நீட்டித்தல் மற்றும் அன்றாடம் பயன்படுத்தப்படும் வீட்டு உபயோகப் பொருட்களின் மீதான வரி விகிதம் 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக மாற்றுதல் மற்றும் மேலும் பல பொருட்களை தொழிற்சாலைகளுக்கான இடுபொருட்களாகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பட்டியலில் சேர்க்க கலந்தாலோசிக்கப்பட்டது.

## 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகைகள்

14. 27-2-2007 அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில்கொண்டு பின்வரும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. குடும்பத் தலைவிகள், சாதாரண மக்கள் மற்றும் விவசாயிகள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரி விதிப்பு கூடாது என்ற தமிழக அரசின் கொள்கைக்கிணங்க சில பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி இரத்துச் செய்யப்படும்:

- மண்ணெண்ணெய் பிரஷ்ஷர் ஸ்டவ்
- 'உள்ளூர் வரி' செலுத்தப்பட்ட இரசாயன உரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலப்பு உரக் கலவைகள்
- விதைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப்படும் அனைத்து விதைகள்



- முத்திரையிடப்பட்ட (sealed) கேன்கள் மற்றும் பாக்கெட்டுகளில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- கொப்பரை நீங்கலாக மாநிலத்தின் உள்ளும் வெளியிலும் விற்கப்படும் தேங்காய்
- பட்டாணி மாவு
- வறுத்த பட்டாணி
- தேங்காய் சிரட்டைத் தூள்
- பஞ்சாமிர்தம், நாமக்கட்டி, விபூதி மற்றும் பிரசாதம்
- குறிப்பிட்ட 38 வகை நாட்டு மருந்துகள்
- கடல் சிப்பி மற்றும் கடல் பாசி, அகர் அகர் மற்றும் அல்ஜினேட்
- செயற்கை வைரங்கள்
- தஞ்சாவூர் தட்டு
- துணிப் பை
- வரைபட மற்றும் பகுப்பாய்வு உபகரணங்கள்
- பயிற்சி நோட்டுப் புத்தகம் மற்றும் வரைபடப் புத்தகம்
- கணக்குப் பயிற்சி உபகரணங்கள்
- மரத்திலான பென்சில், பென்சில்கள், அழிப்பான்கள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் பந்து முனைப் பேனாக்கள் (Ball point pens), மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை
- ஆலையில் தயாரிக்கப்படாத, கைத்தறி மற்றும் விசைத் தறிகள் மூலம் தயாரிக்கப்படும் தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள்
- அனைத்து வகை கற்பூரம்
- முந்திரித் தோல்

[2007 ஏப்ரல் 5

- மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட சமையல் எண்ணெய்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களுக்கும் விரிவாக்கப்படும்.
- சமையல் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், பிண்ணாக்கு மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்கு உள்ளிட்ட வகைகளுக்கு 2000 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விற்பனை வரி விலக்குக்கான ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.
- கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், மொச்சை, காராமணி, தட்டைப் பயறு, கொள்ளு மற்றும் அவரை ஆகியவற்றிற்கும் விரிவாக்கப்படும்.
- பருப்பு மற்றும் பயறு வகைகள் ஒவ்வொன்றுக்கும் 2000 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.
- கோதுமை மீதான 4 சதவீத வரி 2 சதவீத வரியாகக் குறைக்கப்படும்.
- நட்சத்திரத் தகுதி பெறாத உணவகங்கள் மற்றும் இனிப்பகங்களால், வரி செலுத்தி கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட பாட்டில் குடிநீருக்கான (Bottled Mineral Water) வரிவிகிதம், ஏற்கனவே வரி செலுத்தியிருந்தால் மறு விற்பனையின்போது 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.

சாதாரண மக்களால் உபயோகப்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கான வரி வீதம் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

- உடனடி காஃபி நீங்கலாக சிக்கரி மற்றும் வணிகச் சின்னமிடாத காஃபி தூள்
- வணிகச் சின்னமிட்ட மசாலா பவுடர்
- மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மாவு, மரவள்ளிக் கிழங்கு திப்பி



2007 ஏப்ரல் 5]

- பஜ்ஜி மாவு
- வணிகச் சின்னமிடாத நெய்
- பேரீச்சம்பழப் பாகு (syrup)
- Interesterified தாவா எண்ணெய் (வனஸ்பதி)
- வணிகச் சின்னமிடாத பன், ரஸ்க், பிஸ்கட், கேக் போன்ற பேக்கரி பொருட்கள்
- நோய் அறிதற்கான சோதனைக் கருவிகள் மற்றும் சோதனைக்கான வேதிப் பொருள்கள் (reagents), துணைப் பொருள்கள், இரத்தம் சேமிக்கும் பைகள் மற்றும் ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தற்குரிய சிகிச்சைப் பொருள்கள் (disposables)
- மாவு அரைவை இயந்திரங்கள் (wet grinders)
- RCC பைப்புகள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- RCC மூலம் தயாரிக்கப்படும் கிராதிகள், கதவு மற்றும் ஜன்னல் பிரேம்கள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- வணிகச் சின்னமிடாத ஸ்டீல் பர்னிச்சர் (unbranded steel furniture)
- கதவுகள், ஜன்னல்கள், சட்டங்கள், புரோபைல்கள், மோட்டார் வாகன, தொழில் மற்றும் கழிவுநீக்க உபகரணங்கள் நீங்கலான பிளாஸ்டிக் பொருட்கள்
- குத்து விளக்கு, அகல் விளக்கு, பாவை விளக்கு, யானை விளக்கு, கார்த்திகை விளக்கு, கோயில் மணி, கற்பூரத் தட்டு, தூபக்கால்
- வார்ப்படச் சிலைகள்
- பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஒலி நாடாக்கள்
- கணக்குப் பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புகள்

- பள்ளிக்கூடப் பைகள் மற்றும் பயணத்திற்குப் பயன்படும் வணிகச் சின்னமிடாத பைகள் (travel bags)
- கேடயங்கள்
- முள்வேலி கம்பி, கம்பி வடம் மற்றும் கம்பி இணைப்புகள்
- பருத்தி நூலினாலான தரைத் துடைப்பான்கள்
- உபயோகப்படுத்தப்பட்ட சிருந்துகள் / மோட்டார் வாகனங்கள் (உள்ளீட்டு வரி வரவு வசதியின்றிக் கூட்டிய மதிப்பிற்கு மட்டும்)
- நெசவு இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்
- ஆணிகள், புஷ்கள், வாஷர்கள், ரிவிட் போன்ற இணைப்பான்கள்
- எலக்ட்ரோப்ளக்ஸ் (Electroflux)

தொழிற்சாலைகளுக்கான இடுபொருட்களாகப் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்கள் 4 சதவீத வரி வீதத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன:

- தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உயர் ரக மண்ணெண்ணெய் (Superior kerosene oil) (இது உள்ளீட்டு வரி வரவுக்கு உரியதல்ல)
- ஏற்கனவே 20 சதவீதத்தில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள, குறிப்பிட்ட இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதற்காகக் கொள்முதல் செய்யப்படும் கரும்புச் சாற்றின் கழிவு (molasses). (இது உள்ளீட்டு வரி வரவிற்கு உரியதல்ல).
- தொழிற்சாலைகளுக்கான வாயுக்கள் (Industrial gases), நெசவு இயந்திர உதிரிப் பாகங்கள் போன்ற தொழிற்சாலை இடுபொருள்களை உற்பத்தியாளர்கள் அல்லது வணிகர்கள் தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருட்களாக விற்பனை செய்யும்போது 4 சதவீத வரி விதிப்புக்குட்படுத்தப்பட்டு பட்டியலிடப்படும்.





- 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், முதலாம் அட்டவணையில் உள்ள பகுதி B-யின் பதிவு 67, குறிப்பிட்ட பொருள்களை, தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்க வகை செய்கிறது. இதன்கீழ், ஏற்கெனவே 27 பொருட்கள் தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக காலவரையறையின்றி அறிவிக்கைகள் வெளியிடப்படுவதற்குப் பதிலாக, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 முதலாம் அட்டவணையில் பகுதி-B-யில் இனம் 67-ஐ பின்வருமாறு திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

  "தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில், இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தவிர்த்து, மாநிலத்தில் ஏனைய பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் அல்லது தயாரிப்பு தொடர்பாக உபயோகப்படுத்தப்படுகின்ற நுகர்பொருட்கள், சிப்பமிடற்குத் (packing) தேவையான பொருட்கள் மற்றும் லேபிள்கள் உட்பட, இயந்திரத் தளவாடங்கள்; எத்தில் ஆல்கஹால்; அப்சல்யூட் ஆல்கஹால்; மீத்தைல் ஆல்கஹால்; சுத்திகரிக்கப்பட்ட சாராவி; நியூட்ரல் சாராவி மற்றும் சிமெண்ட் நீங்கலாக, முதலாம் அட்டவணையில் பகுதி "C"யில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தப் பொருளும்".

- ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் 50 இலட்சம் வரையுள்ள வணிகர்களில், அரை விழுக்காடு இணக்க வரி செலுத்துவோர், தற்போது வரி விலக்களிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைத் தொகை மீதும் வரி செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. வரி விதிப்பிற்குள்ளாகும் பொருட்களின் விற்பனைத் தொகை மீது மட்டுமே வணிகர்கள் வரி செலுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தம் செய்யப்படும்.

  வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று, 12.5 சதவிகித வரி விதிப்பிற்கு உள்ளாகும் பொருட்கள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில், பிரிவு 'C'-ல் பட்டியலிடப்படும்.

[2007 ஏப்ரல் 5

அறிவிக்கப்பட்ட மேற்கூறிய அனைத்து வரிச் சலுகைகளும் 1-1-2007 முதல் நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006-ன்கீழ் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மேற்கூறிய சலுகைகள் அரசாணை எண் (பல்வகை) 79, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 23-3-2007-ல் அறிவிக்கைகளாக வெளியிடப்பட்டுள்ளன.

**மதிப்புக் கூட்டு வரி அமலாக்கத்தினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்தல்**

15. மத்திய அரசு, மாநிலங்கள் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்தும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு, அதாவது 2005-2006-ல் 100%, 2006-2007-ல் 75% மற்றும் 2007-2008-ல் 50% அளவிற்கு வருவாய் இழப்பினை ஈடுசெய்ய முன்வந்துள்ளது. தமிழகத்தில் 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை அமல்படுத்தியதால் 2006-2007 ஆம் ஆண்டுக்கு 75% எனவும், 2007-2008 ஆம் ஆண்டுக்கு 50% எனவும் கிடைக்கும் நிலை உள்ளது. எனினும் தமிழக முதல்வர் பிரதமர் மற்றும் மத்திய நிதி அமைச்சருக்கு 2007, 2008, 2009 காலமுறை ஆண்டுகளுக்கு முறையே 100%, 75%, 50% வருவாய் இழப்பீடு வழங்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார். மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**மத்திய விற்பனை வரி நீக்கம்**

16. உற்பத்தித் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. வரும் 2007-2008 நிதி ஆண்டில் மத்திய விற்பனை வரிமூலம் தமிழகத்திற்கு ரூபாய் 2,530 கோடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய விற்பனை வரியை படிப்படியாகக் குறைத்து, காலப்போக்கில் அறவே நீக்கிவிடுவது என மத்திய அரசு அறிவித்துள்ளது. 1-4-2007 முதல் மத்திய விற்பனை வரி விகிதம் 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகக் குறைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்பானது வருடந்தோறும் 1 விழுக்காடு குறைக்கப்பட்டு 1-4-2010 அன்று 0 விழுக்காடாக மாறும். மத்திய விற்பனை வரி நீக்குதலின் பொருட்டு மாநிலங்களுக்கு ஏற்படும் வரி இழப்பினை ஈடு செய்யும் பொருட்டு 77 உள் மாநில சேவைகள் மீதான சேவை வரி விதிக்கும் அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்குவதாக மைய அரசு அறிவித்துள்ளது. புகையிலைப் பொருட்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியை மாநிலங்களே விதித்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 5]

**சேவை வரி**

17. சேவை வரி தொடர்பான வரி விதிப்பு அதிகாரத்தை மையப் பட்டியலில் கொண்டு வர இந்திய அரசு அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்துள்ளது. மைய அரசு இந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மறு பரிசீலனை செய்து, சேவைகள் மீதான வரிவிதிப்பு அதிகாரத்தை மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பது இந்த அரசின் எண்ணம் ஆகும். மக்களின் சமூக மற்றும் மேம்பாட்டுத் தேவைகளுக்காக மாநில அரசுகளுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் 1-1-2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டதாலும், 1-4-2007 முதல் படிப்படியாக மத்திய விற்பனை வரி நீக்கப்படுவதாலும், மாநில அரசுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் குறைந்த அளவே உள்ளன. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக சேவைப் பகுதிகள் இருப்பதால், சேவைப் பகுதிகள்மூலமாக மாநில அரசுக்கு உரிய வருவாய் கிடைக்கும். அதனால் மாநில அரசின் வரம்பிற்குள் சேவைகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரம் இருப்பதே விரும்பத்தக்கதாகும். சேவை வரித் தொகையினை மைய அரசுடன் பகிர்ந்து கொண்டாலும், சேவை வரி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-12-2006-ல் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்கள். மேலும், சேவை வரியில் மாநிலத்திற்கான தற்போதைய பங்களிப்பினை 30.5 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காட்டிற்கு உயர்த்தவும், அதில் 39.5 விழுக்காடு அந்தந்த மாநிலத்தில் வசூலிக்கப்படும் சேவை வரி விகிதத்தின் அடிப்படையில் அந்தந்த மாநிலத்திற்கே வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையினை பரிசீலனை செய்யுமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**மதிப்புக் கூட்டு வரி திட்டத்தில் வருவாய்**

18. தமிழகத்தில் புதிய அரசு கடந்த 13-5-2006 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பல்வேறு தரப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல நலத் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் அமல்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதை மக்கள் அறிவர். மேற்கூறிய திட்டங்களுக்குத் தேவைப்படும் அதிக அளவு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிக வரித் துறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

[2007 ஏப்ரல் 5

19. பிப்ரவரி 2007 வரை அனைத்துச் சட்டங்களின்மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் 17,601.49 கோடி. சென்ற நிதியாண்டில் இதே காலத்தில் ஈட்டப்பட்ட வருவாயான ரூ.15,001.46 கோடியுடன் ஒப்பிடுகையில், வருவாய் 17.33 விழுக்காடாக வளர்ச்சி பெற்றுள்ளது.

20. மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகிய வரிகள் இல்லை. மேலும் உயர்ந்த வரி விகிதங்களான 8 விழுக்காடு, 10 விழுக்காடு, 16 விழுக்காடு மற்றும் 20 விழுக்காடு ஆகியவற்றிற்குப் பதிலாக 3 வரி வீதங்களே அதாவது 1 விழுக்காடு, 4 விழுக்காடு மற்றும் 12.5 விழுக்காடு மட்டுமே உள்ளன. இதனால் வருவாய் குறையும். ஆனால் உள்ளீட்டு வரி ஈடு செய்யும் வசதியினாலும், குறைந்த வரி விகிதங்களாலும் அனைத்து வணிகர்களும் தாங்களாகவே முன்வந்து வரி செலுத்தும் நிலை ஏற்படும். அந்நிலையில், மதிப்புக் கூட்டு வரி வருவாய் படிப்படியாக உயர வாய்ப்புள்ளது. மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம் செய்த பிற மாநிலங்களின் அனுபவத்தைப் பார்க்கும்போது, தொடக்கத்தில் சில மாதங்களில் வரி வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளது என்றாலும், பின்னர் அம்மாநிலங்களில் வரி வருவாய் குறிப்பிடத்தகுந்த அளவில் உயர்ந்துள்ளது.

21. மதிப்புக் கூட்டு வரியில் குறைந்த வரி விகிதங்கள், உள்ளீட்டு வரிக் கழிவு வசதி, அத்தியாவசியப் பொருட்களுக்கு வரி விலக்கு ஆகிய சலுகைகளின் காரணமாக பொதுமக்கள் வாங்கும் பொருட்களின்மீது வரிச் சுமை குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மதிப்புக் கூட்டு வரியினால் பொருள்களின் விலை உயர்கிறது என்ற கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. சில பொருள்களின் விலையுயர்வுக்கு வேறு காரணங்கள் இருக்கலாமேயன்றி மதிப்புக் கூட்டு வரி நிச்சயமாகக் காரணம் அல்ல.

**துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்**

22. வணிக வரித் துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் திறம்பட நடத்தப்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் இணை ஆணையர்களும், துணை ஆணையர்களும், இணை இயக்குநரும் (புள்ளியியல் & ஆய்வுத் துறை), உதவி ஆணையர்களும், நிர்வாக அலுவலர்களும் உள்ளனர். நிர்வாகக் காரணங்களுக்காக வணிக வரித் துறை பல்வேறு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 5]

**வரி விதிப்புப் பிரிவு**

23. வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் ஆகியோர் வரி விதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிக வரி அலுவலர் தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு துணை வணிக வரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். இவை தவிர, சென்னையில் நான்கும், கோவையில் இரண்டும், ஆக ஆறு விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரி விதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட அளவில் உதவி ஆணையராலும், கோட்ட அளவில் துணை ஆணையராலும் கண்காணிக்கப்படுகின்றது.

**தணிக்கைப் பிரிவு**

24. ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும், ஒரு உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது. வணிக வரி அலுவலர் ஒருவர் மற்றும் துணை வணிக வரி அலுவலர் ஒருவர் கொண்ட இக்குழு உதவி ஆணையரின்கீழ் செயல்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிற்கும், வரி விதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரி விதிப்பு வட்டவாரியாக அறிக்கை தயாரிக்கின்றது. இந்தக் குழுவிற்கான தணிக்கை நிகழ்ச்சி நிரல் துணை ஆணையரால் வகுத்து, கண்காணிக்கப்படுகிறது. அவற்றின் மீதான குறை நிவர்த்திப் பணிகளை சம்பந்தப்பட்ட வரி விதிப்பு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் கண்காணிக்கின்றனர். இது தவிர, மாநிலக் கணக்காயர், ஆண்டுக்கு ஒரு முறை தனது தணிக்கைக் குழுவினை ஒவ்வொரு வரி விதிப்பு வட்ட அலுவலகத்திற்கும் அனுப்பி வரி விதிப்பு கோப்புகள் மற்றும் திரும்ப அளித்தல் தொடர்பான தணிக்கைக் குறிப்பினை தயாரித்து அனுப்புகிறார். அதன்மீது குறை நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கியப்பணி வரி விதிப்புப் அலுவலர்களிடம் உள்ளது. மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குறிப்பின் மீதான குறை நிவர்த்தி என்னும் முக்கியப் பணியினை மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (தணிக்கை) கண்காணிக்கிறார்.

**மேல்முறையீட்டுப் பிரிவு**

25. முதல் மேல்முறையீடு, மேல்முறையீட்டு உதவி ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இத்துறையில் இருபது மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக ஆஜராக, வணிக வரி அலுவலர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மைத் தீர்ப்பாயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் தீர்ப்பாயமும் உள்ளன.

**செயலாக்கப் பிரிவு**

26. செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இதுதவிர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையர் உள்ளார். துறையின் செயலாக்கப் பிரிவில், பத்து உதவி ஆணையர்களும், பதினான்கு வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிக வரி அலுவலர்களின்கீழ் துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர, சுற்றும் படை, இரயில் சரக்குப் போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சரக்குப் பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

27. வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை பணியில் ஈடுபடுகின்றனர். சுற்றும் படை, இரயிலக மற்றும் சரக்குப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் வாகனத் தணிக்கையின்மூலம் பெறப்படும் கொள்முதல் பட்டியல்கள் மற்றும் இதர நடத்துச் சீட்டுகள் உரிய வணிகர்கள் வைத்துள்ள கணக்குப் புத்தகங்களுடன் சரிபார்ப்பதன்மூலம் வரி ஏய்ப்பினைத் தடுக்கின்றனர். இடை மாநில ஆய்வுக் குழு அலுவலர்கள், பிற மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன்மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து வருகின்றனர்.



**தணிக்கைச் சாவடிகள்**

28. மாநில எல்லையில், இருபத்தாறு எல்லைத் தணிக்கைச் சாவடிகளும், மூன்று உள் தணிக்கைச் சாவடிகளும் உள்ளன. எல்லைத் தணிக்கைச் சாவடிகளில், பத்து பெரிய தணிக்கைச் சாவடிகளும், பதினாறு சிறிய தணிக்கைச் சாவடிகளும் அடங்கும். மூன்று உள் தணிக்கைச் சாவடிகளும் பெரிய தணிக்கைச் சாவடிகள் ஆகும். வணிக வரி அலுவலர்கள் ஐந்து பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிக வரி அலுவலர்கள் சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளு தூக்கிகள் ஆகியோர் உள்ளனர்.

**வணிக வரி பணியாளர் பயிற்சி மையம்**

29. வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வணிக வரித் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளருக்கு வணிக வரி சம்பந்தமான சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து பயிற்றுவிக்கப்படுவது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஆகும். மேலும் வணிக வரித் துறை கணினிமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினியை உரிய முறையில் பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. துணை ஆணையர் நிலையில் இயக்குநர் ஒருவரின்கீழ் இப்பயிற்சி மையம் செயல்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்களாலும், ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி மையத்தில் துறை அலுவர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:

* வரி விதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி
* வரி விதிப்புக் கோட்பாட்டின் பணியிடைப் பயிற்சி
* கணினிப் பயிற்சி
* அமைச்சுப் பணியாளர்களுக்கான மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி

[2007 ஏப்ரல் 5

30. வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையத்தில் வணிக வரிகள் குறித்து அவ்வப்பொழுது மாறுபடுகின்ற மற்றும் நடைமுறையில் உள்ள பலவிதமான வரிகள் சம்பந்தமாகவும், புதிதாக 1-1-2007 முதல் இம்மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட மதிப்புக் கூட்டு வரி சம்பந்தமாகவும் சென்னை கோட்ட அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பிற கோட்டங்களில் அந்தந்தத் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் பயிற்சி வழங்கும் அலுவலர்களைக் கொண்டு மதிப்புக் கூடுதல் வரி பயிற்சி அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையம் அமைச்சுப் பணியாளர்களுக்கு, துறை சம்பந்தமான கணினிப் பயிற்சி, இணைய தளம் மற்றும் மின் அஞ்சல் தொடர்பான பயிற்சியும் வழங்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான புத்தாக்கப் பயிற்சி (Refreshment Course), பணியிடைப் பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சிகள், அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பயிற்சி அளிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது:

* துறை சம்பந்தப்பட்ட கணினிப் பயிற்சி
* அடிப்படைக் கணினிப் பயிற்சி
* மதிப்புக் கூட்டு வரி பயிற்சி
* பணியிடைப் பயிற்சி

**புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு**

31. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் துறை தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர். 'வணிக வரித் துறை — ஒரு கண்ணோட்டம்' மற்றும் 'வணிக வரித் துறை — முக்கியக் குறியீடுகள் (மடிப்புத் தாள்)' ஆகிய இரு வருடாந்திர வெளியீடுகள் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வெளியிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் வருவாய் ஈட்டும் முக்கிய 100 வணிகர்கள்/50 பொருட்களினால் ஏற்படும் வருவாய் இழப்பிற்கானக் காரணங்களை ஆராய்ந்து வருகிறது. இது தவிர, மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்ட பின் அதன் விளைவினை அறிய சுமார் 260 பொருட்களின் விலையைக் கண்காணித்து வருகிறது.



2007 ஏப்ரல் 5]

**சமாதானத் திட்டம்**

32. வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் பயன்பெறும் வகையில் வணிகர் நட்புறவான ஒரு சமாதானத் திட்டம் 1-10-2006 முதல் மூன்று மாதங்களுக்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. 31-12-2006 முடிய உள்ள காலத்திற்கு 1,036 மனுதாரர்களிடமிருந்து ரூ.6.98 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**வரித் தள்ளி வைப்பு, வரியை முன்கூட்டியே செலுத்தும் முறை**

33. வரித் தள்ளிவைப்புப் பலனை அனுபவிக்கும் தொழிற்சாலைகளின் நலனைக் கருதி அரசு 28-2-2007 அன்று முன்கூட்டியே தள்ளிவைக்கப்பட்ட வரியினை செலுத்தும் திட்டத்தினை அறிவித்துள்ளது. அதன்படி முதிர்வடையாத வரித் தள்ளி வைப்புத் தொகையின் தற்போதைய நிகர மதிப்பில் (Net Present Value - N.P.V.) ஆண்டொன்றுக்கு 5 சதவீதத் தள்ளுபடி போக மீதியினை ...த்த வகை செய்யும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**...ள்ளுபடி ஆய்வுக் குழு**

...ரசாணை (டி) எண் 428, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, ...8-2006-ன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வரித் ... ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசுச் செயலர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை

அரசுச் செயலர், நிதித் துறை

ஆணையர் (வணிக வரிகள்)

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தெளிவுரைகளால் வணிகர்கள் கொள்முதல் செய்வோர்களிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள வரி கைவிடுதல் பிரேரணைகளை ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 15-11-2006 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் 21 வரித் தள்ளுபடி பிரேரணைகள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றில் 19 பிரேரணைகள் வரித் தள்ளுபடிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரண்டு பிரேரணைகள் ஏற்கப்படவில்லை. இவை முறையே ரூ.17.71 கோடி மற்றும் ரூ. 0.71 கோடி உள்ளடக்கியது. 17 நேர்வுகளில் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், ரூ.30.94 கோடி உள்ளடக்கிய 22 வரித் தள்ளுபடி பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**வணிக வரித் துறையை கணினிமயமாக்குதல்**

**வணிக வரித் துறையில் மின் ஆளுகை**

*35.* வணிக வரித் துறையில் கணினி செயல்பாடு முதன்முறையாக 1973 ஆம் ஆண்டு கிண்டியில் உள்ள அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் துணையோடு தொடங்கப்பட்டது. வணிக வரி நமூனாக்களின் விவரங்கள் கணினியில் ஏற்றப்பட்டு மாநில அளவிலான வணிகர்கள் தொடர்புடைய அனைத்து விவரங்களின் தொகுப்பினை தயாரிப்பதற்காகவே தொடங்கப்பட்டது. பின்னர் வருவாய் சார்ந்த துறைகளில் கணினிகளைப் புகுத்தி அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்த பதினொன்றாம் வருவாய்க் குழுவினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், வணிக வரித் துறையில் கணினிமயமாக்கலில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. இச்சமயத்தில் Pallavan Transport Consultancy Services என்ற நிறுவனம் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டது. 464 இடங்களில் கணிப்பொறி விரிவாக்கத்தின் தொடர்பாக ரூ.10.51 கோடி செலவில் மென்பொருட்களும், இதனோடு தொடர்புடைய வன்பொருட்களும் வழங்கப்பட்டன.

*36.* இத்துறைக்கான இணைய தளத்தில் "www.tnsalestax.com" என்ற முகவரியில் தனியாக வலைத் தளம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வணிகர்களுக்குத் தேவையான, தற்சமயம்வரை உள்ள தகவல்கள் (Uptodate) அளிக்கப்படுகின்றன. வணிகர்கள் பதிவுச் சான்று மனு, மாதாந்திர நமூனாக்கள் முதலான சட்டபூர்வ படிவங்களை இந்த வலைத் தளத்தில் இருப்பதை தங்கள் கணினிமூலம் பெற்று பயன்படுத்திக்கொள்ளும் வசதி உள்ளது. அனைத்து வகைப் பொருட்களுக்கான வரி வீதங்கள் அகர வரிசைப்படி வலைத் தளத்தில் உள்ளன.

**துறைக்கான வலைத் தளம்**

*37.* இவ்வலைத்தளத்தில் அரசு மற்றும் ஆணையர் வழங்கிய கடிதங்கள், ஆணைகள், அறிவிக்கைகள் முதலியனவும் துறை அலுவலர்களுக்கு உதவும்விதமாய் அனைத்துப் பொருட்களுக்கான வரி விகிதங்கள், முக்கியமானத் தீர்ப்புகள் ஆகியவை உள்ளன. வலைத் தளத்தின்மூலமாக மின் அஞ்சல் செய்யவும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலாண்மை தகவல் முறையும் இவ்வலைத் தளத்தில் உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்களை திருவாளர்கள் எல்காட் லிட். மூலமாக கொள்முதல் செய்வதற்கு அரசு ரூபாய் 500 இலட்சங்கள் நிதி வழங்கியுள்ளது:





1. வன்பொருள் கொள்முதல் — அனைத்து மேல்முறையீடு மற்றும் வரி விதிப்பு வட்டங்கள் உள்ளிட்ட நிர்வாக அலுவலகங்களுக்குக் கணினிகள், அச்சு இயந்திரங்கள், தடையற்ற மின் வழங்கிகள்.
2. மதிப்புக் கூட்டு வரி தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் சந்தேகங்களுக்காக விடையளிக்க சென்னையில் அழைப்பு மையம் அமைத்தல்.
3. பதிவு செய்தல், வணிகத் தொகை விவர அறிக்கைகள் (returns), உள்ளீட்டு வரி திரும்பக் கோரல் (claim of input tax credit) மற்றும் கணினிமூலம் சேவை தொடர்பான விவரங்களை வணிகர்களுக்கு வழங்கல் போன்ற பணிகளுக்கு, ஒவ்வொரு கோட்ட/வட்ட அலுவலக தலைமையிடத்திலும் உதவி மையம் (Help Desk) அமைத்தல்.
4. கிரீம்ஸ் சாலையிலுள்ள சென்னை மைய சர்வர் மற்றும் பெசன்ட் நகரிலுள்ள தேசிய தகவல் நிறுவனத்திற்கு இடையே ஒரு குத்தகை இணைப்பு (leased line) பெறுதல்.
5. கிரீம்ஸ் சாலையிலுள்ள மைய சர்வர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்திற்கிடையே ஒரு ISDN இணைப்பு பெறுதல்.
6. வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் தொகை விவர அறிக்கைகளை (ICR sheets) ஸ்கேனர் மூலம் அனுப்பி வைக்கப்படும் அதிவிரைவு ஸ்கேனர்கள் கொள்முதல் செய்தல்.
7. ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத்திற்கும் மற்றும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் LAN இணைப்பு வழங்குதல்.

**மின் ஆளுகைமூலம் மதிப்புக் கூட்டு வரி அமலாக்கம்**

*38.* தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரி அமலாக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959-ன்கீழ் பதிவு பெற்ற அனைத்து வணிகர்களுக்கும் வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) வழங்கப்பட்டு வருகிறது. அதற்கான தனியான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. www.tnvat.gov.in என்ற வலை தளம் திருவாளர்கள் NIC அவர்கள் உதவியுடன் உருவாக்கப்பட்டு அதில் TIN சம்பந்தமான தகவல்கள்

ஏற்றப்பட்டுள்ளன. இவ்வலை தளத்தின்மூலம் வணிகர்கள் வரிவிதிப்பு அலுவலகங்களுக்குச் செல்லாமலேயே TIN சம்பந்தமான தகவல்களைப் பெற முடியும். 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வணிகர்கள் இவ்வசதியைப் பயன்படுத்தி வருகின்றனர். மதிப்புக் கூட்டு வரி விதிப்பில் பதிவு செய்தல் மற்றும் நமூனாக்கள் பதிவு செய்யும் மென்பொருள் உருவாக்கப்பட்டு அனைத்து வரி விதிப்பு வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. பதிவு செய்தல் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் மனித குறுக்கீடு இல்லாமல் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. பெரிய வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரி சூழலில் இரண்டு முறையில் நமூனாக்களை தாக்கல் செய்யலாம். ஒன்று, மின் அஞ்சல் மூலமாக தாக்கல் செய்தல், மற்றொன்று படிவம்மூலமாகத் தாக்கல் செய்தல். மதிப்புக் கூட்டு வரி நமூனாக்களில் உள்ள விவரங்கள் ஸ்கேனர் மூலமாக கிரகிக்கப்படுகின்றன. "www.tnvat.gov.in" என்ற வலை தளத்தின்மூலமாக பதிவு எண்கள் வழங்குதல், நமூனாக்கள் பெறுதல் ஆகிய பணிகள் திருவாளர்கள் தேசிய தகவல் மையத்திடம் (NIC) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**மின் ஆளுகை**

39. திருவாளர்கள் விப்ரோ இன்ஃபோடெக் நிறுவனம் நமது மாநிலத்தில் கீழ்க்காணும் மின் ஆளுகைப் பணிகளை செயல்படுத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது:

1. வரி செலுத்துதல், வாகனங்கள் கண்காணிப்பு, அனைத்து சோதனைச் சாவடிகளைக் கண்காணித்தல், விற்பனை, கொள்முதல் சரிபார்த்தல், கருவூலங்களில் தொகை சரிபார்த்தல் ஆகியவற்றுக்கான நடைமுறையை எளிமைப்படுத்துதல்.
2. ஐ.சி.ஆர். தொழில்நுட்பம்.
3. எதிர்வரும் 'டிஎன்ஸ்வான்' (TNSWAN) சூழ்நிலைக்கேற்ற இணைப்புகளை அமைத்தல்.
4. துறையில் மின் ஆளுமை (e-Governance) செயல்படுத்த ஏதுவான அமைப்புகள்.
5. மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி
6. துறையினை இரண்டாம் கட்ட கணினிமயமாக்குதலுக்கு தயார்படுத்துதல் மற்றும் உறுதியான விவரங்கள்.



40. திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்தின் இறுதி வரைவுத் திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக விரைவில் அனுப்பிவைக்கப்படும். மின் ஆளுகையின் அடுத்த நடவடிக்கையாக தணிக்கைச் சாவடிகளில் ஆவணங்களை விரைவாகச் சரிபார்த்தல், அதன் விளைவாக நெடுஞ்சாலைகளில் வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெறுதல், மின் அஞ்சல்மூலமாக நமூனாக்கள் தாக்கல் செய்தல் மற்றும் வரி செலுத்துதல் போன்ற இனங்களில் மின் ஆளுகை முறை அறிமுகப்படுத்தப்படும். சட்ட நடவடிக்கைகள் நீங்கலாக மற்ற அனைத்து அலுவலக வேலைகளும் காகிதப் பயன்பாடற்ற நிலை உருவாகும். திருவாளர்கள் தேசியத் தகவல் மையம் மற்றும் எல்காட், சென்னை, மின் ஆளுகைமூலமாக நமூனாக்கள் பெறப்படுதல், வரி செலுத்துதல், பதிவு எண் பெறுதல் மற்றும் இதனோடு தொடர்புடைய வலைதகவல்கள் அளித்தல் ஆகியவற்றை செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

**வணிகர் நல வாரியம்**

41. வணிகர் நலன் கருதி வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்கான வணிகர் நல வாரியம் அரசாணை (நிலை) எண் 725, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள். 25-9-89-ல் முதலில் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்டு அரசு ஆணை (நிலை) எண். 142, வணிக வரித் துறை, நாள் 13-11-2006-ன்படி இவ்வாரியம் திருத்தி அமைக்கப்பட்டது. வாரியத்தின் உறுப்பினர்களாக, அலுவலர் சார்பாக 5 உறுப்பினர்களும் வணிகர்கள் சார்பாக 20 அலுவல்சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி பதிவு பெற்ற எல்லா வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.250/- ஆண்டுக் கட்டணமாக செலுத்த வேண்டும். 28-2-2007 முடிய 44,442 உறுப்பினர்கள்மூலம் ரூபாய் 1.11 கோடி பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாரிய உறுப்பினர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 3,010 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

42. 13-3-2007 அன்று வணிகர் நல வாரிய பத்தாவதுக் கூட்டம் நடைபெற்றது. வணிகர் நல வாரியம்மூலம் 28-2-2007 முடிய உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன:

[2007 ஏப்ரல் 5

திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் மதிப்புமிக்க தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, வரி விதிப்பாக முடிகிறது. அளிக்கப்பட்ட தகவல்கள் இரகசியமாக பாதுகாக்கப்படுகின்றன.

**தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005**

47. 31-12-2006 வரை தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் 63 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 46 விண்ணப்பங்களின்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

**பகுதி II திட்டம், 2007–2008**

48. 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன:

1. ரூ. 1.65 இலட்சம் செலவில் பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டடத்தில் வெளியாட்களைக் கொண்டு கழிவறைகளைச் சுத்தம் செய்தல்.
2. ரூ. 2.08 இலட்சம் செலவில் பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டடத்தில் நான்கு மாடிகளிலும் இரு புறங்களிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைத்தல்.
3. ரூ. 0.60 இலட்சம் செலவில் சென்னை (வடக்கு) இணை ஆணையர் (வணிக வரி) அலுவலகத்தில் நகலெடுக்கும் இயந்திரம் வழங்குதல்.
4. ரூ. 4.06 இலட்சம் செலவில் அறைகலன்கள் கொள்முதல் செய்தல்.
5. வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு ரூ.5.98 இலட்சம் செலவில் L.C.D. புரஜெக்டர், ஒரு Risograph நகலெடுக்கும் இயந்திரம், நான்கு குளிர்சாதனப் பெட்டிகள் வாங்குதல் மற்றும் அறைகலன்கள் கொள்முதல் செய்தல்.
6. மாவட்ட அளவில் ரூ.19.35 இலட்சம் செலவில் மதிப்புக் கூட்டு வரி பற்றிய பயிற்சி முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்.
7. வணிக வரி ஆணையர் அலுவலகத்தை நவீனமயமாக்குதல்— ரூ.20 இலட்சம் செலவில் 34 பிரிவுகளுக்கான கன சதுர அறைகள் அமைத்தல்.



2007 ஏப்ரல் 5]

8. ரூ.1.50 இலட்சம் செலவில் மதிப்புக் கூட்டு வரி கண்காணிப்புக் குழுவிற்கு கூட்ட அரங்கம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி அமைத்தல்.

மேற்கண்ட 8 திட்டங்களுக்கும் ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

**மதிப்புக் கூட்டு வரி பற்றிய விளக்கக் குறிப்பு**

49. மதிப்புக் கூட்டு வரி குறித்து ஒரு விளக்கக் குறிப்பு அச்சிடப்பட்டு தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**மக்கள் சாசனம்**

50. 2007-2008 ஆம் ஆண்டிற்கான வணிக வரித் துறை தொடர்பான 'மக்கள் சாசனம்' இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

ஞஞஞ

D
V 24, 3 | P07
P07. 25-2

227654

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.